விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 10 வெள்ளிக்கிழமை (26.07.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 219

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு தரிய நாங்கள், பெறுவிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

அரசியல், இராஜதந்திர, பொருளாதார ரீதியாக

# இலங்கை அரசுக்கு சர்வதேசம் அழுத்தம் கொடுக்க வேண்டும்



## புதிய அரசியலமைப்பு தொடர்பான ஒத்திவைப்பு பிரேரணை விவாதத்தில் சம்பந்தன்

(கொழும்பு)

அரசியல், இராஜதந்திர, பொருளாதார ரீதியாக இலங்கை அரசுக்கு சர்வதேசம் அழுத்தம் கொடுக்க வேண்டுமென இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார். கூட்டமைப்பால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு தொடர்பான ஒத்தி வைப்பு பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

## பிரித்தானியாவுடன் உறவை வலுப்படுத்த இலங்கை ஆர்வம் பிரதமர் ரணில்

(கொழும்பு)

பிரித்தானியாவின் புதிய பிரதமராக போரிஸ் ஜோன்சன் பதவியேற்றுக்கொண்டுள்ள நிலையில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க அவருக்கு வாழ்த்து தெரி 24

## குருநாகல் வைத்தியர் ஷாபி அகமட் பிணையில் விடுதலை

(கொழும்பு)

குருநாகல் வைத்தியர் ஷாபி அகமட் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று குருநாகல் மாவட்ட நீதிமன்றத்தில் நடந்த வழக்கு விசாரணையின் பின்னர், பிணைக் கோரிக்கை தொடர்பில் 24

யாழ். சுண்டுக்குளி பகுதியில் அமைந்துள்ள

## பழமையான வைரவர் ஆலயம் இடித்து அழிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சுண்டுக்குளி பகுதியில் அமைந்திருந்த மிக பழமையான வைரவர்ஆலயமொன்று இடித்து அழிக்கப்பட்டுள்ளதுடன், ஆலயத்திலிருந்த விக்கிரகமும் களவாடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் புதன்கிழமை 23

கூட்டமைப்பினர் கொள்கை ரீதியாக சிந்திப்பவர்கள்

## ஆனால் அடுத்த தேர்தலில் கூட்டமைப்பை சுமந்திரன் ஐ.தே.கவுடன் இணைத்து விடுவார்

### பாராளுமன்றில் டிலான் பெரேரா



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர்கள் கொள்கைரீதியாக சிந்திப்பவர்கள். ஆனால், அடுத்த தேர்தலிலும் அவர்களை ஐக்கிய தேசியக் கட்சியுடன் சுமந்திரன் இணைத்து விடுவார் என தெரிவித்தார் பாராளுமன்ற 24

எதிர்வரும் 6 ஆம் திகதி

## தெரிவுக்குழுவில் முன்னிலையாக ரணிலுக்கு அழைப்பு

(கொழும்பு)

அடுத்த மாதம் 6ஆம் திகதி இடம் பெறவுள்ள பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு விசாரணைகளில் சாட்சியமளிக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச் 24

## குளவி கொட்டியதில் முதியவர் உயிரிழப்பு



### ஊரெழுவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு அம்மன் ஆலயத்தின் மணிக்கூண்டு கோபுரத்தில் இருந்த குளவிக் கூடு கலைந்து குளவிகள் கொட்டியதில் முதியவர் 24

## இஸ்லாமிய பயங்கரவாதம் குறித்து எச்சரிக்கை செய்தேன்

### தெரிவுக்குழுவின் முன் முன்னாள் பொலிஸ்மா அதிபர் இளங்ககோன் சாட்சியம்

(கொழும்பு)

அரசாங்க புலனாய்வு பிரிவு தனது கட்டுப்பாட்டில் இல்லாமல் இருந்தாலும் அதன் பணிப்பாளருக்கு இஸ்லாமிய அடிப் படைவாதம் தொடர்பில் தான் ஆலோசனை வழங்கியதாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் என்.கே.இளங்ககோன் தெரிவித் துள்ளார். 23

## அரசியல் தீர்வு விடயத்தில் தமிழினம் பந்தாடப்படுகின்றது

### சபையில் செல்வம் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசியல் தீர்வு விடயத்தில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் மூன்று பிரிவுகளாக பிரிந்து தமிழினத்தை பந்தாடுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் தெரிவித்தார். புதிய அரசியலமைப்பு குறித்து தமிழ்த் தேசியக் 24

## தகவல் சரியாக பரிமாற்றப்படாததால் ஈஸ்டர் தாக்குதலை தடுக்க முடியவில்லை

### சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் லத்தீப் சாட்சி



(கொழும்பு)

பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் போதியளவு தகவல் கிடைத்தும் ஒருங்கிணைப்பு முறைப்பாடு மற்றும் தகவல் சரியாக பரிமாற்றப் படாததாலேயே ஈஸ்டர் தாக்குதலை தடுக்க முடியவில்லை என பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் கட்டளை அதிகாரி சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் 24

## பயங்கரவாத தாக்குதல் சிங்கப்பூரில் இருவர் கைது

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி ஒருவருடன் தொடர்பு கொண்டிருந்த ஒரு நபர் உட்பட இருவர் சிங்கப்பூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு உள்நாட்டு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் சஹரானின் போதனைகளை இணையம் மூலம் 2011 முதல் இவர் செவிமடுத்தார் என்றும் மத சம்பந்தமான ஆலோசனைகளிற் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்கினாலே ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து செயற்பட முடியும் – மகிந்த அமரவீர

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்த முறைமை நீக்கப்பட்டால் மட்டுமே இனிவரும் காலங்களில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இணைந்து செயற்பட முடியும் என்றும் அவர் கூறினார்.

சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் எந்த ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளர் என்பது முக்கியமல்ல என்றும் நாட்டின் எதிர்கால நலன் கருதி யார் சிறந்த கொள்கைத்திட்டங்களுடன் தேர்தலில் போட்டியிடுகின்றார்களோ அவர்களுக்கே ஆதரவளிக்க வேண்டும் என அவர் கூறினார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் என கூறிய அவர இந்த முறைமை தொடர்ந்தால் அடுத்துவரும் காலங்களில் யார் ஜனாதிபதியானாலும் பிரதமரானாலும், அவர்களுக்கிடையில் எப்போதும் முரண்பாடுகள் ஏற்படும் எனவும் சுட்டிக் காட்டினார். (ம-03)

# கிளி. ஆனந்தபுரத்தில் அதிரடியாக மாதா சொரூபம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில், நயிற்றா நிறுவனத்திற்குப் பின்புறமாக அமைந்துள்ள சந்தியில் மாதாசொரூபமொன்று அதிரடியாக வைக்கப்பட்டுள்ளது.

சைவ மக்கள் வாழ்கின்ற அவ்விடத்தில் ஏற்கனவே சிறு மாதா சொரூபமொன்றை தற்காலிகமாக வைத்திருந்தனர்.

வீதித்திருத்தம் மற்றும் வாய்க்கால் வெட்டுதல் பணிகளுக்காக வேறு இடத்தில் இருந்த சிறிய மாதாசொரூபத்தை அச்சந்தியில் தற்காலிகமாக வைப்பதாக அயலவர்களுக்குக் கூறியவர்கள், இப்போது அதிரடியாக சீமெந்தினால் தூண் அமைத்து நிரந்தரமாக மாதா சொரூபம் அமைத்துள்ளனர்.

இவ்வாறு அமைக்கப்பட்டதன் பின்னணியில் மதக்கலவரத்தை ஏற்படுத்துகின்ற சதித் திட்டங்கள் இருப்பதாகப் பலரும் தெரிவிக்கின்றனர். சொரூபம் அமைப்பது தொடர்பில் கிளிநொச்சி பிரதேச சபையில் எந்தவித அனுமதியும் பெறப்பட வில்லை என பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பில் கிளிநொச்சி பிரதேச சபை உரிய நடவடிக்கை எடுக்குமென அப்பகுதி மக்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (ம-10)

**வைத்திய சேவையும் பராமரிப்பும்**

வயோதிப நோயாளர்களை உங்கள் வீடுகளில் வைத்து பராமரிப்பதில் சிரமப்படுகிறீர்களா? எங்கள் இடத்தில் உரிய முறையில் பராமரிக்கப்படுவர்.

0778730129 (9710)

# மரண அறிவித்தல்



## வீரசிங்கம் ராணிமலர்

வாதரவத்தை புத்தூரைப்பிறப்பிடமாகவும், முல்லையடி பளையை வசிப்பிடமாகவும்கொண்ட அமரர் வீரசிங்கம் ராணிமலர் அவர்கள் 24.07.2019 (புதன்கிழமை) காலமானார். அன்னார் காலஞ்சென்ற நாகமணி - மூத்த பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும் வீரசிங்கத்தின் அன்பு மனைவியும் ஜெயசீலன், ஜெனச்சந்திரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பளைப்பிரதேச செயலகம்), ஜெயராஜ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் துரைசிங்கம், காலஞ்சென்ற ரத்தினமலர், திரவியநாயகம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.07.2019 இன்று பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முல்லையடி
பளை.

(C-7111)

தகவல்:
குடும்பத்தினர்.
(கணவர் பிள்ளைகள்)

# மரண அறிவித்தல்

பிறப்பு
08 - 05 - 1950



இறப்பு
24 - 07 - 2019

## திருமதி இந்திராணி ஐயாத்துரை

யாழ். கரவெட்டி, கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி ஐயாத்துரை அவர்கள் கடந்த புதன்கிழமை (2019.07.24) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி- பசுபதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் வேலுப்பிள்ளை ஐயாத்துரை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் பரமேஸ்வரி அவர்களின் சகோதரியும் பிரதீபன் (லண்டன்), ஜெயதீபன்(லண்டன்), ஜெயபிரபா (லண்டன்), குலதீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தவசோபனா (லண்டன்), நிஷாந்தினி (லண்டன்), சிறீகாந்தன் (லண்டன்), காலஞ்சென்ற பிருந்தா (தாதிய உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திவிக்கா, ரெஷ்னா, ரெசிக்கா, தனுஜன், ஆருஜன், தசானா, சுஜீவன் (லண்டன்), குயின்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சனிக்கிழமை (2019.07.27) அன்று காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரணவாய் தெற்கு, பூவரசந்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஜெயபவனம்
கரணவாய் தெற்கு
கரவெட்டி.


(C7104)

தகவல்:
குடும்பத்தினர்.
0777229208

# 24.07.2019 அன்று வெளியான தரம்-5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாளுக்கான விடைகள்

பகுதி–IIவிடைகள்

1. (i)நுண்ணுயிர்கள் (ii)விசர்நாய்க்கடி (iii)உலகம்
 (iv)அரிது (v)விஞ்ஞானி
2. (i)வியர்வை (ii)பாரபட்சமாக
3. (i)மலர்ந்தன (ii)ஓடும் (iii)தொடங்கியது
4. (i)உதவுதல் (ii)பொய்யன்
5. (i)பசுக்கள் புல் மேய்ந்தன (ii) நான் தினமும் தண்ணீர் குடிப்பேன்
6. மாந்தர் உடன் பிறந்தவர் போல்
7. நன்றாய் உறங்குதல் வேண்டும்
8. நாற்று
9. வேட்பாளர்
10. பாதையில் குரங்கு மான் சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.
11. பக்கம்
12. (i)கடல் (ii)வைத்தியசாலை
13. (i) Pumpkin (ii)Rabbit
14. (i)This is my school (ii)I will clean the black board
15. (i)விளையாட்டு மைதானம் (iii)வாசிகினிய கொவேரத தியன்னே?
16. 69097
17. 2478
18. 3278
19. (i) (ii)7/10




20. 6kg 350g
21. (i)90.00 500g (ii)அ)1030.00 ஆ)470.00
22. 470.00 23. 312 24.17.500 25.102
26. (i)6 செங்கோணம் (ii)14m
27. 06.15




28. 45km
29. (i)கோப்பி 7 பேர் (வரைபு)
 (ii)40 பேர் (iii)கோப்பி

| | | | |
|---|---|---|---|
| 30.1 | 38.1 | 46.2 | 54.3 |
| 31.1 | 39.1 | 47.3 | 55.2 |
| 32.4 | 40.3 | 48.3 | 56.1 |
| 33.2 | 41.2 | 49.4 | 57.2 |
| 34.3 | 42.3 | 50.2 | 55.3 |
| 35.3 | 43.4 | 51.1 | 59.3 |
| 36.3 | 44.4 | 52.2 | 60. பொருத்தமான வசனம் |
| 37.1 | 45.3 | 53.2 | |

# பயங்கரவாதம் உருவாகக் காரணமாகவுள்ள அடிப்படை காரணிகளை அறிவதே மிக அவசியம்!



## கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் தெரிவிப்பு

(ஏறாவூர்)

பயங்கரவாதக்குழுக்கள் உருவாகுவதை தடுக்கும் சட்டங்களை இயற்ற அமைச்சர்களைக் கொண்ட உபகுழு ஒன்றை அமைக்கும் பிரதமரின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. உண்மையான பயங்கரவாத நடவடிக்கைகள் எவை என்பதை சரியான முறையில் இனங்கண்டு அவற்றை முற்றாக இல்லாமல் செய்ய வேண்டியது அவசியமானதே.

எனினும், நாட்டில் இன்று இன, மதவாத சக்திகள் தத்தமது பிரபலங்களுக்காகவும் பரப்புரைகளுக்காகவும் இட்டுக்கட்டி வெளியிடும் போலியான தகவல்கள் தொடர்பில் பரிசீலிப்பதும் அவசியமானது.

ஏனெனில், இவை பயங்கரவாதக் குழுக்களைத் தோற்றுவிக்கச் செய்யும் வலிமை கொண்டவை என்பதையும் இவற்றை முதலில் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதையும் பிரதமரும் அரசும் புரிந்து கொள்ள வேண்டும் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்த அவரது செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கையில்,

சமகாலத்தில் நாட்டில் ஏற்பட்ட பாரதூரமான நிகழ்வுகளே இவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிலைமையை அரசுக்கு ஏற்படுத்தியுள்ளன.

இதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்த நாட்டில் வாழுகின்ற அனைத்து சமூகங்களும் தமது பூரண உதவி ஒத்துழைப்புக்களை நல்க வேண்டும்.

அதேநேரம் பயங்கரவாதக் குழுக்கள் தோற்றம் பெறுவதற்கு உந்துசக்திகளாக இருக்கக்கூடிய விடயங்கள் எவை எவை என்பன குறித்து ஆய்வு செய்ய வேண்டும்.

சமூகங்கள் அடக்கி ஒடுக்கப்படும்போதும் அவற்றின் மேல் வல்லாதிக்கம் திணிக்கப்படும் போதும் உண்மைகளுக்குப் புறம்பான தகவல்கள் பரப்புரைகளாக்கப்பட்டு அவை அவர்களின் இருப்புக்கும் - தனித்துவத்துக்கும் குந்தகத்தை ஏற்படுத்தும் நிலைகள் தோன்றுகின்றபோதும் பயங்கரவாத நடவடிக்கைகளை நோக்கிய எண்ணங்களும் செயற்பாடுகளும் உருவாக்கம் பெறுகின்றன என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, பயங்கரவாதக் குழுக்கள் உருவாகுவதைத் தடுப்பதற்கு - முதலில் அவை உருவாக்கம் பெறுவதற்கான காரணிகள் எவை என்பதை அறிய வேண்டும்.

இந்தக் காரணிகள் குறித்து நம்நாட்டை ஆண்டுவந்த அரசுகள் சரிவர அறிந்து செயற்பட்டனவா என்பதே இன்று சிறுபான்மை சமூகங்களுக்கு மத்தியிலுள்ள இருக்கின்ற கேள்வியாகும். காரணம் தொடர்ந்தும் சிறுபான்மைச் சமூகங்கள் இன, மதவாதங்களால் நசுக்கப்பட்டு வருகின்றமையே கண்கூடு.

எனவே, அடிப்படைகளை அறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை இவ்வேளையில் வலியுறுத்த விரும்புகின்றேன் என மேலும் தெரிவித்தார்.(7-9)

## 385 கிலோ பீடி இலைகள் மீட்பு



(மன்னார்)

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி ஓலைத்தொடுவாய் கடற்கரை பகுதியில் இருந்து ஒரு தொகுதி பீடி சுற்றும் இலைகளை நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட ஊழல் ஒழிப்பு பிரிவு பொலிஸார் மீட்டுள்ளதோடு. சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

ஓலைத் தொடுவாய் பகுதியில் உள்ள காட்டுப்பகுதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 12 மூடைகளைக் கொண்ட 385 கிலோ கிராம் எடை கொண்ட பீடி சுற்றும் இலைகளை மன்னார் மாவட்ட ஊழல் ஒழிப்பு பிரிவு பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பீடி சுற்றும் இலைகளைக்கொண்ட பொதிகள் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் குறித்த பொதிகள் யாழ்.சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட ஊழல் ஒழிப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(9-285)

## ஒய்வூதியத்தை 43 சதவீதத்தால் அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

அனைத்து ஓய்வூதியர்களினதும் ஓய்வூதியத்தை குறைந்தபட்சம் 43 சதவீதத்தால் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கம்பனிகள் திருத்த சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் தொடர்பிலான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். ஓய்வூதியம் நிறுத்தப்படவோ அல்லது குறைக்கப்படவோ இல்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (7-9)

## அரசியல் கைதிகள் விடயத்தை அரசியல் ரீதியாக தீர்க்க வேண்டும்-அமைச்சர் மனோ

(கொழும்பு)

அமைச்சரவையில் தீர்மானம் ஒன்றை கொண்டு வருவதன் மூலம் மட்டுமே அடுத்த நிமிடம் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என தான் கூறவில்லை என தெரிவித்த அமைச்சர் மனோ கணேசன் சட்ட ரீதியாக தமிழ் கைதிகளை முழுமையாக விடுவிக்க முடியாது போயுள்ளதனாலேயே அரசியல் ரீதியாக தீர்க்க முயல்கிறேன் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசியல் கைதிகளை விடுவிக்க அமைச்சரவைப் பத்திரத்தால் மட்டும் முடியாது என்று ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா கருத்து வெளியிட்டிருந்தார். அதற்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அமைச்சரவை பத்திரம் தொடர்பாக தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளை தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா கருத்துக் கூறியிருப்பது கவலைக்குரியதாகும்.

அமைச்சரவையில் தீர்மானம் ஒன்றைகொண்டுவருவதன்மூலம் மட்டுமே அடுத்த நிமிடம் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று நான் கூறவே இல்லையே? - இப்படி நினைப்பதே குழந்தைத்தனமான சிந்தனையாகும்.

அமைச்சரவை பத்திரம் என்பது, சில யோசனைகளை தெரிவித்து அவை தொடர்பான தீர்மானங்களை எடுக்கும்படி அமைச்சரவையை கோரும். பொது மன்னிப்பு, சட்டமா அதிபர் வழக்குகளை மீளப்பெறல் அல்லது பிணை வழங்குதல், பொலிஸ் வழக்குகளை மீளப்பெறல், புனர்வாழ்வளித்தல் போன்ற பல்வேறு யோசனைகளை பரிசீலிக்கும்படியான தீர்மானங்களை எடுக்கும்படி ஜனாதிபதி உட்பட துறைசார் அமைச்சர்களை, சட்டமா அதிபரை இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் கோரும்.

அடுத்தது, ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்களை கொண்ட அமைச்சரவைதான் இந்நாட்டின் அதியுயர் அரசியல் அதிகார பீடமாகும். இங்கே எடுக்கப்படும் தீர்மானங்கள் அரசியல் அதிகார தீர்மானங்களாகும்.

இதைவிட வேறு ஒரு அரசியல் பீடத்தை நோக்கி நாம் ஓட வேண்டியதில்லை.

எது எப்படி இருந்தாலும் சட்ட வழியில், தமிழ் கைதிகளை முழுமையாக விடுவிக்க முடியாது போயுள்ளது. இந்தக் காரணத்தினாலேயே இன்று இந்த பிரச்சினை எரியும் பிரச்சினையாக மாறியுள்ளது.

ஆகவேதான் இதை அரசியல் ரீதியாக தீர்க்க முயல்கிறேன். அமைச்சரவை ஒரு நீதிமன்றம் அல்ல என்பதை அனைவரும் மனதில் கொள்ள வேண்டும். நீதிமன்றத்தில் கிடைக்காத முழுமையான தீர்வை மக்கள் மன்றத்தில் காண நான் முயல்கிறேன்.

எனது அமைச்சரவை பத்திரம் மூலம் இந்த பிரச்சினை தேசிய அரங்குக்கு வரும். அதன் மூலம் தீர்வை நோக்கி நகரும். இலங்கை வரலாற்றில் முதன் முறையாக இந்த பிரச்சினை அமைச்சரவைக்கு போகின்றது.

எடுத்த எடுப்பிலேயே இதில் குறை கண்டு, பிழை தேடி, முயற்சியை முடமாக்கி விடாதீர்கள். ஆகவேதான் எனக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி அனைத்து கட்சிகளையும் நான் கோரியுள்ளேன்" என தெரிவித்துள்ளார். (7-9)

## யாழ்.போதனாவில் குவைத் செம்பிறை மீள்வாழ்வு சிகிச்சை நிலையம் திறந்து வைப்பு





(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் குவைத் செம்பிறை மீள்வாழ்வு சிகிச்சை நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தலைமையில், நேற்றுக்காலை யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சம்பிரதாயபூர்வமாக சுகாதார மற்றும் சுதேச போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் குவைத் நாட்டின், இலங்கைக்கான தூதுவர் ஆகியோர் இணைந்து மேற்படி நிலையத்தை திறந்து வைத்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலின் கீழ், குவைத் நாட்டின் மக்களினால் நன்கொடையாக வழங்கப்பட்ட 530 மில்லியன் ரூபா நிதியில் கடந்த வருடம் ஜூலை மாதம் இக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

சுமார் 11 மாதங்களில், புதிய செம்பிறை மீள்வாழ்வு சிகிச்சை நிலையத்திற்கான 3 மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டது.

குவைத் நாட்டின் செம்பிறை சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி ஹிலால் முசேட் அல் சேயரினால், சுகாதார மற்றும் சுதேச போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் கையளிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. வடமாகாணத்தில் இடம் பெற்ற யுத்தத்தின் பின்னர், யாழ்.போதனா வைத்தியசாலையில் இந்த செம்பிறை மீள் வாழ்வுச் சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் எந்த மாவட்டத்திலும் இல்லாத அதி சிறந்த சிகிச்சை முறைகளுடன், இந்த செம்பிறை மீள்வாழ்வுச் சிகிச்சை நிலையம் யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் உட்பட யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள், குவைத் நாட்டின் அதிகாரிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (9-101)

# இளமை எனும் பூங்காற்று...


விராட் ஹோலி

## வியக்கும் விராட் ஹோலி

"இளம் வீரர்களின் அசத்தலான திறமை, தன்னம்பிக்கை வியக்க வைக்கிறது. எங்களது 19-20 வயதில் தற்போதுள்ள வீரர்களின் பாதியளவு திறமை கூட இருந்தது கிடையாது," என அணித் தலைவர் விராத் ஹோலி தெரிவித்தார்.

**எம்மதமும் சம்மதம்**

ஹோலி கூறுகையில், "நான் எந்த மதத்திற்கும் கட்டுப்பட்டவன் அல்ல. அனைத்து மதங்களையும், மக்களையும் ஏற்றுக் கொள்வேன். எனக்கு எம்மதமும் சம்மதமே. இங்கு எல்லோரும் ஆன்மிக வாதிகள் தான். நாம் எல்லோரும் ஒரே குலம் தான்," என்றார்.

இங்கிலாந்தில் நடந்த உலக கிண்ண தொடரில் இந்திய அணி எப்படியும் சாதிக்கும் என நம்பப்பட்டது. இதற்கேற்ப லீக் சுற்றில் 9 போட்டிகளில் 7 வெற்றி பெற்று புள்ளிப் பட்டியலில் 'நம்பர்-1' ஆனது. அடுத்து, மழை காரணமாக இரண்டு நாட்கள் நடந்த அரையிறுதியில் இந்திய அணி, நியூசிலாந்திடம் தோற்று திரும்பியது.

இந்திய அணி, இளம் வீரர்கள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து அணித் தலைவர் ஹோலி கூறியதாவது,

எனக்குத் தெரிந்தது எல்லாம் கடின உழைப்பு மட்டும் தான். மற்ற அனைவரையும் விட, கடினமாக உழைக்கும் திறன் என்னிடம் உண்டு. நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்த ஏற்கெனவே விளையாடியதைப் போல மீண்டும் மீண்டும் சிறப்பாக விளையாட வேண்டும். இது சற்று சோர்வாக இருக்கும். தவிர கடினமானதும் கூட.

**தோல்விப் பாடம்**

எனது வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்விகள், பின்னடைவுகளில் இருந்து நிறைய கற்றுக் கொண்டேன். எனது வீழ்ச்சி தான் தற்போதைய வெற்றிக்கு காரணமாகவும், சிறந்த மனிதராக மாற்ற உதவியது. வெற்றியை விட சிக்கலான காலங்கள் குறித்த முக்கியத்துவத்தை எனக்கு உணரச் செய்தது. அடுத்து என்ன தேவை என சரியாக திட்டமிட கைகொடுத்தது.

அதேபோல கடினமான நேரத்தில் உடன் இருப்பவர்கள் யார், புறக்கணிப்பவர்கள் யார் என்பதை அறிந்து கொள்ளவும், நமது குணத்தை சரியாக மேம்படுத்தவும் உதவியது. நம்பிக்கையை மட்டும் இழந்து விடக் கூடாது.

**திடீர் தோல்வி**

உலகக் கிண்ணத் தொடரில் அனைத்து வீரர்களும் சிறப்பாக விளையாடினர், பெரியளவில் எவ்வித தவறுகளும் செய்யவில்லை. திடீரென வேறு ஒருவர் நம்மை விட சிறப்பாக செயற்படுகின்றனர் என்றால் அதை ஜீரணிப்பது பெரும் சிரமம்.

தற்போது போட்டியை வென்று தரக் கூடிய அளவுக்கு இந்திய அணியில் பலர்

**காரணம் என்ன**

ஐ.பி.எல்., போன்ற தொடர்களால் இளம் வீரர்களின் திறமை மெருகேறி வருகிறது. ஆயிரக் கணக்கான ரசிகர்களுக்கு முன் ஏற்கெனவே விளையாடுவதால், தங்களது தவறுகளில் இருந்துஎளிதாகபாடம்கற்றுக் கொள்கின்றனர். சர்வதேச அரங்கிற்கு மிகுந்த தன்னம்பிக்கையுடன் வருகின்றனர்.

அதேநேரம், இத்தொடர்களை 'தேசத்திற்காக சிறப்பாக விளையாட பயன்படுத்திக் கொள்வேன்,' என்ற எண்ணம் இருக்க வேண்டும். இந்திய இளம் வீரர்கள் இப்படித் தான் இருப்பர் என நினைக்கிறேன்.

வந்துள்ளனர். இதற்கு முன் இதுபோல இருந்தது கிடையாது. இளம் வீரர்களான இவர்களது அசத்தலான திறமை, தன்னம்பிக்கை வியக்க வைக்கிறது. எங்களது 19 - 20 வயதில் தற்போதுள்ள வீரர்களின் பாதியளவு திறமை கூட இருந்தது கிடையாது.

டெஸ்ட் போட்டிகளை தொடர்ந்து பிரபலப் படுத்த, டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடர் நடத்தப்பட உள்ளது வரவேற்கத்தக்கது.

**மீண்டும் வேண்டாம்**

ஹோலி கூறுகையில்,"இளம் வீரர்கள் ஆரம்பத்தில் தவறு செய்வதால், கிரிக்கெட் வாழ்க்கையில் 2 அல்லது 3 ஆண்டுகளை இழக்க வேண்டிய சூழல் ஏற்படும். இதை விரும்ப மாட்டேன். ஏனெனில் நானும் தவறுகள் செய்து, பிறகு விரைவில் சரிசெய்தேன். அதே தவறுகளை நீங்களும் செய்ய வேண்டாம் என 'அட்வைஸ்' செய்வேன். உடனடியாக திருத்திக் கொள்ளவில்லை என்றால் பிறகு வருத்தப்பட நேரிடும் என்பேன்," என்றார்.

## மெஸ்சிக்கு தடை


லியனல் மெஸ்சி

ஆர்ஜென்ரீன கால்பந்து வீரர் மெஸ்சிக்கு ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் பிரேசிலில் நடந்த கோபா அமெ ரிக்கா கால்பந்து தொடரில் பிரேசில் அணி கிண்ணம் வென்றது. இத்தொடரில் ஊழல் நடந்திருப்பதாகவும், பிரேசில் அணி சம்பியன் பட்டம் வெல்வதற்காகவே நடத்தப்பட்டதாகவும் புகார் தெரிவித்தார்.

பின், தனது சர்ச்சை கருத்துக்கு மன்னிப்பு கேட்டார். தவிர இவர், 3வது இடத்துக்கான போட்டியில் சிலி வீரர் கேரி மெடலிடம் மோதல் போக்கில் ஈடுபட்டதால் 'ரெட் கார்ட்' பெற்றார்.

இதுகுறித்து விசாரித்த தென் அமெரிக்க கால்பந்து கூட்டமைப்பு, மெஸ்சிக்கு ஒரு போட்டியில் விளையாட தடை மற்றும் ரூ. ஒரு லட்சம் அபராதம் விதித்தது. இதனால் இவர், வரும் 2022ல் நடக்கவுள்ள 'பிபா' உலக கிண்ணத் தொடரின், தென் அமெரிக்க அணிகளுக்கு இடையிலான தகுதிச் சுற்றின் முதல் போட்டியில் விளையாடமாட்டார்.

## மீண்டெழுந்தது இங்கிலாந்து


இங்கிலாந்தின் லீச்

அயர்லாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் ஜாக் லீச், ஜேசன் அரை சதம் அடிக்க இங்கிலாந்து அணி முன்னிலை பெற்றது.

இங்கிலாந்து, அயர்லாந்து அணிகள் மோதும் ஒரு டெஸ்ட் போட்டி லண்டனில் லோர்டஸில் நடக்கிறது. முதல் இன்னிங்சில்இங்கிலாந்து அணி 85 ஓட்டங்களுக்கு சகல விக் கெட்டுக்களையும் இழந்தது. அயர் லாந்து அணி முதல் இன்னிங்சில் 207 ஓட்டங்கள் எடுத்தது. மு்தல் நாள் ஆட்ட நேர முடிவில், இங்கி லாந்து இரண்டாவது இன் னிங் சில் விக்கெட் இழப்பின்றி ஓட்டங்கள் எடுக்காமல் இருந் தது. ஜாக் லீச (0), ரோரி போர ன்ஸ் (0) ஆட்டமிக்காமல் இருந் தனர்.

**ஜாக் லீச் அசத்தல்**

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் நடந்தது. இங்கிலாந்து அணிக்கு போர்ன்ஸ் (6) ஏமாற்றினார். பின், இணைந்த 'நைட் வோட்ச்மேன்' ஜாக் லீச், ஜேசன் ரோய் ஜோடி சிறப்பாக விளையாடியது. அறிமுக டெஸ்டில் களமிறங்கிய ஜேசன், துணிச்சலாக செயற்பட் டார். இருவரும் டெஸ்ட் அரங்கில் முதல் அரைச்சதம் அடித்தனர். இரண்டாவது விக்கெட்டுக்காக 145 ஓட்டங்கள் சேர்த்த போது, ஜேசன் (72) ஆட்டமிழந்தார். ஜாக் லீச் (92) சத வாய் ப்பை பறி கொடுத்தார். டென்லி (10), பேர்ஸ்டோவ் (0) ஏமாற்றினர். அணித் தலைவர் ஜோ ரூட் 31 ஓட்டங்கள் எடுத்தார். ரான் கின் பந்தில் மொயீன் அலி (9) ஆட்டமிழந்தார்.

நேற்றைய 2ஆம் நாளாட்டம் நிறை வுக்கு வந்தபோது இங்கி லாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 9 விக்கெட்டுக்களை இழந்து 302 ஓட்டங்கள் எடுத்து. 180 ஓட்டங் களால் முன்னிலை பெற்றிருந்தது. பிரோட் (21), ஸ்டோன் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

## விடைபெறுகிறார் மலிங்க

### இன்று இறுதி ஒரு நாள் போட்டி



கிண்ண அறிமுக நிகழ்வில் இலங்கை அணித் தலைவர் கருணாரத்ன (இடது) பங்களாதேஷ் அணித் தலைவர் தமீம் இக்பால்

பங்களாதேஷ் அணிக்கு எதிரான இன்றைய முதல் ஒரு நாள் போட்டியுடன், சர்வதேச ஒரு நாள் அரங்கில் இருந்து விடைபெறுகிறார் இலங்கை அணியின் மலிங்க.

இலங்கை சென்றுள்ள பங்களாதேஷ் அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி இன்று கொழும்பில் நடக்கவுள்ளது.

இப்போட்டியுடன் இலங்கை அணி வேகப்பந்துவீச்சாளர் மலிங்க (வயது-35), ஒரு நாள் அரங்கில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

இலங்கை அணி சார்பில் அதிக விக்கெட் வீழ்த்திய பந்துவீச்சாளர்கள் பட்டியலில் 3ஆவது இடத்தில் (225 போட்டி, 335 விக்.,) உள்ளார். இன்று மூன்று விக்கெட் வீழ்த்தினால், ஒரு நாள் அரங்கில் அதிக விக்கெட் சாய்த்த பந்துவீச்சாளர்களில் இந்தியாவின் கும்ளேயை (337) முந்தி 9வது இடம் பிடிக்கலாம்.

சமீபத்திய உலக கிண்ணத் தொடரில் 7 போட்டிகளில் 13 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மலிங்கவை வெற்றியுடன் வழியனுப்ப இலங்கை அணி வீரர்கள் காத்திருக்கின்றனர்.

அணித் தலைவர் திமுத் கருணாரத்ன ஏமாற்றினாலும், அவிஷ்க, குசல் பெரேரா நம்பிக்கை அளிக்கின்றனர். டிக்வெல, திசர பெரேரா உள்ளிட்டோரின் பங்களிப்பு கிடைத்தால் வெற்றிக்கு முயற்சிக்கலாம்.

பங்களாதேஷ் அணி வழமையான அணித் தலைவர் மொர்டசா (காயம்), சாகிப் அல் ஹசன் (தொடரில் ஓய்வு) இல்லாமல் களமிறங்குகிறது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தமிம் இக்பால் தலைமையில் மிதுன், மகமதுல்லா, அனுபவ வீரர் முஷ்பிகுர் இருப்பதால் ஓட்டம் குவிக்க வாய்ப்புள்ளது. 'வேகத்தில்' முஸ்தபிஜுர் பலம் சேர்ப்பதால், இலங்கை மண்ணில் முதல் முறையாக ஒரு நாள் தொடரை வெல்லும் முனைப்பில் பங்களாதேஷ் உள்ளது.

# சிறுபோகத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடாக 55 கோடிரூபா நிதி ஒதுக்கீடு

## ஹரிசன் தெரிவிப்பு



(கொழும்பு)

சிறுபோகத்தின்போது 2018 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடாக 55 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக விவசாயம், மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்தார்.

இழப்பீடு வழங்கும் செயற்திட்டம் ஒகஸ்ட் மாதம் 2ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அன்றைய தினம் முதற்கட்டமாக அநுராதபுரம் மாவட்டத்தில் 2750 விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்காக 7.5 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு சிறுபோகத்தில் ஏற்பட்ட வரட்சி உள்ளிட்ட இயற்கை அனர்த்தத்தால் நாடு முழுவதிலும் 23,605 ஏக்கர் பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்பட்டன.


இதற்கிணங்க 20 ஆயிரத்து 113 விவசாயிகளுக்காக 556 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட தொகையை நாம் நட்ட ஈடாக வழங்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# வைத்தியர் ஷாபிக்கு எதிராக குருநாகலில் ஆர்ப்பாட்டம்

(குருநாகல)

குருநாகல் வைத்தியசாலை வைத்தியர் ஷாபிக்கு எதிராக குருநாகல் நீதிமன்றம் அமைந்துள்ள பகுதியில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குருநாகல் வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்தியரான சியாப்தின் மொஹமட் ஷாபி, வருமானத்தை மீறி சொத்து சேர்த்தமை மற்றும் சட்டவிரோத கருத்தடை விவகார குற்றச்சாட்டுக்களின் கீழ் கைதுசெய்யப்பட்டு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றார்.



இந்நிலையில் குறித்த வைத்தியர் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று குருநாகல் நீதிமன்றில் இடம்பெற்ற நிலையில் அந்தப் பகுதியில் மக்களால் அமைதியான முறையில். ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 46 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு சுதந்திரவருகை நுழைவு விசா

(கொழும்பு)

இந்தியா, சீனா உள்ளிட்ட 46 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு சுதந்திர வருகை நுழைவு விசா வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டம் ஒகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்று நேற்றுமுன்தினம் புதன் கிழமை அமைச்சரவையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை, 39 நாடுகளுக்கு கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. எனினும், உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களை அடுத்து குறித்த திட்டம் இடைநிறுத்தப்பட்டது. ஏற்கனவே, இந்தத் திட்டத்திற்குள் இந்தியா, சீனா ஆகிய நாடுகள் உள்வாங்கப்பட்டிருக் வில்லை. எனினும், தற்போது இந்தியா, சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாகத் அரசாங்கத் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் பிரித்தானியா, தாய்லாந்து, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, தென்கொரியா, கனடா, சிங்கப்பூர், நியூசிலாந்து, மலேசியா, சுவிட்ஸர்லாந்து, கம்போடியா ஆகிய நாடுகளிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சுதந்திர விசா வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை அடுத்து இலங்கைக்கு விடுக்கப்பட்டிருந்த பயணத் தடைகளை, ஏனைய நாடுகள் விலக்கிக் கொண்டிருந்தாலும், ரஷ்யா மட்டும் அதனை இன்னமும் நடைமுறையில் வைத்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையில், சுதந்திர வருகை நுழைவு விசா வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர், ரஷ்யாவும் இலங்கைக்கான பயணத்தடையை விரைவில் விலக்கிக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)



கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல கலை, கலாசார நிகழ்வுகளுக்கு முன்னோட்ட தொடக்க நிகழ்வாக கடந்த 21 ஆம் திகதி இரத்ததான நிகழ்வு நடைபெற்றது.

# அலி ரொஷான் உள்ளிட்ட எண்மருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

அலி ரொஷான் உள்ளிட்ட எட்டுப் பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நிரந்தர நீதாய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சட்ட விரோதமாக யானை கடத்தலில் ஈடுபட்ட அலி ரொஷான் என அறியப்படும் நிராஜ் ரொஷான் உள்ளிட்ட எட்டுப் பேரையும் வழக்கு விசாரணை முடியும் வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நிரந்தர நீதாய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# இராசி பலன்

**மீனம்:** இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு, வருமாணம் திருப்தி தரும்.

**மேடம்:** உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**இடபம்:** நண்பர்களின் சந்திப்பால் திடீர் விரயங்கள் ஏற்படலாம், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

| | | | |
|---|---|---|---|
| | சந் | | புத, ராகு |
| | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் | | சூரி, சுக், செவ் |
| | | | |
| சனி, கேது | குரு | | |

**26.07.2019**

ஆடி 10, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு

நவமி பிற்பகல் 4.31 மணிவரை

பரணி பிற்பகல் 4.25 மணிவரை

சுபநேரம் 6.02-7.32 மணிவரை

இராகுகாலம் 10.32-12.02 மணிவரை

கார்த்திகைவிரதம்,

வளவன்

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், செய்தொழில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மகரம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், அதிர்ஷ்டகரமான வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம்.

**சிம்மம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**தனுசு:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** பொது வாழ்வில் புகழ்கூடும் நாள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், பயணங்களின் போது கவனம் தேவை.

# டிப்ளோமாதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகத் தேர்வும் பிரயோகப் பரீட்சையும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1 (அ) தரம், 3 ஆம் வகுப்பு 1 (இ) தரம் மற்றும் வடக்கு மாகாண சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1 (இ) தரம் ஆகியவற்றில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2019 இற்கு விண்ணப்பித்தவர்களில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்திற்கு விண்ணப்பித்தவர்கள் என வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் இனங்காணப்பட்டு எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட பட்டியலில் உள்ள 88 விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகத் தேர்வுடன் இணைந்த பிரயோகப் பரீட்சை எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 15 ஆம் திகதி வியாழக்கிழமைகளில் காலை 9 மணி முதல் செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வடமாகாண கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது.

மேற்குறித்த நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் அனைவரும் அன்றைய தினம் தவறாது சமுகமளிக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

செயலாளர் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட பட்டியலில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகத் தேர்வு அழைப்புக் கடிதம் அவர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேர்முகத்தேர்வில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள், பிரயோகப்பரீட்சைக்கு தயார் படுத்த வேண்டிய விடயப்பரப்புக்கள், நேர்முகத்தேர்விற்கு சமுகமளிக்க வேண்டிய திகதி மற்றும் நேரம் என்பனவும் நேர்முகத் தேர்வு அழைப்புக் கடிதத்துடன் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனினும் அவ் விபரங்களை வடமாகாண சபை இணையத் தளம் www.np.gov.lk மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் இணையத்தளம் www.edumin.np.gov.lk எனும் முகவரியிலும் பார்வையிட முடியும். (5)

# பேரா.கண்ணதாசனுக்கு கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செல்வம் கண்ணதாசன், பேராசிரியராக பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நாளை 27 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சுழிபுரம் மேற்கு பாரதி கலைமன்ற சுப்பையா அரங்கில் ஓய்வு நிலை அதிபர் பிரம்மஸ்ரீ வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சுழிபுரம் கௌரவிப்பு அமையத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கன் கலந்துகொள்வார். (5)

# நேர்முகத் தேர்வு பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவியணிகளுக்கான நேர்முகத் தேர்வு பிற்போடப்பட்டுள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவிருந்த அட்டவணைப்படுத்தப்படாத பதவியணிகளுக்கான நேர்முகத் தேர்வானது தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது எனவும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் நேர்முகத்தேர்வானது எதுவித மாற்றமுமின்றி இடம்பெறும் எனவும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் யுகராஜா ஜெலீபன் அறிவித்துள்ளார். (5)

# முன்பள்ளி விளையாட்டு விழா




(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் அறிவொளி முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா நாளை 27 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யா/வண். ஸ்ரீவைத்திலிங்கம் வித்தியாலய மைதானத்தில் சனசமூக நிலையத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை அதிபர் ந.கந்தவனச்செல்வன், சிறப்பு விருந்தினர்களாக அரச சார்பற்ற நிறுவன சுயாதீன ஆலோசகர் க.கபிலன், யாழ். மாநகர வட்டார உறுப்பினர் எம்.எம்.எம். நிபாஹிர், யாழ். மாநகரசபை உறுப்பினர் திருமதி நா.ஜெயந்தினி, ஜே/99 கிராம உத்தியோகத்தர் திருமதி சோ.பகிரதன், யாழ்.கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் ஜெகதாரணி சத்தியசீலன், வேலணை மத்திய கல்லூரி ஆசிரியர் திருமதி.து.சசிகலா, ஜே/88 புதிய சோனக தெரு, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.த.சுபைதா ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# வலி.கிழக்குப் பிரதேச சபையில் கறுப்பு ஜூலை அனுஷ்டிப்பு



**வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நேற்று வியாழக்கிழமை காலை அனுஷ்டிக்கப்பட்டது. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை வளாகத்தில் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் சபையின் உறுப்பினர்கள், செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். 1983ஆம்ஆண்டு இதே நாளில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் படு கொலை செய்யப்பட்ட போராட்ட முன்னோடிகளான தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் உள்ளிட்ட 53 அரசியல் கைதிகள் மற்றும் அவ் இனக்கலவரத்தில் உயிர்நீத்த பொதுமக்கள் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. (5)**

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மழலைகள் பூங்காவில் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணிக்கு முன்பள்ளி அமைப்புக்குழுத் தலைவர் ஆர்.சேதுநாதன் தலைமையில் முன்பள்ளி அரங்கத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் எஸ். பவானந்தராஜா பிரதம விருந்தினராகவும் கணக்காளர் (U.K) என்.ஞானமுரளி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் ஆசியுரையை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ் தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்குவார்.(5)

# முறைப்பாட்டுப் பெட்டி வைக்குமாறு நகரசபை உறுப்பினர் வலியுறுத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை, நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட நூலகங்கள் மற்றும் நகரசபை மண்டபம் ஆகியவற்றில் முறைப்பாட்டுப் பெட்டி வைக்கப்பட வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதன் வலியுறுத்தியுள்ளார். அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

சாவகச்சேரி நகரசபை அலுவலகம், சாவகச்சேரி, நுணாவில் மற்றும் மீசாலை பொது நூலகங்கள் , சாவகச்சேரி நகர சபையின் பொன்விழா மண்டபம் ஆகியவற்றில் முறைப்பாட்டுப் பெட்டி வைக்கப்பட வேண்டும் எனவும் குறித்த முறைப்பாட்டுப் பெட்டியில் நூலகத்தில் உள்ள குறைபாடுகள் மற்றும் ஊழியர்களின் தவறுகள் தொடர்பாக பொதுமக்கள் முறையிட முடியும் எனவும் மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-30)

# சர்வதேச கூட்டுறவு தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சமூக அபிவி ருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத் தும் 97 ஆவது சர்வதேச கூட்டு றவு தினவிழா நாளை சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கக் காரியாலய மண்டபத்தில் பி.ஏ.சி.குணேந்திரன் (சமூக அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம்) தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் யாழ்ப்பாணம் கூட்டுறவுத் திணைக்கள அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.ஹஸ்ஸானா பிரதம விருந்தினராகவும் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்க சமாச தலைவரும் ஓய்வுநிலை கூட் டுறவு அபிவிருத்தி உதவி ஆணை யாளருமான வி.கே. அருந்தவ நாதன் கௌரவ விருந்தினராகவும் நல்லூர் பிரதேச செயலக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு மதி.தாமினி ரஜிவன், யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிரு த்தி உத்தியோகத்தர் ச.பிறேமிலன் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (5)

# பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கல்வளை வீதி சண்டிலிப்பாய், காளி கோவிலடியைச் சேர்ந்த அமரர் சி.செல்வநேசனின் 12 ஆவது ஞாபகார்த்தமாக நடத்தப் படும் "கல்வியால் எழுவோம்" பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களை வாழ்த்தும் விழா எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு சண்டிலிப்பாய் காளி கோவிலடியில் சோ.விஜயசேகரம் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராக ஓய்வு நிலை கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக ஜே/142 கிராம உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீரங்கநாதன், வலி.தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர்கள் லோ.றமணன், எஸ். அனுஷன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வில் 2019 ஆம் ஆண்டு கிராமத்திலிருந்து பல்க லைக்கழகத்திற்கு தெரிவாகிய ஜெ.மேனுஷா, த.திவ்யா, த.தனு ரேகா ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (5)



**கோப்பாய் பிரதேச சர்வோதய தேசோதய சபை, சிறுப்பிட்டி சமுர்த்தி சங்கம் இணைந்து நீர்வேலி கரந்தன் கேணியடி வீதி, கேணியடிக்குளம் ஆகியன சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன. இந்நிகழ்வில் தேசோதயத் தலைவர், வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர் தி.நிரோஷ், சிறுப்பிட்டி சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி கௌரிமலர் நாவேந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (5)**

# ஒருபுறம் பேச்சுவார்த்தை மறுபுறம் ஏவுகணை சோதனைகள்

## ட்ரம்பை ஆட்டிப்படைக்கும் கிம்

(பியாங்யாங்)

வட கொரியா அதன் கிழக்கு கடற்கரையிலிருந்து நேற்று அதிகாலை குறைந்தது இரண்டு ஏவுகணைகளை சோதனை செய்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறுகிய தூர பாலிஸ்டிக் ஏவுகணைகள் என்று ஜப்பானிய அரசாங்க வட்டாரங்கள் உறுதிப்படுத்தியதாக கியோடோ செய்தி தெரிவித்துள்ளது.

வொன்சன் அருகே ஏவப்பட்ட ஏவுகணைகள் கிழக்கு நோக்கி சுமார் 430 கி.மீ.தூரம் பறந்தன என்று தென்கொரியாவின் கூட்டுத் தலைவர்கள் தெரிவித்தனர். ஏவுகணைகள் ஜப்பானின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்தை அடையவில்லை என்றும் ஜப்பானின் தேசிய பாதுகாப்பில் எந்த பாதிப்பும் இல்லை என்றும் ஜப்பானிய அரசாங்க வட்டாரம் கூறியதாக கியோடோ செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் ஆகியோர் ஜூன் மாத இறுதியில் இராணுவமயமாக்கப்பட்ட மண்டலத்தில் சந்தித்த பின்னர், இந்த ஏவுகணைகள் சோதனை நடத்தப்பட்டுள்ளதால், அணுசக்தி மயமாக்கல் தொடர்பான பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்குமா எனப் புதிய சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

வட கொரியாவின் சோதனை குறித்து கருத்து தெரிவிக்க வெள்ளை மாளிகை, பென்டகன் மற்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை உடனடியாக முன்வரவில்லை.

அமெரிக்க நிர்வாகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது, வட கொரியாவிலிருந்து ஏவப்பட்ட குறுகிய தூர ஏவுகணைகள் குறித்து எங்களுக்குத் தெரியும் எங்களுக்கு மேலதிக கருத்து எதுவும் இல்லை எனத் தெரிவித்தார்.

அமெரிக்காவும் வடகொரியாவும் விரைவில் புதிய பேச்சுவார்த்தைகளை நடத்துவதாக உறுதியளித்தன, ஆனால் பின்னர் அமெரிக்க மற்றும் தென்கொரிய படைகளின் கூட்டு இராணுவ பயிற்சிகளை வட கொரியா கடுமையாக விமர்சித்தது.

இந்த மாத தொடக்கத்தில் வட கொரியாவின் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், தென் கொரியாவுடன் இராணுவப் பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் அமெரிக்கா ஒருதலைப்பட்சமாக அதன் கடமைகளைத் திரும்பப் பெறுவது, வட கொரியாவை அணு ஆயுதங்கள் மற்றும் கண்டங்களுக்கு இடையிலான ஏவுகணைகளின் சோதனைகளை நிறுத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டை மறுபரிசீலனை செய்ய வழிவகுக்கிறது என்று கூறியிருந்தமை நினைவுகூரத்தக்கது. (ஐ)

# மாணவர் ஆலோசனைக்காக ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் தயார்

(கொழும்பு)

மாணவர் ஆலோசனையைப் பாடசாலை மட்டத்தில் செயற்றிறனுடன் முன்னெடுத்து செல்வதற்கான காலத்தின் தேவையை அறிந்து அதற்காக கல்வி கட்டமைப்பில் விசேட தகைமையுடன் கூடிய பட்டதாரிகளில் புதிய ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கு தேவையான ஒழுங்கு விதிகளை செய்யுமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கிய ஆலோசனையின் பிரகாரம், கடந்த வருடம் நவம்பர் 25 ஆம் திகதியன்று அதற்கான போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது.

இலங்கை ஆசிரியர் சேவை யாப்பின் பிரகாரம், ஆசிரியர் சேவையின் 3-1 (அ) வகுப்புக்காக மாணவர் ஆலோசனைக்கான ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு அமைவாக குறித்த ஆசிரியர் இணைப்பு இடம்பெறவுள்ளது.

எனினும் மாகாண பாடசாலைகளுக்கான மாணவர் ஆலோசனை ஆசிரியர் நியமனத்திற்கு சப்ரகமுவ மற்றும் வட மேல் மாகாணங்கள் என்பனவே உடன்பட்டுள்ளன.

இதன்பிரகாரம் குறித்த நியமனத்திற்கான நேர்முக பரீட்சை 2019.05.31 முதல் 2019.06.10 ஆம் திகதி வரை கல்வி அமைச்சில் நடத்தப்பட்டது.

எழுத்து மூல பரீட்சை மற்றும் செயற்பாட்டு பரீட்சையில் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகளில் எடுத்துக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் திறமைகள் உடையோர் குறித்த நியமனத்திற்காக இணைத்துக்கொள்ளப்படுவர் என மேலும் தெரிவித்தார். (ஐ)

# இ.தொ.காவின் 80 வருட பூர்த்தி கொண்டாட்டம்



(கண்டி)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி ஸ்தாபிக்கப்பட்டு 80 ஆண்டுகள் பூர்த்தியடைந்ததை முன்னிட்டு விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

குறிப்பாக மலையகத்தில் உள்ள பல ஆலயங்களில் நேற்று வியாழக்கிழமை விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதுடன், இ.தொ.காவின் காரியாலயங்களில் விசேட நிகழ்வுகளும் இடம் பெற்றன. பத்தனையில் அமைந்துள்ள இ.தொ.காவின் கட்சி காரியாலயத்தில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண விவசாயத்துறை முன்னாள் அமைச்சர் ரமேஷ்வரன், இ.தொ.காவின் மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான கணபதி கனகராஜ், சக்திவேல், கொட்டகலை பிரதேச சபையின் உப தலைவர் மற்றும் உறுப்பினர்கள், இ.தொ.காவின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் மலர்வாசகம், நகர வர்த்தகர்கள் மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

1939 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் திகதி இலங்கை இந்திய காங்கிரஸ் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கழிவுப்பொருள் அடங்கிய கொள்கலன்கள் விவகாரம்; நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்பு - தயாசிறி தகவல்

(கொழும்பு)

பிரித்தானியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ள கழிவுப் பொருட்கள் அடங்கிய 130 கொள்கலன்களையும் திருப்பியனுப்புவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.



மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு சுற்றாடல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார். விரைவில் இதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி இதன் போது பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், 'பிரித்தானியாவில் இருந்து 2017ஆம் ஆண்டில் இருந்து 2487 மெற்றிக்தொன் கழிவுகள் 12 தடவைகளில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இவை 130 கொள்கலன்களில் அடைக்கப்பட்டு இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், அதனைக் கொண்டு வந்தோர் தொடர்பாக இதுவரை சரியான தகவல்கள் வெளியிடப்படவில்லை.

2013.07.11 ஆம் திகதி நிதியமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கிணங்க நாட்டிற்குள் எதனையும் கொண்டுவரலாம் என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. குறித்த வர்த்தமானியில் அப்போதைய நிதியமைச்சரான மகிந்த ராஜபக்ஷவே கையொப்பமிட்டுள்ளார்.

இது நாட்டின் கைத்தொழில் துறையை பாதிப்படையச் செய்வதுடன் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கு இந்த வர்த்தமானி வழிவகுத்துள்ளது' என மேலும் தெரிவித்தார். (ஐ)


குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

## ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் பேராசிரியர் உழவன் முத்துவேல் அவர்களால் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- எளிய முறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப்பயிற்சிகள்
- காயகல்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம்: 27.07.2019 சனிக்கிழமை தொடக்கம் 02.08.2019 வெள்ளிக்கிழமை வரை
நேரம்:- மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை
பயிற்சிகளை வழங்குபவர்கள்:- மனவளக்கலை பேராசிரியர் உழவன் முத்துவேல்
துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்

அகத்தாய்வு 1 ஆம் நிலை 27.07.2019 சனிக்கிழமை மற்றும் 28.07.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்,
தொ.இல:- 021 222 2772

(C-7101)


# 66 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்



(கொழும்பு)

சப்ரகமுவ மாகாணத்தில் 66 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. இந்த ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்க தலைமையில் சப்ரகமுவ மாகாண சபை கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது.

சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை பூர்த்தி செய்யும் முகமாகவே இந்த ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.

இந்த மாவட்டங்களில் குறித்த பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் கட்டாயம் ஐந்து வருடங்கள் சேவை யாற்ற வேண்டும். எக்காரணம் கொண்டும் இவர்களுக்கு ஐந்து வருடங்களுக்கு முன்பு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது என்று மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மகிந்த எஸ்.வீரசூரிய தெரிவித்தார். (ஐ)

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2019-17.08.2019



விகாரி வருடம் ஆடிமாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசியில் தன சகாய ஸ்தானாதிபதியான சனி பகவான் வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். அவரோடு சந்திரன், கேது ஆகிய இரண்டு கிரகங்களும் இணைந்திருக்கின்றன. இராசிநாதனான குரு வக்கிர இயக்கத்தில் 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற குரு வக்கிர இயக்கத்தில் இருக்கும் பொழுது நினைத்த காரியம் நினைத்தபடியே நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

மனதளவில் நினைத்திருந்த காரியங்களை மறுநிமிடமே செய்து முடிக்கச் சந்தர்ப்பங்கள் கைகூடி வரும். எதிரிகளின் தொல்லை இனிக்குறையும். எதிர் வழக்குப் போட்டவர்கள் பின்வாங்குவர். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பிரபலஸ்தர்கள் பின்னணியாக இருந்து பல நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர். பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும். நீண்ட நாட்களுக்குப் பிறகு மன அமைதி கிடைத்த சந்தோசத்தில் குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

சப்தம ஸ்தானத்தில் புதன், சுக்கிரன், ராகு ஆகிய மூன்று கிரகங்களும் இருக்கிறார்கள். எனவே கல்யாணம் போன்ற சுபநிழ்வுகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். சொத்துக்கள் வாங்கும் யோகமும், கட்டடப் பணியில் இருந்த தடை நிவர்த்தியாகும் வாய்ப்பும் உருவாகும். வாழ்க்கைத் துணைக்கு உத்தியோகம் அல்லது தொழில் சம்பந்தமாக ஏதேனும் முயற்சி செய்திருந்தால் அதில் அனுகூலம் கிடைக்கும். அவர்கள் மூலமாகவும் வருமானங்கள் வந்து சேர வாய்ப்புகள் உருவாகும்.

அஷ்டமத்தில் சூரியன், செவ்வாய் இணைந்திருக்கின்றாரே என்று கவலைப்பட வேண்டாம். குருவின் பார்வை அதில் பதிவதால் மலை போல் வந்த துயர் பனி போல் விலகும். இறை நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் உங்களுக்கு எளிதில் கைகொடுக்கும். வாங்கிய சொத்துக்களை விற்கிறோமே என்று ஒருசிலர் கவலைப்படுவர். அரசுவழிப் பிரச்சினைகள் தலைதூக்கும். இருப்பினும் அனைத்திலும் வெற்றி கிடைக்க, பார்க்கும் குருவைப் பலப்படுத்துவது நல்லது. வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். ஆடி வெள்ளியன்று அம்பிகை வழிபாட்டை முறையாகச் செய்வதால் தடைகள் அகலும். உங்களுக்கு அஷ்டமாதிபதியாக சந்திரன் விளங்குவதால் ஆடி அமாவாசையன்று முன்னோர்களை வழிபடுவது மிகமிகச் சிறந்தது.

**கடக சுக்கிரனும் சிம்மச்சுக்கிரனும்**

பளிச்சிடும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்க நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். தொழிலில் அமோக இலாபம் கிடைக்கும். சிம்மத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும் பொழுது தந்தை வழி உறவில் இருந்த விரிசல் அகலும். பூர்வீக சொத்துத் தகராறு சம்பந்தமான பஞ்சாயத்துக்கள் நல்ல விதமாக முடியும்.

**கடக புதனின் சஞ்சாரம்**




ஓகஸ்ட் 3 ஆம் திகதி கடக இராசிக்குப் புதன் வருகின்றார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் உண்டு. அதுமட்டுமல்ல மக்கள் செல்வங்களாலும் உங்களுக்கு மேன்மை கிட்டும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பொன், பொருள் சேர்க்கை ஏற்ப

## வக்கிர வியாழனால் வளர்ச்சி கூடும்!

ஜுலை 24 ஆம் திகதி கடக இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். பிறகு ஓகஸ்ட் 17 ஆம் திகதி சிம்ம இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். இதன் விளைவாக பல நல்ல மாற்றங்கள் உங்களுக்கு வந்து சேரும். கடகத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும் பொழுது விபரீத இராஜயோகம் அடிப்படையில் பல நல்ல செயல்கள் நடைபெறப் போகின்றது. திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். திறமை

டும். விட்டுப்போன ஒப்பந்தங்கள் மீண்டும் வரலாம். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு விருப்ப ஓய்வில் வெளியே வந்து சுயதொழில் தொடங்கும் எண்ணம் மேலோங்கும்.

**சிம்மச் செவ்வாயின் சஞ்சாரம்**

ஓகஸ்ட் 10 ஆம் திகதி சிம்ம இராசிக்குச் செவ்வாய் வருகின்றார். பஞ்

சம விரயாதிபதி 9 இல் சஞ்சரிக்கும் பொழுது நாடு மாற்றங்களும் வீடு மாற்றங்களும் உருவாகலாம். நண்பர்கள் நல்ல தகவலைக் கொண்டு வந்து சேர்ப்பர். விரயங்கள் சுப விரயமாக மாறும். சொத்துப் பிரச்சினைகள் சுமுகமாக முடியும். இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். பங்காளிப் பகைமாறும்.

**குருவின் வக்கிர நிவர்த்தி காலம்**

ஓகஸ்ட் 7 ஆம் திகதி உங்கள் இராசிநாதன் குரு வக்கிர நிவர்த்தியாகின்றார். இனி தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். எடுத்த வேலையை எளிதில் முடிக்கலாம். கொடுத்த வாக்கையும் காப்பாற்றுவீர்கள். வழக்குகள் சாதகமாக முடியும். வாகனப் பழுதுகளால் வாட்டம் கண்ட நீங்கள் புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். கைநழுவிச் சென்ற ஒப்பந்தங்கள் அனைத்தும் தானாக வந்து சேரும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனி கவசம்பாடி சனிபகவானை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் மகிழ்ச்சி தரும் மாதமாகும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெற்றாலும் சனி வக்கிர இயக்கத்தில் இருப்பதால் சஞ்சலங்கள் தீரும். சந்தோசங்கள் சேரும். ஆரோக்கியம் சீராகும். கணவன்-மனைவிக்குள் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். கடன் பிரச்சினைகள் தீரும். தாய்வழி ஆதரவு உண்டு. சகோதர வர்க்கத்தினர்களும் உங்கள் பணிக்கு உறுதுணையாக இருப்பர். சொத்துக்கள் உங்கள் பெயரில் வாங்க குடும்ப உறுப்பினர்கள் சம்மதிப்பர். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த உயர்வும், இலாகா மாற்றங்களும் உண்டு. சக பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபடுவதன் மூலம் தடைகள் அகலும். தனவரவும் திருப்தி தரும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விகாரி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி சந்திரனோடும், கேதுவோடும் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். மேலும் சனி வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். தனாதிபதியாகவும் சனி விளங்குபவர். இராசிநாதனாகவும் தனாதிபதியாகவும் விளங்கும் சனி பகவான் வக்கிர இயக்கத்தில் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. எனவே ஆரோக்கியத்திற்காக செலவிடும் சூழ்நிலை உண்டு. பணவரவில் சிலருக்கு மாற்றங்கள் ஏற்படலாம்.

அதேநேரத்தில் குருவும் வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். குரு உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். 12இற்கு அதிபதி வக்கிரம் பெறும்பொழுது நன்மையையே வழங்கும். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கேற்ப சில நல்ல வாய்ப்புகளும் உங்களைத் தேடி வரலாம். என்னயிருந்தாலும் ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் நினைத்த காரியங்களை நிறைவேற்றிக் கொள்வதில் கொஞ்சம் தடைகளும் தாமதங்களும் வரத்தான் செய்யும். அவற்றைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

பொதுவாகவே நீங்கள் தன்னம்பிக்கையும் தைரியமும் மிக்கவர்கள். தட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிய முக்கிய புள்ளிகளைக் கலந்து ஆலோசிப்பீர்கள். இருப்பினும் சனிக்குரிய பரிகாரங்களை முறையாக நீங்கள் செய்வது நல்லது. ஏழரைச்சனி நடைபெறும் காலங்களில் அதன் தாக்குதல்களில் இருந்து விடுபட திருநள்ளாறு, குச்சானூர், பெரிச்சிக் கோவில் போன்ற சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று அங்குள்ள சனி பகவானையும் வழிபட்டு வரலாம். உள்ளூரில் உள்ள சிவாலயங்களில் இருக்கும் சனி பகவானுக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட்டு வரலாம்.

உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் புதன், சுக்கிரன், ராகு ஆகிய மூன்று கிரகங்களும் சஞ்சரிக்கின்றது. எனவே புத, சுக்கிர யோகம் உருவாகின்றது. உத்தியோகம் சம்பந்தமாக ஏதேனும் புது முயற்சிகள் செய்திருந்தால் அதில் அனுகூலம் கிடைக்கும். நேர்முகத் தேர்விற்கு சென்றும் அதில் வெற்றி கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கப்போகின்றது. வராத சம்பளப் பாக்கிகள் வருவதற்கான அறிகுறிகள் தென்படும். வழக்குகளில் ஒன்று இரண்டு சாதகமான பலன் கொடுக்கும்.

7 இல் செவ்வாய், சூரியன் சஞ்சரிப்பதால் அரசு வழியில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். சலுகைகள் கேட்டு விண்ணப்பித்திருப்பவர்களுக்கு எடுத்த முயற்சி கைகூடும். இம்மாதம் ஆடிவெள்ளி அம்பிகைக்கு உகந்த நாள் என்பதால் விரதமிருந்து அம்பிகையை வழிபட்டால் வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வந்து சேரும்.

**கடக சுக்கிரனும் சிம்மச் சுக்கிரனும்**

ஜுலை 24 ஆம் திகதி கடக இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். பிறகு ஓகஸ்ட் 17 ஆம் திகதி சிம்ம இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். கடகத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகளால் பெருமை சேரும். அவர்களின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். பிள்ளைகளுக்கு அரசு வேலை கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு அது கிடைக்கும். 10 ஆம் இடத்திற்கும் அதிபதியாக சுக்கிரன் விளங்குவதால் அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு ஒரு புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் கூட நிறைவேறலாம். சிம்மச் சுக்ரனின் ஆதிக்க காலத்தில் மறைமுக எதிர்ப்புகள் மேலோங்கும். பூர்வீக சொத்துத் தகராறுகள் உருவாகும்.

**கடக புதனின் சஞ்சாரம்**




ஓகஸ்ட் 3 ஆம் திகதி கடக இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 6,9 இற்கு அதிபதியான புதன் சப்தம ஸ்தானத்திற்கு வரும்பொழுது உறவினர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். வெளிநாட்டிலிருந்து அனுகூலத் தகவல் வரும். இளைய சகோதரத்தோடு இருந்த பகை மாறும். புத ஆதித்ய யோகம் வருவதால் கல்வி சம்பந்தமாக நீங்கள் செய்யும் முயற்சிகள் கைகூடும். மேல் படிப்பு தொடர வேண்டும் என்று விரும்பிய பிள்ளைகளுக்கு மேற்படிப்பு படிக்க வாய்ப்புக் கிடைக்கும்.

**சிம்மச் செவ்வாயின் சஞ்சாரம்**

ஓகஸ்ட் 10 ஆம் திகதி சிம்ம இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். இக்காலத்தில் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை. எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றங்கள், இட மாற்றங்கள் விரும்பத்தக்கதாக அமையாது. வாகனங்களில் கவனமில்லாமல் செல்லும்பொழுது ஏதேனும் தொல்லைகளுக்கு ஆளாக நேரிடும். குடும்ப உறுப்பினர்களுக்கு நீங்கள் செய்த உதவிக்கு நன்றி காட்ட மாட்டார்கள். கூடியவரை வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கொடுக்கல்-வாங்கல்களிலும் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை.

**குருவின் வக்கிர நிவர்த்தி காலம்**

ஓகஸ்ட் 7 ஆம் திகதி குரு பகவான் வக்கிர நிவர்த்தியாகின்றார். அதன்பிறகு பார்க்கும் குருவிற்கு பலன் அதிகம் கிடைக்கும். எனவே சகோதர ஒற்றுமை திருப்தி தரும். வாரிசுகளுக்கு உத்தியோகம் கிடைத்து உதிரி வருமானங்கள் பெருகும். கல்யாண முயற்சிகள் கைகூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். பயணங்களால் பலன் கிடைக்கும். அக்கம், பக்கத்து வீட்டாரின் ஆதரவு பெருகும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் ஆதியந்தப் பிரபு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் விரயங்கள் கொஞ்சம் அதிகரிக்கும் மாதமாகும். ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச்செய்வது நல்லது. கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளிடம் மனம் விட்டுப் பேசி நெறிப்படுத்திக் கொள்வது நல்லது. சகோதர வழியில் சங்கடங்கள் உருவாகலாம். தாய் வழியில் ஆதரவு கிடைக்கும். குடும்பச் சுமை கூடுகின்றதே என்று கவலைப்படுவீர்கள்.

வருமானம் ஒருவழியில் வந்தாலும் செலவுகள் எதிர்பாராத விதத்தில் வந்து திணறடிக்கும். பிள்ளைகளின் கல்வி முயற்சியும் வேலை வாய்ப்பும் கைகூடும். பணிபுரியும் பெண்களுக்கு உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. சக பணியாளர்களை அனுசரித்துச்செல்வது நல்லது. ஆடி அமாவாசையன்று முன்னோர் வழிபாட்டில் கவனம் செலுத்தினால் முன்னேற்றம் கூடும்.

## அரசு வழி அனுகூலம் உண்டு!

(தொடரும்)

# கறுப்பு ஜூலையின் தாக்கம் இன்றும் தொடர்வதுடன் இஸ்லாமிய அடிப்படைவாதமும் தலைதூக்கியுள்ளது

## பேராசிரியர் பியதாஸ சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**கறுப்பு ஜூலையின் தாக்கம் இன்றும் தொடர்வதாகவும், இன்று இஸ்லாமிய அடிப்படைவாதம் தலைதூக்கியுள்ளதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.**



கொழும்பு டார்லி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இந்தக் கருத்தை வெளியிட்டார்.

1977ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆட்சியைக் கைப்பற்றியதும் 1978ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பைக் கொண்டு வந்தார். தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிராகரித்தே அந்த அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டது. அன்றிலிருந்தே எமது நாட்டில் இன முரண்பாடுகள் ஆரம்பமானது. சிறிமா உட்பட பலரின் பிரஜாவுரிமைகள் பறிக்கப்பட்டன.

1983ஆம் ஆண்டு கலவரத்தில் 471 பேர் கொல்லப்பட்டதாக உத்தியோகபூர்வ தகவல்கள் உள்ளன. ஆனால், அதனைவிட இறப்புகள் அதிகமாகும். இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் காயப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. ஆனால், 5 ஆயிரத்திற்கும் அதிகமானோர் காயப்பட்டுள்ளனர். அத்துடன், பல தமிழ்க்கடைகள் சூறையாடப்பட்டன. யாழ்ப்பாணம் நூலகமும் எரிக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து ஜனாதிபதி எடுத்திருந்த நடவடிக்கைகளால், சில நாட்களிலே பாதுகாப்புத் துறையின் பங்களிப்புடன் அனைத்து விடயங்களும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.

ஆனால், அன்று ஜே.ஆர். அதனைச் செய்யவில்லை. இங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு குண்டர்களை அனுப்பி வன்முறைகளை நாடுமுழுவதும் தோற்றுவித்தார். 1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலையின் பின்னர்தான் ஜே.வி.பி.ஆயுதம் தூக்கியது.

1988,1989களில் இதனால் பாரிய அழிவுகளை சந்தித்தோம். 1989ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் என்ன நடந்ததென அனைவருக்கும் நினைவிருக்கும். வாக்குப் பெட்டிகளும் அன்று சூறையாடப்பட்டிருந்தன. அதனால் நாடு யுத்தத்தை நோக்கி நகர்ந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# வெளிநாட்டுக் கழிவுகள் நாட்டுக்குள் வருவதற்கு மகிந்த காலத்து சுற்றறிக்கையே காரணம்

## சந்தித் சமரசிங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

வெளிநாட்டுக் கழிவுகள் நாட்டுக்குள் வருவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட சுற்றறிக்கையே காரணம் என கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்தித் சமரசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன் கழிவுக் கொள்கலன்கள் தொடர்பான ஆய்வுகளை மத்திய சுற்றாடல் அதிகார சபை முன்னெடுத்து வருகிறது. இந்தப் பிரச்சினையை உருவாக்கியுள்ள வர்த்தமானியில் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஜ)



# என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா கண்காட்சி அநுராதபுரத்தில் ஆரம்பம்





(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து புதிய தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்குடன் நிதி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா என்ற வேலைத்திட்டத்தின் இரண்டாவது கண்காட்சி நேற்று முன்தினம் அநுராதபுரம் வலிசங்க விளையாட்டு மைதானத்தில் நிதியமைச்சர் மங்கள சமரவீர வால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

11 வலயங்களின் கீழ் இம்மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரையில் முற்பகல் 10 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரையில் இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது. இதில் அரச மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த சுமார் 500 கண்காட்சி கூடங்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் 10 இலட்சம் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் இலக்கை கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் அநுராதபுரம் மாவட்டத்தில் 20 ஆயிரம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஜ)

# குறை'களை' பதிகம் 71

## பனை உற்பத்தியாளர்க்கு சந்தை வாய்ப்பு உண்டோ?



பயனறியும் பயனறியும்
கற்பக தருவாம் பனை மரத்தின் பயனறியும்

அடியில் இருந்து நுனிவரை
அத்தனையும் பயன்தரும்
கற்பக தருவே உயிர் என்று
வடமாகாண கொடிதனிலே
எம் பண்பாட்டை பறைசாற்றும் பனைமரம்
கம்பீரமாய் பறக்குது பார்

நிம்மதித் தூக்கம் தரும் பாயும்
சுவைமிகு பிட்டவியும் நீத்துப்பெட்டியும்
அரிசியைப் புடைத்திட சுளகும்
பலவர்ண அழகுடன் பெட்டியும்
நீ தந்த கொடைகளின் சங்கமமே

சின்னஞ் சிட்டுக்களுக்கு நுங்கும்
உழைத்துக் களைத்தவருக்கு பதநீரும்
சுவைத்துத் தின்றிட பனம்பழமும்
தட்டில் காய்ந்த பனாட்டும்

உடலுக்கு உரமூட்ட கிழங்கும்
உயிருக்கு உயிரான ஒடியலும்
ஓய்வு நேரத்தில் புளுக்கொடியலும்
உன் பெருமை சொல்லிடப் போதாதே

ஒடியலைக் கொண்டொரு ஐயா
ஓடியே வந்தார் அன்று
விற்பனை எங்குசெய்ய மேனே
இடம்வலம் தெரியல்ல ராசா
என்றுமே முழித்து நின்றார்

கற்பக தரு எம் சொந்தம்
என மார்பிலடித்திடுவோரே
உற்பத்தியாளருக்கெங்கே
சந்தை வாய்ப்புகள் சொல்லும்

பனைவளம் பாதுகாத்திடுவோரே
பனைசார் உற்பத்தியாளரைப் பாரும்
அவர் குறை நிறைகளைக் கொஞ்சம் கேளும்
அவர் வாழ்வை உயர்த்திட வேணும்

பனை அபிவிருத்திச் சபையோரே
பனை உற்பத்திச் சந்தைகள் பலபோடும்
கூட்டுறவாய் ஒன்றிணைவோமே- நாம்
பனைவளம் காத்திடுவோமே

மாவை. நா. கஜேந்திரன்

# சீன நிறுவனம் முன்பாக ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் 4ஆம் கட்டத்தில் கீழ் பணிபுரிந்த பணியாளர்களுக்கு, இரண்டு மாதங்களுக்கான கொடுப் பனவுகள் வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மத்தளவிலுள்ள சீனா ஆர்பர் சீனக் கட்டுமான நிறு வனத்துக்கு முன்பாக நேற்று முன் தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. (ஜ)

# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பெருமளவில் அழிக்கப்படும் பனை மரங்கள்

## சட்டவிரோத செயற்பாட்டுக்கு பொலிஸார் உடந்தையென பொதுமக்கள் குற்றச்சாட்டு

(கண்டாவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சோரன்பற்று மற்றும் முல்லையடி கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மக்கள் நடமாட்டமற்ற பகுதிகளில் சட்டவிரோதமாக பனை வளங்கள் அழிக்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பகுதிகளில் காணப்படுகின்ற அரச காணிகளிலும் தனியார் காணிகளிலும் திருட்டுத்தனமாக பனைகள் அழிக்கப்படுவது இனம் காணப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக குறிப்பிட்ட பிரதேச மக்கள் கருத்துத் தெரிவிக் கும்போது, தனியார் சிலர் வனவள திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளுக்கு உறுதிகளை இட்டு சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு துணை போகின்றனர்.

குறித்த விடயம் தொடர்பாக அப்பகுதி கிராம அலுவலர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் சென்று குறித்த நிலைமைகள் தொடர்பாக ஆய்வு செய்துள்ளதாக தெரிவித்தனர்.

அத்துடன் பிரதேச மக்கள் பல தடவை பொலிஸாருக்கு அறிவித்தும் அவர்கள் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனவும் ஒரு சில சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நபர்களுடன் பொலிஸார் தொடர்புகளையும் பேணுகின்றார்கள் எனவும் தெரிவித்துள்ளனர். ஆனால் குறிப்பிட்ட விடயத்தை கட்டுப்படுத்த முடியவில்லை எனவும் உரிய தரப்பு இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)




## தேர்த் திருவிழாவில் ரௌடிகள் அட்டகாசம்

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட அலகரை முருகன் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

அங்கு சென்ற ரௌடிக்கும்பல் ஒன்று புகுந்து காவடி ஆடியவர்கள், பறை அடித்தவர்களை அடித்து காயப்படுத்திவிட்டு ஒலிபெருக்கிகளை சேதமாக்கிவிட்டு சென்றுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

பல நூற்றுக்கணக்கான மக்கள் ஆலய திருவிழாவினை பார்க்க வந்தவேளை இந்த ரௌடிக் குழுக்களின் அட்டகாசத்தினால் பயத்தில் வீடுகளுக்குள் சென்றுவிட்டதாகவும் மக்கள் தெரிவித்தனர். (9-281)

## புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் பொது மலசலகூடம் அமைக்குமாறு வணிகர் கழகம் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியிலேயே பொதுமலசலகூடம் அமைக்கப்பட வேண்டும் என வணிகர் கழகம் பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 25 ஆண்டுகளாக புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் மலசலகூடம் தேவை என்பதை பல துறைசார்ந்தவர்களிடம் வேண்டி வந்துள்ளோம்.

இதற்கு பொருத்தமான இடம் நகரில் பொலிஸார் நிலை கொண்டுள்ள இடம்தான் என தீர்மானிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் தற்போது அந்த இடம் மாற்றப்பட்டு ஜனசக்தி சனசமூக நிலையம் இருக்கும் காணியில் மலசலகூடம் கட்டுவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த இடம் பொருத்தமில்லாமல் இருப்பதுடன் சனசமூக நிலைய காணி மிகவும் தாழ்ந்த பிரதேசத்தில் இருக்கின்ற காரணத்தினாலும் மழை நாட்களில் வெள்ளம் நிற்கும் இடமாக காணப்படுகின்றது.

இந்நிலையில் புதுக்குடியிருப்பு சந்திப்பகுதியில் பயணிகள், வயோதிபர்கள், பெண்கள் பெரும் அசௌகரியங்களை சந்தித்து வருகின்றார்கள். எனவே அவ்விடத்தில் மலசலகூடம் அமைந்தால் மட்டுமே மக்கள் பயன்பெற முடியும், மேலும் பிரதேச சபையினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள ஜனசக்தி சனசமூக நிலையக் காணியும் பற்றாக்குறையாக காணப்படும்.

எனவே புதுக்குடியிருப்பு நகருக்குரிய மலசலகூடத்தினை பொலிஸார் நிலை கொண்டுள்ள காணி அல்லது பழைய சந்தை வளாகம் இவற்றில்தான் மலசலகூடம் அமைக்கப்பட வேண்டும்.

வெளியிடங்களில் இருந்து வரும் மக்களுக்கு இது வசதியாக அமையும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. எனவே பிரதேச சபை உறுப்பினர்கள் இதனை கவனத்தில் எடுத்து புதுக்குடியிருப்பு வணிகர் கழகத்தினருடனும் கலந்துரையாடி அதன் முடிவை எழுத்துமூலம் அறியத் தருமாறு மேலும் தெரிவித்துள்ளனர். (9-281)

## வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்



(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட அரசர்கேணி கிராம உத்தியோகத்தர் பிரிவில் காணப்படுகின்ற தம்பகாமம் அரசர்கேணி இணைப்பு வீதியானது 7 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பதற்கான வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் காணப்பட்ட இவ் வீதி ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களின் தொடர்ச்சியான பாவனைக்கு பயன்பட்ட வீதியாக காணப்பட்டது. மழை காலங்களில் போக்குவரத்து செய்ய இயலாத நிலையில் காணப்பட்ட இவ் வீதி தொடர்பாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேனுக்கு அப்பகுதி மக்கள் தெரியப்படுத்தியதையடுத்து குறித்த வீதிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறித்த புனரமைப்புப் பணிகள் தொடர்பாக நேரில் சென்று தவிசாளர் மற்றும் உப தவிசாளர், உறுப்பினர்கள் பார்வையிட்டுள்ளனர். (9-315)

## நீண்டகால இடப்பெயர்வுத் திட்டத்துக்குள் உள்வாங்கப்படும் கரைதுறைப்பற்று மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராம மக்கள் நீண்டகால இடப்பெயர்வுத் திட்டத்திற்குள் இவ்வருடம் உள்வாங்கப்படுவார்கள் என கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி. உமாமகள் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்புற தமிழ்க் கிராமங்களான கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்கிளாய் போன்ற கிராமங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் கடந்த 1984 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே தமது வாழிடங்களை விட்டு இடம்பெயர்ந்திருந்தனர்.

இருப்பினும் இம்மக்கள் நீண்டகாலம் இடம்பெயர்ந்தவர்கள் என்னும் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் நீண்டகாலம் இடம்பெயர்ந்தவர்கள் என்னும் திட்டத்தினுள் கடந்த 1990 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்தவர்களான நீராவிப்பிட்டி, ஹிச்சிராபுரம் போன்ற பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்களே உள்வாங்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு நீண்டகாலம் இடம்பெயர்ந்தவர்கள் என்னும் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு, இத் திட்டத்திற்கு பொறுப்பாக இருந்த அமைச்சின் அமைச்சரான, முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனால் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளதுடன், விசேடமான கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் கி.சிவலிங்கம் இது தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

இந் நிலையில் அதற்குப் பதிலளித்த கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி. மணிவண்ணன் உமாமகள், இவ்வருடம் குறித்த கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களும் நீண்டகாலம் இடம்பெயர்ந்தவர்கள் திட்டத்திற்குள் உள்வாங்கப்படும் என்று தெரிவித்தார். (9)

## தெங்கு உற்பத்தியாளர்களுக்கான செயலமர்வு



(நெளுக்குளம்)

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த தெங்கு உற்பத்தியாளர்களுக்கான விசேட செயலமர்வு நேற்றுக் காலை வவுனியா பிரதேச செயலகத்தின் சமுர்த்தி கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

வவுனியா தென்னை பயிர்ச்செய்கை சபையும் தென்னை அபிவிருத்தி அதிகாரசபையும் இணைந்து ஏற்பாடு செய்த குறித்த செயலமர்வில் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த தென்னை பயிர்ச்செய்கையாளர்கள் கலந்து கொண்டனர்.

இச் செயலமர்வில் தென்னைப் பயிர்ச்செய்கை தொடர்பாகவும் தெங்கு உற்பத்திப் பொருட்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தைப் படுத்துதல் அத்துடன் தெங்குப் பயிர்ச் செய்கை மற்றும் உற்பத்தியாளர்களுக்கான வங்கிக் கடன் திட்டங்கள், உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பான தெளிவூட்டலும் விழிப்புணர்வும் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் வவுனியா தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் முகாமையாளர் பி.உதயச்சந்திரன் மற்றும் தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் உதவி நிர்வாக இயக்குநர் விலஜ ரம்யதாச, மற்றும் தெங்கு உற்பத்தி தொடர்பான தனியார் நிறுவனமொன்றின் முகாமையாளர் லசந்த எ.விக்ரமசேன ஆகியோர் கலந்து கொண்டு குறித்த செயலமர்வில் தெங்கு விவசாயிகளுக்கான வளப்பகிர்வை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-250,290)

## புத்தகசாலையில் தீ விபத்து



(மன்னார்)

மன்னார் புதிய பேருந்து தரிப்பிட பகுதியில் அமைந்துள்ள புத்தகசாலையில் நேற்று இடம்பெற்ற தீ விபத்தில் இலட்சக்கணக்கான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

நேற்று வியாழக்கிழமை காலை 5 மணியளவில் மூடப் பட்டிருந்த குறித்த விற்பனை நிலையத்தினுள் இருந்து தீ மற்றும் புகை வெளி வருவதை அவதானித்தவர்கள் உடனடியாக குறித்த விற்பனை நிலைய உரிமையாளருக்கு தகவல் வழங்கினர்.


சம்பவ இடத்திற்கு வந்த உரிமையாளர் மற்றும் வர்த்தகர்கள் இணைந்து தீயை அணைக்க முற்பட்டனர். அத்துடன், மன்னார் பொலிஸாருக்கும் மன்னார் நகர சபைக்கும் தெரியப்படுத்தினர். பௌசர் மூலம் நீர் கொண்டு வந்து சுமார் இரண்டு மணித் தியாலங்களின் பின்னர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். ஆனால் பொருட்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாகியுள்ளன. (9-285)

# முல்லைத்தீவில் ஒரு லீற்றர் தண்ணீர் ஒரு ரூபாவிற்கு விற்பனை!

## இறுதி யுத்தம் இடம்பெற்ற பகுதியில் மீண்டும் அவலம்

(கண்டாவளை)

**முல்லைத்தீவு மாவட்டத்தின் இறுதிப்போர் நடைபெற்ற பகுதிகளில் ஒன்றாக காணப்படும் ஆனந்தபுரம் பகுதியில் வாழ்கின்ற அனைத்துக் குடும்பங்களும் குடிநீரினை பணம் கொடுத்து பெற்றுக்கொள்ளும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.**



250 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற இந்த கிராமத்தில் மக்களின் காணிகளில் உள்ள கிணறுகளின் நீரினை குடிப்பதற்கு பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. குறிப்பாக உவர்நீராகவும் காவிபடிந்த நீராகவும் இவை காணப்படுவதால் மக்கள் பணம் கொடுத்தே நீரினை பெற்றுக்கொள்ளவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

ஆனந்தா என்ற நீர்விநியோக அமைப்பினால் லீற்றர் ஒரு ரூபாவிற்கு விநியோகம் செய்துவருவதாக ஆனந்தா அமைப்பின் தலைவர் ராஜா திருமேனி தெரிவித்துள்ளார்.

1959 ஆம் ஆண்டு குடியேற்றத்திட்டமாக உருவாக்கப்பட்ட இக் கிராமம் ஒரு உவர்நீர் பிரதேசமாக காணப்பட்டுள்ளது. சில கிணறுகள் சமையல் பாவனைக்கு பாவிக்கக்கூடியதாக இருந்துள்ளது.

250 வரையான குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வருகின்றார்கள். கடும் வரட்சிக் காலத்தில் பிரதேச செயலரின் உதவியுடன் தண்ணீர் பௌசர்களால் நீர் வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது கடும் வரட்சியான காலநிலை நீர் பிரச்சினையால் மக்கள் பலர் நோயால் பாதிக்கப்பட்டுள்ள நிலைகூட வந்துள்ளது. வைத்திய ஆய்வின் படி கிட்னி பிரச்சினை இந்த கிராமத்திலும் அதிகளவில் உள்ளதென்று ஆய்வின் பிரகாரம் கேலீஸ் நிறுவனத்தினால் வடிகட்டப்பட்ட குடிநீர் பம்பி ஒன்று வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இந்த மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு இந்த வடிகட்டப்பட்ட குடிநீர் பம்பி ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதில் ஏற்படும் செலவீனங்களுக்காக ஒரு லீற்றர் ஒரு ரூபா படி மக்களுக்கு வழங்கி வருகின்றோம் என்றும் தெரிவித்த அவர்,

கடந்த 2016 ஆம் ஆண்டு இந்த வடிகட்டப்பட்ட தண்ணீர் தாங்கி அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கான ஒரு அமைப்பினை நிறுவி கிராம மக்களாக நாங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம். விசுவமடுவில் இருந்து இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, பொக்கணை, மாத்தளன், வலைஞர்மடம் கைவேலி, தேவிபுரம் போன்ற பகுதிகளில் இருந்து கூட இங்கு குடிநீரினை பெற்றுக் கொள்வதற்காக வருகின்றார்கள். நாளாந்தம் நான்காயிரம் லீற்றர் வரை சராசரி நீரினை வழங்கி வருகின்றோம்.

அருகில் உள்ள கிராமங்களில் 15 இடங்களில் குடிநீர் தாங்கி வைத்து குடிநீரினை குறைந்த பணத்திற்கு விநியோகம் செய்துவருகின்றோம். ஏனைய மக்கள் இங்குவந்து குடிநீரினை எடுத்துச்செல்கின்றார்கள்.

ஆனந்தபுரம் பகுதியில் உள்ள மக்களின் கிணறுகளில் உள்ள அனைத்து நீரும் மஞ்சள் நிறமாக மாறியுள்ளது. இதனால் இந்த நீர் எதற்குமே உதவாத நீராக மாறியுள்ளது.

ஆனந்தபுரத்திற்கென நீர்வழங்கள் வடிகாலமைப்பு சபையினால் நீர்விநியோகத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அது புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கே நீரினை வழங்கும் திட்டமாக மாறியுள்ளது.

அது எந்த காலப்பகுதியில் கிடைக்கும் என தெரியவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9-315)

# வீடுகளில் இருந்து பிள்ளைகளை மகிழ்ச்சியுடன் பாடசாலைக்கு அனுப்புங்கள்

## செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் தெரிவிப்பு

(அக்கராயன்)

வீடுகளில் இருந்து பிள்ளைகளை மகிழ்ச்சியுடன் பாடசாலைக்கு அனுப்புவதன் மூலம் பாடசாலையிலும்சமூகத்திலும்இளைய தலைமுறையினர் மகிழ்வாக வாழ்வார்கள் என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் ப.சசிறதன் தெரிவித்தார்.



கிளிநொச்சி, பூநகரி, நாச்சிக்குடா பாடசாலையின் பெற்றோர்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்முறைகளின் தொடக்கமாக வீடுகளே காணப்படுகின்றன. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை காலை வேளையில் அன்பாக பாடசாலைக்கு அனுப்பினால் மாணவர்கள் நாள் முழுவதும் மகிழ்வாக கல்வியிலும் விளையாட்டிலும் பிரகாசிப்பார்கள்.

மாறாக பெற்றோர்கள் தமது பிள்ளைகளை காலை வேளையில் முரண்பாடுகளுடன் பாடசாலைக்கு அனுப்பினால் மாணவர்களில் மாற்றங்கள் ஏற்படும்.

எல்லோருக்கும் இது அனுபவமாகவே இருக்கும். எனவே மகிழ்ச்சி என்பது ஒவ்வொரு வீட்டிலும் இருந்து பிறக்க வேண்டும்.

பாடசாலையிலோ அல்லது வெளியிடங்களிலோ மகிழ்வு கிடைக்கும் என்று பெற்றோர்கள் நினைக்கக் கூடாது.

மகிழ்வும் ஒழுக்கமும் பண்பாடும் ஒவ்வொரு வீடுகளி லும் இருந்து பிள்ளைகளுக்கு கிடைக்குமானால் அது பாடசாலையிலும் சமூகத்திலும் வெளிப் பாடுகளாக இனங்கண்டு கொள்ள முடியும் என மேலும் தெரிவித்தார். (9-350)




# கடும்போக்குவாதத்தை தடுப்பதற்கான கருத்தறியும் செயலமர்வு

(பனிக்கன்குளம்)

முல்லைத் தீவு மாவட்டத்தின் இளைஞர்களிடம் நாட்டினுள் கடும்போக்குவாதத்தை தடுப்பது தொடர்பான கருத்தரங்கு செயலமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை செஞ்சிலுவை சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.




தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தினால் நாடளாவிய ரீதியில் இளைஞர்கள் மத்தியில் கடும்போக்குவாதத்தை தடுப்பது தொடர்பான கருத்தரங்கு செயலமர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்ட இளைஞர்களை கொண்டு தேசிய ரீதியில் கடும்போக்குவாதம் தொடர்பாக செயலமர்வு இடம் பெற்று அங்கு கலந்து கொண்ட இளைஞர்களால் மாவட்ட ரீதியில் நாட்டினுள் கடும்போக்குவாதத்தை தடுப்பதற்காக இளைஞர்களது கருத்துக்களை அறியும் செயலமர்வுகள் மாவட்ட ரீதியாக இடம்பெற்று வருகின்றது.

நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாதம் அடிப்படைவாதம் மற்றும் தீவிரவாத செயற்பாடுகளின் போது இளைஞர்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் இன, மத, கலாசார ரீதியான பிரிவினைகள் மற்றும் முரண்பாடுகளை இளைஞர்கள் மத்தியில் தீர்த்துக்கொள்வது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த செயலமர்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி சரோஜா குகணேசதாசன், முல்லைத் தீவு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி மா.சசிகுமார், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட பிரதேச இள்ளஞர் சேவை அதிகாரிகள், தேசிய சம்மேளன பிரதிநிதிகள், இளைஞர் சேவைகள் மன்றத்தின் அதிகாரிகள், இளைஞர்கள், யுவதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-281)



கிளிநொச்சியில் உள்ள இராணுவத்தினரால் புதிய கண்டுபிடிப்புகள் கண்காட்சி நேற்று முன்தினம் இரணைமடு நெலும் பியச இராணுவ கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வருடந்தோறும் இடம்பெறும் இக் கண்காட்சியில் கிளிநொச்சியிலுள்ள இராணுவத்தினரின் புதிய கண்டுப்பிடிப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டு சிறந்த புதிய கண்டுபிடிப்புக்கள் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.

அந்த வகையில் 2019 ஆம் ஆண்டுக்கான புதிய கண்டுபிடிப்புகளில் மக்களின் உணவு மற்றும் ஏனைய அத்தியாவசிய தேவைகளை இலகுவாக மேற்கொள்ளும் வகையில் புதிய கருவிகள் உருவாக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அத்தோடு ஏனைய பல விடயங்களிலும் புதிய புதிய கருவிகள் உருவாக்கப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் பாதுகாப்புப் படைகளின் கிளிநொச்சி மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ரவிப்பிரிய, யாழ்.பல்கலைகழக சிரேஷ்ட விரிவுரையாளர் பூபாலசிங்கம் ஜங்கரன், விரிவுரையாளர் சசிகேஸ், இராணுவத்தினர் கலந்துகொண்டனர்.

(படங்கள்:- அக்கராயன் செய்தியாளர்)

# பாரதம்

## நளினி பிணையில் விடுவிப்பு



(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் நளினி பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார். நளினிக்கு அவரது தாயார் பத்மா மற்றும் காட்பா டியை சேர்ந்த பெண் ஒருவரும் பிணை வழங்கியுள்ளனர்.

இவ்வாறு பிணையில் வரும் அவர், வேலூர் ரங்காபுரம் புல வர் நகரில் உள்ள திராவிட இயக்க தமிழர் பேரவை மாநில துணைப் பொதுச்செயலாளர் சிங் காராயர் வீட்டில் தங்கவுள்ளதா கவும் இது குறித்த ஆவணங் களை நளினி கையளித்துள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## ஈரான் விவகாரத்தில் அமெரிக்கா அவதானத்துடன் செயற்பட வேண்டும்

### இம்ரான்கான் அறிவுறுத்தல்



(வோஷிங்டன்)

ஈரான் விவகாரத்தில் அமெ ரிக்கா அவதானத்துடன் செயற் பட வேண்டுமென இம்ரான்கான் அறிவுறுத்தியுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் இம் ரான்கான் அமெரிக்காவில் அரசு முறை சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ளார். கடந்த திங்கட் கிழமை வெள்ளை மாளிகை யில் ஜனாதிபதி ட்ரம்பை சந்தி த்து. இரு தரப்பு உறவை பலப் படுத்துவது குறித்து பேச்சு வார் த்தை நடத்தினார்.

இந்நிலையில் அமெரிக்க நாடாளுமன்றத்தால் வோஷிங் டன் நகரில் நிறுவப்பட்டுள்ள அமைதிக்கான நிறுவனத்துக்கு இம்ரான்கான் சென்றார். அங்கு திரண்டிருந்த ஊடகவியலாளர் கள் ஈரான் மற்றும் ஆப்கானிஸ் தான் விவகாரங்கள் குறித்து இம்ரான் கானிடம் பல்வேறு கேள்விகளை எழுப்பினர்.

ஊடகவியலாளர்களின் கேள் விகளுக்கு பதிலளித்து இம் ரான்கான் கூறியதாவது,

அமெரிக்கா-ஈரான் விவகா ரத்தில் எனக்கு மிகுந்த கவலை உள்ளது. ஒருவேளை ஈரானு டன் போர் ஏற்பட்டால் அதனால் ஏற்படும் மோசமான நிலைமையை அனைத்து நாடுகளும் உணர்ந்து ள்ளனவா என்பது குறித்து என க்கு உறுதியாக தெரியவில்லை.

இது 2003 ஆம் ஆண்டில் ஈராக் மீது அமெரிக்கா படை யெடுத்து போன்று இருக்காது. அதை விட மிக மிக மோசமாக இருக்கலாம். இது பயங்கரவா தத்தை கட்டவிழ்த்துவிடக்கூடும். மக்கள் அல் கொய்தாவை மறந்து விடுவார்கள்.

ஒருவேளை போர் ஆரம்பித் தால் அது குறுகியகாலத்திலேயே முடிந்துவிடும். ஆனால் அதற்கு பின் ஏற்படும் விளைவுகள் என்ன என்பதை பெரும்பாலான மக்கள் புரிந்துகொள்ளவில்லை என்பதே எனது கவலை.

எனவே இன்னொரு இரா னுவத் தாக்குதல் கூடாது என் பதை மிகவும் தீவிரமாக வற்பு றுத்துகிறேன். ஈரான் விவகாரத் தில் அமெரிக்கா அவதானத்து டன் செயற்பட வேண்டும்.

இரு தரப்பு பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதில் பாகிஸ்தானின் பங்கு இருக்கு மாயின், எதை வேண்டுமானா லும் செய்யத் தயாராக இருக்கி றோம். இதை ஈரானிடம் ஏற்க னவே அழுத்தமாக சொல்லியி ருக்கிறோம்.

அண்மைக்காலமாக முன்பு வரை ஈரான் அதற்கு தயாராக இருந்தது. ஆனால் தற்போது அந்தநாடு மிகுந்த அவநம்பிக் கையை அடைந்திருப்பதாக நான் உணர்கிறேன். இது போருக்கு வழிவகுக்கும்.

ஆப்கானிஸ்தானின் உள் விவகாரங்களில் நாங்கள் ஒரு போதும் தலையிடமாட்டோம். தங்களுக்கு என்ன வேண்டும் ஆப்கானிஸ்தானியர்களே தீர்மா னிக்கட்டும்.

இப்போது, நாம் அனைவரும் ஒரே பக்கத்தில் இருக்கிறோம். அதிர்ஷ்டவசமாக, இப்போது அமெரிக்காவும் அதே பக்கத்தில் உள்ளது. நாம் அனைவரும் அமைதியையே விரும்புகிறோம். போரை அல்ல என இம்ரான் கான் தெரிவித்தார். (ஐ)

## இறப்பர் தோட்டத் வைக்கப்பட்டிருந்த

### மியன்மாரிலிருந்து மலேசியாவுக்கு



(பாங்கொக்)

மலேசியாவுக்குக் கடத்தி செல் வதற்காக தெற்கு தாய்லாந்தில் உள்ள இறப்பர் தோட்டத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 57 மியன் மார் நாட்டுத் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தரகர்கள் மூலம் மியன்மாரிலி௫

## பிரேசிலில் கன 13 பேர் உயிரி



(ரியோ டி ஜெனிரோ)

பிரேசில் நாட்டில் பெய்துவரும் கனமழையால் 13 பேர் பரிதா பமாக உயிரிழந்தனர் என மீட்புப் படையினர் தெரிவித்தனர்.

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ

## ஆம்ஸ்ட்ரோங் மரணத்தில் உண்மைகளை மறைத்த கு

### நியூயோர்க் டைம்ஸ் சுட்டிக்காட்டு

(நியூயோர்க்)

நிலவில் முதன்முதலில் காலடி எடுத்துவைத்த வரலாற்றுப் பெரு மைக்குரியவரான நீல் ஆம் ஸ்ட்ரோங் வைத்தியசாலையின் தவறான சிகிச்சை காரணமா கவே உயிரிழந்தார் என நியூ யோர்க் டைம்ஸ் செய்தி தெரி வித்துள்ளது.

நீல் ஆம்ஸ்ட்ரோங்கின் மர ணம் குறித்து எழக்கூடிய சர்ச் சையை தவிர்ப்பதற்காக வைத் தியசாலை நிர்வாகம் ஆம்ஸ்ட் ரோங்கின் குடும்பத்தவர்களிற்கு ஆறு மில்லியன் டொலர்களை வழங்கியது என நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

ஆம்ஸ்ட்ரோங்கின் இரு மக ன்களும் சகோதரியும் சகோ தரரும் பேரப்பிள்ளைகளும் அந்தப் பணத்தை பெற்றுக்கொண்டு உண்மைகளை மறைத்தனர் எனவும் நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அவர் இருதய சத்திர கிசிச் சையின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளினால் உயிரிழந்தார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

எனினும் அவர் சிகிச்சை யால் ஏற்பட்ட குளறுபடிகள் கார ணமாக உயிரிழந்தார் என நியூ யோர்க் டைம்ஸ் தெரிவித்து ள்ளது.

மேர்சிஹெல்த் பெயர்பீல்ட் வைத்தியசாலையில் சத்திர கிசிச் சைக்கு பின்னரான சிகிச்சை களில் காணப்பட்ட திறமையின் மையே தங்களது தந்தையின் மரணத்திற்கு காரணம் என ஆம்ஸ்ட்ரோங்கின் மகன்கள் கருதினர் எனவும் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆம்ஸ்ட்ரோங்கின் குடும்பத்தவர்கள் சட்டநடவடி க்கை எடுக்கப்போவதாகவும் எச்சரித்துள்ளனர்.

சிகிச்சை மற்றும் அதனைத் தொடர்ந்து உருவான சட்ட சிக்கல் ஆகியவை குறித்த விப ரங்கள் அடங்கிய 90 பக்க ஆவ ணம் தனக்கு கிடைத்துள்ள தாக தெரிவித்துள்ளது.

இரு தரப்பு வைத்திய அறிக் கைகள், சட்டநிபுணர்களின் கடி தங்கள் உட்பட முக்கிய விடய ங்கள் அடங்கியதாக அந்த ஆவ ணம் காணப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட ஆவணங்களில் காணப்படும் மூன்று மருத்துவ அறிக்கைகள் இருதய பாதிப் பினால் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையால் அனு மதிக் கப்பட்ட பின்னர் ஆம்ஸ்ட் ரோங கிற்கு என்ன நடந்தது? என்பதை தெளிவுபடுத்துகின்றன என நியூ யோர்க் டைம்ஸ் தெரி வித்துள் ளது.

ஆரம்பகட்ட மருத்துவப் பரி சோதனைகளை மேற்கொண்ட வைத்தியர்கள் நீல் ஆம்ஸ்ட் ரோங்கிற்கு உடனடியாக இருதய சத்திரசிகிச்சையை செய்யத் தீர்மானித்துள்ளனர். அவரின் இதயத்துடிப்பை சீராக்குவதற் கான நடவடிக்கைகளில் அவர் கள் ஈடுபட்டனர். ஆம்ஸ்ட் ரோங் கின் இருதயத்தில் தற்காலிக வயர்களை பொருத்தியுள்ளனர்.

எனினும் அந்த வயர்கள் அகற்றப் பட்டவேளை ஆம்ஸ்ட்ரோங்கின் உடலி ற்குள் இரத்தக்கசிவு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அவர் குறைந்த இரத்த அழுத்தப் பாதிப்பிற்கு உள்ளாகியு ள்ளார். இதன் காரணமாக அவரிற்கு மேலும் சிகிச்சைகளை வழங்க வேண் டிய நிலையேற்பட்டுள்ளது.

அவரை மீண்டும் சத்திர சிகிச்சைக் காக கொண்டு சென்றுள்ளனர். எனி னும் அதன் பின்னர் என்ன நடந்தது என்பது தெரியவரவில்லை' என நியூ யோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

இதற்குச் சில நாட்களின் பின்னர் அவர் 2012 ஒகஸ்ட் 25ஆம் திகதி உயிரிழந்தார்.



# வெளிநாடு

## டத்தில் மறைத்து
## ந்த தொழிலாளர்கள்

### க்கு கடத்த முயற்சி

ந்து சட்டவிரோதமாக தாய்லாந்துக்கு அழைத்து செல்லப்பட்ட இவர்கள் மலேசியாவுக்கு கடத்தப்படவிருந்த நிலையில் தாய்லாந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனர்.

இறப்பர் தோட்டம் ஒன்றில் 54 ஆண்களும் 3 பெண்களும் இருந்த பொழுது சுற்றிவளைத்ததாக தாய்லாந்து கடத்தல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இந்நிலையில் அண்மையில் இடம் பெற்ற ஒரு கைது நடவடிக்கையில் மலேசியாவுக்கு மக்களை கடத்தும் வழக்கமான தரகர் ஒருவர் கைது செய்யப்பட்டதால், புதிய தரகர் வரும் வரை இறப்பர் தோட்டத்தில் இருக்குமாறு அழைத்து வந்த தரகர் தெரிவித்திருக்கிறார்.

தாய்லாந்தின் சோங்கிலா மாகாணத்திலிருந்து மலேசிய எல்லை சுமார் 100 கிலோ மீற்றருக்குள் அமைந்திருப்பதால், இவ்வழியாக அயல் நாட்டுத் தொழிலாளர்கள் குடியேறிகள்/அகதிகள் கடத்தப்படுவது வாடிக்கையான நிகழ்வாக இருந்து வருகின்றது.

இப்பகுதியில் குடியேறிகள் வாரந்தோறும் கைது செய்யபபடுவது தொடர்ந்து நடந்து வருகின்றது.

இதில் பெரும்பான்மையாக வறுமையில் சிக்கியுள்ள மியன்மார், லாவோஸ், கம்போடிய நாட்டைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஆவணங்களின்றி இடம் பெயருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சீனாவில் நிலச்சரிவு
## 15 பேர் பரிதாபமாக பலி

(பீஜிங்)

சீனாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்குண்டு 15 பேர் உயிரிழந்துள்ளதுடன், 34 பேர் மாயமாகியுள்ளதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




சீனாவின் குயிஸ்ஹோ மாகாணத்துக்குட்பட்ட லியு பன்ஷுய் என்ற கிராமத்திலேயே இந்த நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதன்போது 21 வீடுகள் மண்ணுக்குள் புதையுண்டதாகவும், சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு பணியாளர்களினால் 11 பேர் உயிருடன் மீட்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இவ்வாறு மீட்கப்பட்டவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரியவந்துள்ளது.

மேலும், மாயமான 34 பேரைத் தேடும் பணியில் மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஐ)

## னமழை;
## ிரிழப்பு



நகரில் கடந்த சில நாட்களாக இடைவிடாது கனமழை பெய்து வருகிறது. மழைதொடர்பான விபத்துகளில் ரெசியில் 5 பேர், ஒலிண்டவில் 3 பேர், அப்ரன் லிமாவில் 5 பேர் என மொத்தம் 13 பேர் பலியாகி யுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் நூற்றுக்கணக்கான வீடுகள் மூழ்கி தத்தளிக்கின்றன. வீதிகளில் இடுப்பு அளவுக்கு தண்ணீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. மழையின் போது கடும் காற்று வீசியதில் மரங்கள் மின் கம்பங்கள் சரிந்து விழுந்தன. மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வீடுகளை இழந்த மக்கள் பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புக் குழுவினர் துரித கதியில் மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அவுஸ்திரேலியாவில் பெருந்தொகையான
## போதைப்பொருள் பறிமுதல்




(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியாவில் பெருந்தொகையான போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் விபத்தினை ஏற்படுத்திய வான் ஒன்றிலிருந்தே இவ்வாறு போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது 273 கிலோ கிராம் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி சுமார் 140 அமெரிக்க டொலர்கள் எனவும் அவுஸ்திரேலிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், இதன்போது 28 வயதான சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## ல் சர்ச்சை;
## ் குடும்பம்




நீல்ஆம்ஸ்ட்ரோங்நிலவில்காலடிஎடுத்து ஐவத்து ஐம்பது வருடங்களாகியுள்ளதை உலகம் கொண்டாடி வரும் தருணத்தில் இந்த தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 90 ஆயிரம் சதுர அடி நிழல் தரும்
## உலகின் ஒரேயொரு முந்திரி மரம்

(பிரேசிலியா)

உலகிலேயே 90 ஆயிரம் சதுர அடி அளவுக்கு நிழல் தரக்கூடிய பிரம்மாண்டமான மரம் குறித்த சுவாரஸ்யமான தகவல்கள் வெளியாகியுளளன.

பிரேசிலில் மேலோட்டமாக பார்ப்பதற்கு அதிக மரங்களை கொண்ட பூங்காவைப் போன்று ஒற்றை முந்திரி மரம் காட்சியளிக்கிறது. இந்த மரம் கடந்த 1994 ஆம் ஆண்டு உலகிலேயே மிகப்பெரிய முந்திரி மரம் என்பதற்காக கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.



இது 90.ஆயிரம் சதுர அடி பரப்பளவு கொண்டு பரந்து விரிந்து காணப்படும் இந்த மரம் ஒரு காற்பந்தாட்ட மைதானத்தின் அளவை விடப் பெரியது.

இந்த பிராங்கி முந்திரி பூங்காவை பார்ப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் பிரேசிலுக்கு வருகை தருகின்றனர்.

இந்த மரம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஏழாயிரம் முதல் எண்ணாயிரம் முந்திரிப்பழங்களை வழங்குகின்றது.

இவற்றை பழப்பாகு மற்றும் பழச்சாறுகளை உற்பத்தி செய்வதற்கும் பயன் படுத்தலாம். 140 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இந்த மரத்தின் கிளைகள் உயரமாக வளராமல், பக்கவாட்டில் வளர்ந்துள்ளன.

அதன் கிளைகள் பூமியை தொட்டதும், அப்படியே தங்கி பரவ ஆரம்பித்துவிட்டன. மேலிருந்து பார்க்கும்போது சிறிய காட்டினை போலவே காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது (ஐ)

# 50 ரூபாய் கொடுப்பனவு ஓகஸ்டில் வழங்கப்படும்

## ராஜித உறுதியளிப்பு

(கொழும்பு)

**தோட்டத் தொழிலாளர்களுக்கான 50 ரூபா சம்பள உயர்வு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பெற்றுக் கொடுக்கப்படும் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.**

கடந்த வாரம் அமைச்சரவையில் இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து முடிவு எடுக்கப்பட்டதாகவும் அதற்கிணங்க ஓகஸ்ட் மாதச் சம்பளத்தோடு தோட்டத் தொழிலாளர்களுக்கு 50 ரூபா வழங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

50 ரூபா சம்பள உயர்வு தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், அது தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானம் தொடர்பில் அமைச்சரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தோட்டத்தொழிலாளர்களின் கடந்த மாதச் சம்பளத்தோடு 50 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருந்த நிலையில், அது கடந்த மாதம் வழங்கப்படவில்லை.



அமைச்சர் நவீன் திஸாநாயக்க, பழனி திகாம்பரம் போன்றவர்கள் இதுதொடர்பில் கருத்துக்களைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்.-பாக்.கடற்படைகளுக்கு இடையில் பேச்சுவார்த்தை



(கொழும்பு)


இலங்கைக் கடற்படைக்கும் பாகிஸ்தான் கடற்படைக்கும் இடையிலான 3வது நிபுணர் நிலை பணியாளர்களின் பேச்சுவார்த்தை கடந்த 23, 24 ஆம் திகதிகளில் கொழும்பு கலங்கரை விளக்கம் உணவக வளாகத்தில் நடைபெற்றது.

இரண்டு நாள் நடைபெற்ற உரையாடலின் போது, 13 அதிகாரிகள் அடங்கிய இலங்கைத் தூதுக்குழுவில் கடற்படை இயக்க இயக்குநர் கமடோர் சஞ்சீவ டயஸ் தலைமை தாங்கினார்.

இதற்கிடையில், பாகிஸ்தான் கடற்படைத் தூதுக்குழுவிற்கு கடற்படைப் பணியாளர்கள் செயற்பாட்டுத் திட்டங்களின் உதவித் தலைவர் கமடோர் கைபர் ஜமான் தலைமை தாங்கினார்.

இரு நாடுகளிற்கு இடையில் 3 வது தடவையாக இடம்பெற்ற இப் பேச்சுவார்த்தை மூலம் பரஸ்பர உறவுகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துகிறது. இந்தச் சந்தர்ப்பத்தின் முக்கியத்துவத்தை குறிக்க இரண்டு தூதுக்குழு தலைவர்களிடையே நினைவுப் பரிமாற்றங்களும் பரிமாறப்பட்டன. (ஐ)

# 50 ரூபாய் மேலதிக கொடுப்பனவு விவகாரம் அமைச்சர் நவீனுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்




(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களது நாளாந்த சம்பளத்துடன் 50 ரூபாய் மேலதிகக் கொடுப்பனவை இணைக்குமாறு, வலியுறுத்தி ஹற்றனில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஹற்றன் நகரின் மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்பாக, பிற்பகல் 3 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில், தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஆதரவாளர்கள்,பொது மக்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

50 ரூபாய் கொடுப்பனவை வழங்குவதில், பெருந்தோட்டக் கைத்தொழில் துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க தடையாக இருப்பதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ)



# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனிதனும் பூமியும்

ஒரு கிராமத்திலே ஒரு ஆசாமி இருந்தார். "ஐயா இன்று ஒரு தகவலிலே சொல்வது என்னமோ நல்ல விடயமாகத் தான் இருக்கு. இருந்தாலும் அதைப்பார்த்து யாரும் தங்கள் பழக்க வழக்கத்தை மாற்றிக்கொண்ட மாதிரித் தெரியவில்லையே'' என்றார்.

அப்படியா சொல்கிறீர்கள் என்றேன். ஆமாம் இப்ப எங்கள் கிராமத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். நாங்கள் எல்லாம் பார்க்கத்தான் செய்கின்றோம். இருந்தாலும் எனக்கு ஒரு பிரச்சினை. அது தீர இன்னமும் வழி தெரியவில்லை என்றார்.

உங்கள் பிரச்சினை என்ன? கொஞ்சம் விபரமாகத்தான் சொல்லுங்கள் என்றேன். ஐயா நான் ஒரு சாதாரண விவசாயி. கிராமத்திலே 3 ஏக்கர் நிலம் இருக்கின்றது அவ்வளவு தான். என் நிலத்தை ஒட்டினால் போல் ஒரு 30 ஏக்கர் நிலம் இருக்கிறது. அது ஒரு பெரிய மனிதருக்குச் சொந்தமானது.

அவர் என்ன செய்கின்றார் என்றால் வருடாவருடம் வரப்பை என் பக்கமாக கொஞ்சம் கொஞ்சமாகத் தள்ளிக்கொண்டே வருகின்றார். 30 ஏக்கர் வைத்திருக்கின்றவர் 3 ஏக்கர் வைத்திருக்கின்றவர் நிலத்தைச் சேர்த்துக் கொண்டு வருவது நியாயம் தானா? நீங்களே சொல்லுங்கள் என்றார்.

யாருமே இதை நியாயம் என்று சொல்ல மாட்டார்கள் என் றேன். ஆனால் இது அவருக்குப் புரிகிறதில்லை. தினமும் ''தகவல்'' வாசிக்கிறார். நீதிக் கதைகள் எல்லாம் வாசிக்கிறார். நல்லா இருக்கிறது என்கிறார். இருந்தாலும் என்ன பிரயோசனம் என்று அலுத்துக்கொண்டார் அந்த விவசாயி. சரி கவலைப்படாதையுங்கள். நானே உங்கள் கிராமத்திற்கு வந்து அந்த ஆளைப் பார்த்துப் பேசுகின்றேன் என்று சொல்லி அனுப்பிவைத்தார். இவரும் நம்பிக்கையோடு திரும்பிப் போய் விட்டார். நானும் சொன்னபடியே ஒரு தடவை அந்தக் கிராமத்துக்குப் போய் அந்தப் பெரிய மனிதரைப் பார்த்தேன்.

வாருங்கள், உட்காருங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள் என்றார். வரவேற்பு, உபசாரம் அதிலே எல்லாம் ஒன்றும் குறைச்சல் இல்லை. பேச்சு, பழக்க வழக்கம்கூட நல்லாத் தான் இருந்தது. இருந்தாலும் சொத்து–சுகம் சேர்க்க வேண்டும் என்ற ஆசை மட்டும் அவருக்கு அதிகமாக இருந்தது. அதற்காக நியாயம் தவறிக்கூட நடந்து கொள்வதற்கு அவர் தயாராகி இருந்தார்.

அதுமட்டும்தான் அவரிடமிருந்த கெட்ட குணம். அவரிடம் அதிக நேரம் பேசிக் கொண்டிருந்தேன். நான் கேள்விப்பட்ட கதைகளை எல்லாம் சொன்னேன். ஒருவர் அப்படித்தான் தனக்கு நிறைய நிலம் வேண்டும் எ ன்று ஆசைப்பட்டானாம். அதற்காக கடவுளிடம் வேண்டிக் கொண்டானாம். கடவுளும் ஒருநாள் திடீரென அவன் முன்னால் வந்து நின்றார். "உனக்கு என்ன வேண்டுமென்றாலும் கேள்! தருகிறேன்!" என்றார்.

"எனக்கு இந்த பூமியிலே நிறைய இடம் சொந்தமாக இருக்க வேண்டும். நிலம் மட்டும் நிறைய இருந்தால் மற்ற சுகமெல்லாம் நானா தேடிக்கொள்வேன். அதனாலே இதுக்கு மட்டும் நீங்கள் ஏற்பாடு செய்தால் போதும்'' என்றான் அவன்.

'சரி' என்று சொல்லி அவனை ஒரு பெரிய வெட்ட வெளிக்கு அழைத்துக்கொண்டு போனார் கடவுள். கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக்கும் ஒரே திடல் தான்!

ஆச்சரியத்தோடு அந்த மைதானத்தை பார்த்துக்கொண்டு இருந்தான் அந்த ஆள். கடவுள் அவனைப் பார்த்துச் சொன்னார்.

''இதோ பாரப்பா! இப்ப நீ என்ன செய்யணும் என்றால் இங்கேயிருந்து புறப்பட்டு நேராக ஓட வேண்டும். உன்னால் எவ்வளவு தூரம் ஓட முடியுமோ ஓடி அங்கே ஒரு குச்சியை நட்டுவிட்டு சூரியன் மறையிறதுக்குள்ளே திரும்பி இதே இடத்துக்கு வந்திட வேண்டும். அப்படி வந்து விட்டால் நீ எது வரைக்கும் ஓடினாயோ அதுவரைக்கும் உள்ள பூமி உனக்கே சொந்தம்!'' என்றார்.

இவனுக்கு மிகவும் சந்தோசம். ரொம்ப ஆசையா ஓட ஆரம்பித்தான். பலங்கொண்ட மட்டும் ஓடினான். உச்சி வேளை வந்து விட்டது. ஒரு இடத்திலே குச்சியை நட்டு விட்டு திரும்பி வேகமாக ஓடி வந்தான். பூமி வேண்டும் என்ற ஆசையிலே அவன் சாப்பாட்டை மறந்தான், தண்ணியை மறந்தான், கடுமையான வெயிலைக்கூட பொருட்படுத்தவில்லை. அப்படி ஓடி வந்து கடைசியா புறப்பட்ட இடத்திலே வந்து விழுந்தான்.

விழுந்தவன் எழுந்திருக்கவே இல்லை. ஆள் காலி! அவன் இறந்து போய்விட்டான். "இப்ப கடவுள் சொன்னார், "இப்ப இந்த மனிதனுக்குத் தேவை இவன் விழுந்து கிடக்கிறானே இந்த ஆறடி நிலம்தான்'' என்றார். இந்தக் கதையை வாசித்தவுடனே அந்த கிராமத்துப் பெரிய மனிதன், ''சேர்! மனிதனுக்குத் தேவை எவ்வளவு என்பதை புரிந்து கொண்டேன்'' என்றார்.

"அப்படி இருக்கிறபோது முப்பது ஏக்கர் வைத்திருக்கிற நீங்கள் 3 ஏக்கர் வைத்திருக்கிற அந்த ஆள் நிலத்துப் பக்கமாக வரப்பை தள்ளிக்கொண்டு போகலாமா?'' என்றேன்.

"அது தப்புதான் சேர். எடுத்ததை கொடுத்துவிடுகிறேன். இருந்தாலும் உங்களிடம் ஒரு இரகசியத்தை சொல்லுகிறேன்'' என்றார்.

"என்ன?'' என்று கேட்டேன்.

"கிட்ட வாருங்கள்'' என்றார். போனேன்.

"இந்த முப்பது ஏக்கரிலே பெரும்பகுதி கொஞ்சம் கொஞ்ச மாக நான் வரப்பை நகர்த்தி சம்பாதித்ததுதான் சேர்!'' என்றார்.

# ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்வதில் ராஜபக்ஷ குடும்பத்திற்குள் மோதல் போக்கு

## நவீன் திஸாநாயக்க சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தும் வேட்பாளரைத் தெரிவு செய்ய முடியாமல் ராஜபக்ஷ குடும்பம் முட்டி மோதிக்கொள்வதாக அமைச்சர் நவீன் திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில், கட்சியின் இளைஞர் முன்னணியில் அலுவலகத்தை திறந்து வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக எந்தப்பிரச்சினையும்இல்லை. தகுதியான, திறமையான, வெற்றி பெறக் கூடிய வேட்பாளர் கட்சிக்குள் இருக்கின்றார்.

அத்துடன் எமது இளைஞர் அமைப்பின் வலையமைப்பு செயற்பாட்டு மட்டத்தில் இருக்கின்றது. தேர்தல் நடக்கும் போது அது மேலும் விரிவுபடுத்தப்படும்.

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து தற்போது பெரிதாகப் பேசப்பட்டு வருகிறது. எமது நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் சஜித் பிரேமதாஸவின் பெயர் முன் வைக்கப்பட்டது.

எனினும் அது ஆரம்ப கட்ட பேச்சு மாத்திரமே. கட்சிக்குள் பல கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும். எமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரின் பெயர்கள் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டியவர்களின் பட்டியலில் உள்ளது.

இது குறித்து கட்சிக்குள் கலந்துரையாடி சிறந்த வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார். திடீரெனத் தீர்மானிக்க முடியாது. ஜனாதிபதி யார், பிரதமர் யார் என்பது குறித்து நாட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் எதிர்பார்ப்பு உள்ளது. இது நியாயமான எதிர்பார்ப்பு. எனினும் கட்சியின் செயற்குழுவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுமே தீர்மானிக்கும்.

இந்தத் தீர்மானம் ஒரு குடும்பத்திற்கு வரையறுக்கப்படாது. கட்சியில் உள்ள அனைவரும் கூட்டாகத் தீர்மானம் எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்வதில் ராஜபக்ஷ குடும்பங்களுக்கு இடையில், பாரிய மோதல் ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி கோத்தபாய ராஜபக்ஷ வேட்பாளராக அறிவிக்கப்படுவார் எனக் கூறப்பட்டாலும் அது குறித்து எமக்கு சந்தேகம் உள்ளது.

அதேபோல் அவர்களுக்குப் பல பிரச்சினைகள் உள்ளன.

மக்கள் ஒரு குடும்பத்தின் அரசியலை விரும்பவில்லை. ஒரு சகோதரர் ஜனாதிபதி மற்றுமொரு சகோதரர் பிரதமர் என்பதை மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை.

அவர்கள் தமது பிரதமர் வேட்பாளரை பெயரிட வேண்டும். எமக்கு ஒரு குடும்பத்திற்குள் வரையறுக்காமல் ஜனாதிபதி வேட்பாளரும் இருக்கின்றார். பிரதமர் வேட்பாளரும் இருக்கின்றார் எனவும் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ஐ)

# அமைச்சரவையில் உள்ள 30 பேரின் மீது ஊழல் குற்றச்சாட்டு; புதிய அரசாங்கத்தின் கீழ் விசாரணைக்கு எடுக்கப்படும்

## மகிந்தானந்த அளுத்கமகே திட்டவட்டம்





(கொழும்பு)

இந்த அரசாங்கத்திலுள்ள அமைச்சரவை அந்தஸ்துள்ள 30 அமைச்சர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் காணப்படுவதாகவும் அவற்றை 2020 இல் அமைக்கப்படும் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசாங்கத்தின் கீழ் விசாரணைக்கு எடுக்கப்படும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவர கூட்டு எதிர்க்கட்சியால் டொப் -20 நிகழ்ச்சித் திட்டத்தை, டொப் -30 ஆக மாற்ற வேண்டி ஏற்பட்டுள்ளது. காரணம், அமைச்சரவையில் உள்ள 30 பேருக்கு எதிராகவும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன. இலஞ்ச ஊழல் முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு இதுவரையில் 13 முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் எதிர்க்கட்சி செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# கண்டி எசலபெரஹராவிற்கு முழுமையான பாதுகாப்பு

## பிரதமர் ரணில் உறுதி



(கண்டி)

வரலாற்றுப் பாரம்பரிய மிக்க கண்டி எசல பெரஹரவின் நிகழ்வுகளை முன்னெடுப்பதற்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், இவ்விடயம் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினர் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவார்கள் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கண்டி எசல பெரஹரவின் பாதுகாப்பு தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் கண்டி தொல்பொருள் திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் அஸ்கிரிய பீட மாநாயக்க தேரர் வரகாகொட ஞானரத்ன தேரர், மல்வத்து பீட மாநாயக்க தேரர் திவுல்கும்புரே விமல தம்ம தேரர், தலதா மாளிகையின் நிர்வாகப் பிரிவு உட்பட பௌத்த மதப் பிரதானிகளும் பாதுகாப்பு பிரதானிகளும் கலந்து கொண்டார்கள். (ஐ)

## குமுதினியை தாக்கிய "குடு குமாரி"

(இரத்மலானை)

இரத்மலானை- வெடிகந்த பிரதேசத்தில் வசிக்கும் தெஹிவளை- கல்கிஸ்ஸ மாநகர சபையின் உறுப்பினர் குமுதினியின் வீட்டுக்கு வந்த பெண்ணொருவர் உறுப்பினரை அச்சுறுத்தி, அவர் மீது தாக்குதலை நடத்தியுள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள மாநகர சபை உறுப்பினர் குமுதினி, போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் "குடு குமாரி" என்ற பெண்ணே தன்மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில், கல்கிஸ்ஸ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஐ.நா.அறிக்கையாளரை அனுமதித்த பதில் வெளிவிவகார செயலர் பதவி நீக்கம்

## ஜனாதிபதி மைத்திரி உத்தரவு



(கொழும்பு)

தலைமை நீதியரசர் மற்றும் மேல்நீதிமன்ற நீதிபதிகளை, ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் சந்திப்பதற்கு ஒழுங்கு செய்யுமாறு நீதியமைச்சின் செயலருக்கு அறிவுறுத்தலை அனுப்பிய- வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலர் அகமட் ஜவாட்டை பதவியில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

சுதந்திரமாக ஒன்று கூடுவதற்கான உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் கிளெமென்ற் நயலெட்சோசி வூல், நீதிபதிகளைச் சந்திக்கவிருந்த நிலையில், அதனைத் தடுக்குமாறு சபாநாயகரிடம் எதிர்க்கட்சியினர் கோரினர். அதற்கமைய, அந்தச் சந்திப்பை நிறுத்துவதற்கு சபாநாயகர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வெளிவிவகார அமைச்சர் ரவிநாத் ஆரியசிங்கவுக்கு பிறப்பித்துள்ள உத்தரவில், வெளிவிவகார அமைச்சின் பதில் செயலரும் மேலதிக செயலாளருமான அகமட் ஜவாட்டை அந்தப் பதவியில் இருந்து நீக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.



அதேவேளை, சபாநாயகர் கரு ஜெயசூரியவும் வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலர் அகமட் ஜவாட்டை அழைத்து, எதிர்க்கட்சியினரின் கரிசனையை வெளிப்படுத்தியுள்ளார். (ஐ)

# தொடர்மாடி வீடுகளின் (Condominium) கூட்டுச் சொத்துரிமையும் அதன் பராமரிப்பும்

10

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



முகாமைத்துவ கழகத்தின் நிதியில் பிரதானமான இடம் வகிப்பது அலகு/வீட்டு உரிமையாளர்களினால் செலுத்தப்படும் உறுப்புரிமைப் பணமாகும். முகாமைத்துவக் கழகத்தின்/ கூட்டுத்தாபனத்தின் பொதுக் கூட்டத்தில் தேவையின் பிரகாரம் காலத்துக்கு காலம் பணத்தை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கலாம். அவ்வாறே பொதுக்கூட்டமொன்றில் கூட்டுரிமை ஆதனச் சொத்தில் உரிமையாளர்களின் பங்கு மதிப்பின் பிரகாரம் உரிமையாளர்களின் உதவு தொகைப் பணத்தை தீர்மானித்துக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறே தாமதமான உறுப்புரிமைப் பணம் தொடர்பாக வட்டியின் அளவை தீர்மானித்தலும் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

அவ்வாறே பொதுக்கூட்டமொன்றில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு முகாமைத்துவ கழகத்தின் நிதியை முதலீடு செய்யவும் முடியும். அவ்வாறே மின்சாரம், நீர் அல்லது வேறு பயன்பாட்டுச் சேவைகள் துண்டிக்கப்பட்ட போது வைப்பாக அல்லது தண்டப்பணமாக அலகு உரிமையாளர்கள் செலுத்த வேண்டிய அளவைத் தீர்மானிப்பதும் பொதுக் கூட்டமொன்றில் செய்யப்படுதல் வேண்டும்.


மேற்கூறப்பட்ட வகையில் தேடப்பட்ட நிதி முகாமைத்துவ கழகத்தின் பெயரில் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படுதல் வேண்டும். தேவைகளின் பிரகாரம் அவை அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் இருவரினால் பெறப்பட்டு முகாமைத்துவ கழகத்தின் கணக்கில் வைத்தல் வேண்டும். இவ்வாறு சேர்க்கப்படும் நிதி இரு முக்கிய பகுதியினைக் கொண்டுள்ளது.

முதலாவது நாளாந்தம் மற்றும் மாதாந்தம் பொதுவாகச் செய்யப்பட வேண்டிய கொடுப்பனவுகளாகும். அவையாவன, வீட்டு வடிகாலமைப்பில் சிறுபழுதுபார்தல்கள், கழிவு அகற்றுவதற்கான கட்டணம் செலுத்துதல், பொது நீர், மின்சாரக் கட்டணம் செலுத்துதல், பாதுகாப்பு,பொதுக்கூறுகளைச் சுத்தம் செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இரண்டாவது பொதுப் பாவனைகளில் அடிப்படைத் திருத்தங்களுடன் தொடர்பான அவசரச் செலவுகள் உதாரணமாக நீர்க்குழாய்களைப் புதுப்பித்தல்கள், கூரையை அகற்றிப் புதுப்பித்தல் போன்ற அதிக பணம் செலவாகுபவை என்பனவற்றுக்காக ஒரு நிதி தேவை. இது கூட்டாட்சி சொத்துச் சட்டத்தில் செல்வ நிதி அல்லது கடன்தீர் நிதி **(sinking fund)** என அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கடன்தீர் நிதிக்காக **(sinking fund)** ஒதுக்கப்பட வேண்டிய பண அளவு **(amount)** பொதுக் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்படலாம். இக் கடன்தீர் நிதிச் செலவுகளுக்குட்படக் கூடியது என்று பொதுக் கூட்டமொன்றில் விசேட பிரேரனை மூலம் அதற்காக அதிகாரமளிக்கப்பட்டிருந்தால் மட்டுமே அதனைப் பாவிக்கலாம். அத்தகைய சந்தர்ப்பமொன்றிலேனும் கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் இணக்கத்தை அச் செலவுக்காகப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது அந்நிதியைப் பாதுகாப்பதற்காகும்.

கூட்டுரிமை ஆதன அலகுகளுக்காக அல்லது அலகு உரிமையாளர்கள் அனுபவிக்கும் சேவைகளுக்காக முகாமைத்துவ கழகம் பணம் செலுத்த வேண்டும். அப்பணம் செலுத்துவதற்கு பொதுக் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டுள்ள உறுப்புரிமைப் பணம் எல்லா அலகு உரிரைமயாளர்களும் கட்டாயமாக செலுத்துதல் வேண்டும். ஏதும் உறுப்புரிமைப் பணத்தைச் செலுத்துமாறு அறிவித்து பணம் செலுத்துவதைத் தவிர்க்கும் அல்லது தவறவிடும் உரிமையாளர் ஒருவருக்கு எதிராக முகாமைத்துவ கழகம் நடவடிக்கை எடுக்கவேண்டும். முகாமைத்துவ கழகத்தினால் அறிவிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் அந் நிலுவைப் பணம் செலுத்தப்படுதல் வேண்டும். அக்காலப் பகுதியில் அதனைச் செலுத்துவதற்குத் தவறினால் அதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை சம்பந்தமாக பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட நடபடியினை பின்பற்றல் வேண்டும். பொதுவாக காலதாமதத்திற்காக வட்டியை அறவிடலாம். அவ்வட்டி முகாமைத்துவ கழகத்தின் உறுப்புரிமைப் பணத்தில் சேர்க்கப்படலாம்.



முகாமைத்துவ கழகம் (Management Corporation) சரியாக இயங்காத காரணத்தினால் ஒரு தொடர்மாடிக் கட்டடத்தின் நிலை

இவ்வாறு பணம் செலுத்த தவறவிடும் அலகு உரிமையாளர்களுக்கு எதிராக அவர்களுக்கு வழங்கப்படும் நீர், மின்சாரம், வாயு போன்ற பொது வசதிகளைத் துண்டிப்பதற்கு முகாமைத்துவ கழகத்துக்கு கூட்டுரிமை ஆதன/ வீடுகள் உரிமைச் சட்டத்தின் 20-ம் பிரிவின் கீழ் உரிமை வழங்கப்பட்டுள்ளது. எனினும் அவ்வாறு சேவைகள் துண்டிக்கப்பட வேண்டி ஏற்பட்டால் அதற்காகப் பொதுக் கூட்டத்தில் விசேட பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டிருந்தால் மட்டுமே முடியும். மேலும் நிலுவைப்பணம் செலுத்துமாறு வேண்டி எழுதப்பட்ட கடிதம் அவ் உரிமையாளர்களுக்கு பதிவுத் தபாலில் அறிவித்து 14 நாட்கள் கழிந்த பின்னர் மட்டுமே அவ்வாறு செய்யலாம். அவ்வாறு கொடுப்பனவுகளைத் தவற விடும் அலகு உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் ஊடாக முகாமைத்துவ கழகம் செயற்பட வேண்டும்.

மாதாந்த உறுப்புரிமைப் பணம் செலுத்துவது கட்டாயமானதொன்றாகும். இதற்கு ஒரு வழக்கினை உதாரணமாகக் குறிப்பிடலாம். முகாமைத்துவக் கழகத்தில் மாதாந்த உறுப்புரிமைப் பணத்தைச் செலுத்தத் தவறும் நபர்களின் நீர் வழங்குதல் துண்டிக்கப்பட்ட போது அவர்கள் அவ்வாறு செய்வது மனித உரிமைகள் மீறப்படுவதாகும் என உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டிருந்தது. கொழும்பு- 12 கொட்டாஞ்சேனை VTV முகாமைத்துவ கழகத்துக்கு எதிராக வழக்கு இலக்க 576/2009 இன் கீழ் தொடர்மாடி வீடுகளில் குடியிருப்பவர்கள் மூன்று பேர் தாக்கல் செய்திருந்த அம் மேன்முறையீட்டை விசாரணைக் கெடுக்காது நிராகரித்து பேணுகை உறுப்புரிமைக்கு கட்டணம் செலுத்துதல் கட்டாயமானது என்று தீர்மானிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

## தொடர்மாடி வீடுகளில் நிர்மாணிக்கப்படும் அனுமதியற்ற கட்டடங்கள்

தொடர்மாடி வீடுகள் முறையான திட்டவமைப்பொன்றுக்கமைய நிர்மாணிக்கப்படுகின்றன. அதன்படி, வீதிக் கட்டமைப்புகள், புகுமுக வழிகள், நடைகூடம், புதை வாயில் குழாய் மூடி, நீர் மற்றும் வடிகாலமைப்புத் தொகுதி, தொலைபேசிகளும் மின் கம்பிகளும், காற்றோட்டம், மின் உயர்த்தி, படிக்கட்டுக்கள், தீயணைப்பு கருவிகள், அவசர வெளியேறுகைக் கதவுகள் ஆகிய அனைத்து வசதிகளும் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள திட்டத்திற்கமைய ஏற்படுத்தப்படுகின்றன.

அதன் பிரகாரம் நிர்மாணிக்கப்படும் தொடர்மாடி வீடுகளை மிக இலகுவில் பராமரிக்க முடியும். மேலும், நீண்ட காலத்தின் பின்னர் தொடர்மாடி வீடுகள் பராமரிக்கப்படுவதை இலகுவாக்குதல், அதற்கான மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தும் பணிகளை கட்டட திட்டவமைப்பிற்கமைய துரிதகதியில் மேற்கொள்ளலாம்.

இந்நிலைமையை உணராத தொடர்மாடி வீட்டு உரிமையாளர்கள் / குடியிருப்பாளர்கள் தொடர்மாடி வீடுகளில் அனுமதியற்ற நிர்மாணங்களை அதாவது மூல திட்டவமைப்பிற்கு இயைபாக அமையாத நிர்மாணங்களை மேற்கொள்ள தூண்டப்பட்டுள்ளமை மிகவும் கவலைக்குரிய விடயமாக உள்ளது.

கடந்த காலத்தில் மிக வேகமாக சகல மாடிவீடுகளிலும் அனுமதியற்ற நிர்மாணங்களை அமைக்கும் செல்நெறியை அவதானிக்க முடிந்தது.

(தொடரும்...)

# முஸ்லிம் மக்களின் வாக்குகளின்றி எவராலும் ஜனாதிபதியாக முடியாது

## ஹிஸ்புல்லா சாடல்



(காத்தான்குடி)

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் மக்களின் வாக்குகளின்றி ஒருவராலும் நாட்டின் ஜனாதிபதியாக முடியாதென்றும் முடிந்தால் ஜனாதிபதியாக வந்து காட்டுங்கள் என்றும் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா பகிரங்கமாக சவால் விடுத்துள்ளார்.**

காத்தான்குடி பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன முதல் சமகால ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன வரை இந்த நாட்டின் அனைத்து ஜனாதிபதிகளையும் முஸ்லிம் மக்களே அதிகாரத்திற்குக் கொண்டு வந்தார்கள் எனச் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய ஜனாதிபதிக்கு முஸ்லிம் மக்கள் வாக்களித்திருக்கவில்லை என்றால் அவரால் ஜனாதிபதியாக வந்திருக்க முடியாது. 8 இலட்சம் முஸ்லிம் மக்கள் அவருக்கு வாக்களித்தனர்.

முஸ்லிம் வாக்குகளின்றி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியும் எனச் சிலர் கூறுகின்றனர். எனினும் முஸ்லிம் மக்களின் வாக்குகளின்றி எந்த ஒரு நபராலும், ஜனாதிபதி ஆசனத்தைப் பெற முடியாதென அவர் சவால் விடுத்துள்ளார். (ஐ)

# பல்கலைக்கழக சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பல்லைக்கழக வளாகம் தொடர்பான சர்ச்சையையடுத்து தனியார் பல்கலைக் கழகங்களை ஒழுங்குபடுத்துவதற்காக பல்கலைக்கழகச் சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வருவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 1978 ஆம் ஆண்டு பல்கலைக்கழக திருத்தச் சட்டத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

இந்தச் சட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்ட திருத்தத்தின்படி, ஒவ்வொரு பட்டப்படிப்பு வழங்கும் பல்கலைக்கழகங்கள் இனம், மதம், பாலினம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாது தகுதியை கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும்.

மேலும், ஒவ்வொரு பல்கலைக்கழகங்களும் அதன் வருடாந்த கணக்குகளையும், பெறப்பட்ட அனைத்து நன்கொடைகளையும் அறிக்கையிட்டு வெளிப்படுத்த வேண்டும்.

இந் நிலையில் மட்டக்களப்பு பல்கலைக்கழக வளாகம் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை சவுதி அரேபியாவிலுள்ள சட்டவிரோத அமைப்பொன்றிடமிருந்து பெறப்பட்டமை ஆரம்பகட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளும் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திடீரென மயங்கி விழுந்து மாணவன் பரிதாபமாகப் பலி

(குருநாகல்)

குருநாகல் - மாவதகம - டீ.பீ.வித்தியாலயத்தில் கல்வி கற்று வந்த பாடசாலை மாணவர் ஒருவர் பாடசாலையில் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

அவர் நேற்றுக் காலை பாடசாலை மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மாவதகம- கலகெதரப் பகுதியைச் சேர்ந்த 12 வயதான மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாணவர் உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை. (ஐ)

# தகவல்கள் வழங்கிய நபருக்கு 50லட்சம் ரூபா நிதி அன்பளிப்பு

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் அம்பாறை சாய்ந்தமருது பிரதேசத்தில் கைப்பற்றப்பட்ட வெடி பொருட்கள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய வாகனச் சாரதிக்கு 50 இலட்ச ரூபா நிதி அன்பளிப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் வழங்கினார். தகவல் வழங்கிய ஒருவருக்கு வழங்கப்பட்ட அதிகூடிய பணமாக இது கருதப்படுகிறது.(ஐ)

# வீட்டில் தீ



(நெளுக்குளம்)

வவுனியா பறன்நட்டகல் கிராமத்தில் வீடொன்றில் பற்றிய தீயை நகரசபையின் தீயணைப்பு படையினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தற்காலிக வீடொன்றில் அனைவரும் வெளியில் சென்றிருந்த சமயம் நேற்று முன்தினம் மாலை திடீரென தீ ஏற்பட்டுள்ளது.

இத் தீ விபத்தினால் வீட்டில் உள்ள உடைமைகள் அனைத்தும் சேதமடைந்துள்ள போதிலும் எவரும் வீட்டில் குறித்த நேரத் தில் இல்லாததால் எவ்வித உயிர் ஆபத்துக்களும் ஏற்படவில்லை.

இந்நிலையில் குறித்த வீட்டின் மின்சார இணைப்பு நேற்று முன்தினம் மீள பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த நிலையில் இத் தீ விபத்து ஏற்பட்டுள்ளமையினால் மின்சார ஒழுக்கினால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (9-250- 299)

# நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படவில்லை

(கொழும்பு)

மாலபே நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை இதுவரையில் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படவில்லை என சுகாதார அமைச்சின் நிதி மற்றும் கணக்கியல் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த சுவர்ணதிலக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சி வழங்கிய அவர், 2019 ஆம் ஆண்டில் இதுவரையில் குறித்த வைத்தியசாலையின் நடவடிக்கைகளுக்காக 182 மில்லியன் ரூபா அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்க நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவில், நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலைக்காக அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட பணம் தொடர்பில் நேற்று முன்தினம் விசாரணைகள் இடம்பெற்றன.

இதன்போது குறித்த வைத்தியசாலையின் நடவடிக்கைகளுக்காகவும் ஊழியர்கள் 39 பேரின் சம்பளத்திற்காகவும் அரசாங்கத்தின் பணம் செலவிடப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# யானைகளை விரட்ட வெடி போதாது

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள வனஜீவராசிகள் திணைக்களத்தில் நாளாந்தம் சராசரி 40 விவசாயிகள் யானைவெடியினை பெற்று வருவதாக வனஜீவராசிகள் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அதிகளவில் யானை தொல்லை காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்து வரும் நிலையில் கிராம சேவகரின் கடிதத்துடன் செல்லும் விவசாயி ஒருவருக்கு இரண்டு யானைவெடிகளை மாத்திரம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் வழங்கி வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளார்கள்.

ஒரே இரவில் இரண்டு வெடிகள் காணாத நிலை ஏற்பட்டுள்ளன என்றும் அவ்வளவிற்கு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றன என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளார்கள்.

தற்போது சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில்யானைகளின்தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது. எனவே இந்த வெடியின் எண்ணிக்கையினை கூட்டித்தர வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

ஒரு இரவில் நான்கு தடவைக்கு மேல் காட்டுயானைகள் வயல் நிலத்திற்குள் புகுந்து அழிவினை ஏற்படுத்துகின்றன. நாளாந்தம் நாங்கள் வயல் காவலுக்காக கடைகளில் இரண்டு வெடி பெட்டிகளை வாங்கி கொளுத்தியே யானையினை கலைக்கின்றோம். வனஜீவராசிகள் திணைக்களம் கொடுக்கும் இரண்டு வெடிகள் ஒரு இரவு யானைக் காவலுக்கு போதாது என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளார்கள். (9-315)



# கல்முனை விவகாரத்தில் ஓகஸ்ட் 5ற்குள் பிரதமர் தீர்வு வழங்க வேண்டும்

## ஹக்கீம் வலியுறுத்து

(கல்முனை)

கல்முனையில் தோன்றியுள்ள நிர்வாக ரீதியான பிரச்சினைகளுக்கு எந்தத் தரப்புக்கும் பாதிப்பில்லாத வகையில் தீர்வு காண வேண்டிய பொறுப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அத்தோடு, ஐக்கிய தேசிய முன்னணியின் அங்கத்துவக் கட்சிகள் கூட்டணியில் கைச்சாத்திடும் நிகழ்வு எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறவிருப்பதால், அதற்கு முன்னர் பிரதமர் நல்லதொரு முடிவை அறிவிப்பார் என நாம் நம்புகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

சாய்ந்தமருதுக்குத் தனியான உள்ளூராட்சிச் சபை வழங்குவது குறித்து கட்சிப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு நேற்று முன்தினம் புதன் கிழமை ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

"கல்முனையை நான்காகப் பிரித்து சாய்ந்தமருதுக்கு சபை வழங்கும் தீர்மானம் இருக்கத்தக்க நிலையில், தற்போது கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரச்சினை பூதாகரமாகியுள்ளது.

பேரினவாத சக்திகளுடன் இணைந்து இப்பிரச்சினை தேசிய பிரச்சினையாக உருமாற்றம் பெற்றுள்ளது. மக்கள் செல்வாக்கை இழந்துள்ள தமிழ் அரசியல்வாதிகள் சிலர் இப்பிரச்சினையில் அரசியல் இலாபம் தேட முனைகின்றனர்.


நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையுடன் பேசித்தான் இதற்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டும். கல்முனை விடயத்தில் தமிழ்த்தரப்பு எவ்வளவு தூரம் விட்டுக்கொடுப்புச் செய்வார்கள் என்பதுதான் இதிலுள்ள பிரச்சினை. முஸ்லிம் தரப்பில் விட்டுக்கொடுப்பு செய்தாலும் அதற்கும் சில எல்லைகள் இருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் எந்தத் தரப்புக்கும் பாதிப்பில்லாமல் தீர்வைப் பெற்றுத்தர வேண்டிய தார்மீகப் பொறுப்பு பிரதமருக்கு இருக்கின்றது.

முன்னைய ஆட்சியின் போதே கல்முனை பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், கல்முனையில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் இணக்கப்பாடின்றி சர்வாதிகார ரீதியில் இதற்குத் தீர்வுகாண முடியாது.

தீர்வுகள் புத்திசாதுரியத்தால் சாதிக்கப்பட வேண்டும். அதை விடுத்து மக்களை உணர்ச்சி வசப்படுத்தி தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து, கல்முனையிலுள்ள நிர்வாக ரீதியான பிரச்சினைகள் அனைத்தும் விரைவில் தீர்க்கப்படும். கல்முனையை ஏக காலத்தில் நான்காகப் பிரித்து, அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வுவரும் நேரத்தில் சாய்ந்தமருதுக்கும் தனியான உள்ளூராட்சிச்சபை வழங்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# இலங்கையில் இராட்சத வண்ணத்துப்பூச்சி



(கொழும்பு)

இலங்கையில் இராட்சத வண்ணத்துப்பூச்சி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரியில் எட்லஸ் மோத் என்ற பெயருடைய இராட்சத வண்ணத்துப்பூச்சி இனங்காணப்பட்டுள்ளது.

இந்த வண்ணத்துப்பூச்சி 22 சென்ரிமீற்றர் நீளத்தை கொண்டுள்ளது. இறகுகளின் உயரம் 10 சென்ரி மீற்றர்.

வரட்சியான காலப்பகுதிகளில் ஆசிய நாடுகளில் இந்த வகையான வண்ணத்துப்பூச்சிகள் தென்படுகின்றன.

தற்போது இலங்கையின் சப்ரகமுவ பகுதியில் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த வண்ணத்துப்பூச்சியை பார்வையிடுவதற்கு பெருமளவு மக்கள் படையெடுக்கின்றனர். (ஐ)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1788

### அசோகா

எல்லா உயிர்களிடத்தும் அன்பாய் இருங்கள்
ஆனால் மனிதர்களிடம் மட்டும்
விழிப்பாய் இருங்கள்



### வெண்மதி

பச்சோந்தி ஒன்று தற்கொலை செய்யும் முன்
ஒரு கடிதத்தில் இப்படி எழுதியிருந்தது...
நிறம் மாறும் போட்டியில் மனிதர்களிடம்
நான் தோல்வியடைந்தேன்



### அபிநந்தன்







### விஜயா

தனது பாதையைத் தேடிக்கொள்ளும்
தண்ணீராக இரு... அடுத்தவர் பாதையை
தடுக்கும் பாறாங்கல்லாக இருந்து விடாதே..!



### கவிதாஞ்சலி

உடைந்த பொருளை ஒட்ட வைத்து என்னதான்
அலங்காரம் செய்தாலும்
அதன் பழைய அழகை திரும்பப் பெற இயலாது.
சில உறவுகளும் அப்படித்தான்



### ராகினி

பணம் இருப்பவனை தூங்கவிடாது!
இல்லாதவனை வாழவிடாது!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சம்பளப் பிரச்சினைக்கு மட்டும் தீர்வுகாணும் வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டாம்

## வேலுகுமார் கோரிக்கை



(கண்டி)

மலையக மக்களின் விடயத்தில், சம்பளப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வேட்பாளருக்கே ஆதரவு என்ற விடயத்தை மட்டும் முன்னி லைப்படுத்தி ஏனைய கோரிக்கைகளை மழுங்கடிக்க வேண்டாம் என ஜன நாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் கோரிக்கை விடுத்தார்.

கண்டியைத் தளமாகக் கொண்டியங்கும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் தெரிவித்த அவர், "இலங்கை அரசியலில் இனிவரும் நாட்கள் மிக முக்கியமானவை. தேசிய மட்டத்திலான தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

இந்நிலையில் சிறுபான்மையினத்தவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுடன் தேசிய கட்சிகள், பேச்சுக்களை நடத்த முற்படும். எனவே, நாம் விழிப்புடனும் மககள்சார் கோரிக்கைகளை முன்வைப்பதற்கும் தயார் நிலையிலேயே இருக்க வேண்டும்.

பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் எமது மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். உரிமைசார் கோரிக்கைகளும் இருக்கின்றன. எனவே, சம்பளப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வேட்பாளருக்கே ஆதரவு என்ற விடயத்தை மட்டும் முன்னிலைப்படுத்தி ஏனைய கோரிக்கைகளை மழுங்கடிக்க வேண்டாம்.

மலையகம் என்றதுமே சம்பளப் பிரச்சினை மட்டும்தான் என்ற விம்பம் உருவாக்கப்பட்டுள்ளது. உண்மை நிலைமை அதுவல்ல. தீர்க்கப்படவேண்டிய பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றில் முன்னுரிமை வழங்கப்படவேண்டிய விடயங்களில் இந்த சம்பளப் பிரச்சினையும் ஒன்று. எனவே, நாம் தூரநோக்குடன் செயற்பட வேண்டும்.

கூட்டு ஒப்பந்தத்துக்கு முடிவு கட்டவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம். அதற்கான சிறந்த மாற்று வழி என்ன என்பது தொடர்பாக ஆராய்ந்தோம். இதற்கமைய பெருந்தோட்டங்களை, தோட்டத் தொழிலாளர்களுக்கே பகிர்ந்தளித்து அவர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதே சிறப்பான தேர்வு என கண்டறிந்தோம்.

இதை வெற்றிகரமாக செய்து முடிக்கவேண்டும் என்பதுடன், தொழிலாளர்கள் நல்ல நிலைமைக்கு வரும் வரையில் அரசாங்கம் கைகொடுக்க வேண்டும். காணியை பகிர்ந்தளிப்பதுடன் மட்டும் அரசாங்கத்தின் கடப்பாடு முடிந்துவிடாது.

அத்துடன், மலையகத் தமிழர்களும் தேசிய இனம்தான். அவர்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

இவற்றை நிறைவேற்றுவதற்கு எவர் முன்வருகின்றார்களோ அவர்களுக்கு ஆதரவு வழங்குவது குறித்து தமிழ் முற்போக்கு கூட்டணி கூடி முடிவெடுக்கும். இது குறித்து மக்களுடனும் நாம் கலந்துரையாடுவோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# 12 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டவர் கைக்குண்டுடன் ஜா - எலயில் கைது

(கொழும்பு)

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கை வெடி குண்டுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே ஜா-எல - எல பகுதியில் வைத்து நேற்று குறித்த சந்தேக நபரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சந்தேக நபர் சம்பவ தினத்தன்று முற்பகல் 11 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். சந்தேக நபரை சோதனையிட்ட போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கை வெடிகுண்டு மீட்கப்பட்டது.

மேலும் சந்தேக நபர் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஜா-எல, கந்தானை, மாபாகே, வத்தளை, நீர்கொழும்பு, மாரவில மற்றும் மினுவாங்கொட ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவங்களுடன் சந்தேக நபர் தொடர்புபட்டுள்ளார்.

இந்தக் குற்றச்செயல்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட வழக்கு விசாரணைகளின் போது சந்தேக நபரை கைது செய்வதற்கு நீதிமன்றத்தினால் 12 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளமை பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்து ள்ளது.

கொடுகொட பகுதியை சேர்ந்த 31 வயதுடைய குறித்த சந்தேக நபர் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ)

# அரசு வெளிவாரிப் பட்டதாரிகளை நிராகரிக்கக் காரணம் என்ன?

## மகிந்த ராஜபக்ஷ கேள்வி



(கொழும்பு)

நாங்கள் 70 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுத்தபோது வெளிவாரி, உள்வாரி என பார்க்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன் அரசாங்கம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளபோதும் வெளிவாரி பட்டதாரிகளை புறக்கணித்திருக்கி ன்றது.

ஆகவே வெளிவாரிப் பட்டதாரிகளை நிராகரிப்பது எந்த அடிப்படையில் என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிலையியற் கட்டளை 27/ 2இன் கீழ் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஜ)

# செய்தித்துளிகள்

## புகையிரதத்துடன் மோதி பெண்ஒருவர் பலி

(கொழும்பு)

கந்தான-ஆனியகந்த பகுதியில் ரயில் கடவையில் தொடரூந்து மோதியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று கொழும்பில் இருந்து சிலாபம் நோக்கி பயணித்த ரயிலுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் குறித்த பெண் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் கொஸ்பெலன பகுதியைச் சேர்ந்த 25 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது. (ஜ)


## புத்தர் சிலை உடைப்பு விவகாரம் சந்தேக நபர்களின் மறியல் நீடிப்பு

(மாவனெல்ல)

மாவனெல்ல பிரதேசத்தில் புத்தர் சிலைகள் உடைப்பு விவகாரம் தொடர்பில், கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் 15 பேரினதும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நேற்றைய தினம் மாவனெல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, இவர்களை அடுத்த மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ஜ)

## கோத்தாவுக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு உயர்நீதிமன்றம் தடை



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கு தொடர்பில் விசேட மேல் நீதிமன்றத்துக்கு உயர் நீதிமன்றம் தடையுத்தரவொன்றை பிறப்பித்துள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கினை ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வரை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கே உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.


மெதமுலன டீ.ஏ.ராஜபக்ஷ நினைவு அருங்காட்சியகத்தை நிர்மாணிக்கும் போது அரச நிதியான 33.9 மில்லியன் ரூபாவை மோசடி செய்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், குறித்த வழக்கு விசேட மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 40 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 90 | 250 | 200 | 100 |
| தக்காளி | 100 | 90 | 100 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 140 | 140 | 110 | 130 |
| கோவா | 80 | 70 | 80 | 55 | 80 |
| கரட் | 160 | 160 | 180 | 120 | 160 |
| பூசணி | 50 | 90 | 70 | 50 | 80 |
| புடோல் | 80 | 80 | 60 | 70 | 100 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 140 | 140 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 120 | 115 | 120 |
| பாகற்காய் | 140 | 160 | 140 | 170 | 200 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 60 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 110 | 60 | 120 |
| பயற்றங்காய் | 40 | 80 | 40 | 50 | 80 |
| லீக்ஸ் | 60 | 70 | 100 | 70 | 100 |
| பீற்றூட் | 80 | 50 | 70 | 60 | 120 |
| கறிமிளகாய் | 150 | 140 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 60 | 80 | 60 | 50 | 80 |
| போஞ்சி | 120 | 130 | 160 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 30 | 30 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 180 | 200 | 200 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 200 | 180 | 140 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 140 | 160 | 120 | 200 |
| முள்ளங்கி | 80 | 60 | 60 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 60 | 60 | 120 | 60 |




# உயிரை காப்பாற்றிய வைத்தியம்



மான் குட்டி சுந்தருக்கு படிக்க வேண்டும் என்று ஆசை. ஆனால் அம்மா ஒத்துக்கொள்ள மறுக்கிறாள். அதனால் தினமும் பாடசாலையைத் தாண்டி செல்லும் போதெல்லாம் பாடசாலையை ஏக்கத்துடன் பார்ப்பான்.

அங்கு குட்டி குரங்குகள், பூனைகள், நாய், நரி, ஓநாய், குட்டிகள் போன்றவைகளெல்லாம் சந்தோசமாய் பாடசாலைக்கு செல்லும்போது தான் மட்டும் அம்மாவுடன் எப்பொழுதும் புல்லை மேய்ந்து கொண்டிருப்பது மான் குட்டி சுந்தருக்கு கவலையாக இருந்தது. அம்மாவிடம் அழுது ஆர்ப்பாட்டம் செய்தது. அம்மா அதெல்லாம் நமக்கு வேண்டாம். நாம் இவர்களுடன் கலந்து கொண்டால் என்றாவது ஒரு நாள் உன்னை சாப்பிட்டு விடுவார்கள் என்று பயமுறுத்தியது.

மான் குட்டி சுந்தருக்கு இதனால் வருத்தம் பெருகிக்கொண்டே வந்தது. அந்த பாடசாலையை நடத்திக்கொண்டிருந்தது கரடியார். அவர் தினமும் பாடசாலைக்கு வந்து மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார். அந்தப் பாடசாலைக்கு ஆசிரியர்களாக, யானையாரும், ஓநாயும், இருந்தன. அவைகள் மிகுந்த கண்டிப்பானவைகள். அதனால் குரங்கு குட்டிகள் கூட தன் வாலை சுருட்டி வைத்து அடக்கமாய் இருந்தன.

ஒருநாள் ஏதேச்சையாக கரடியாரை மான் குட்டி சுந்தர் சந்தித்தது. அது தான் படிக்க வேண்டும் என்ற ஆசையை கரடியாரிடம் சொன்னது. கரடியாரும் நாளையில் இருந்து பாடசாலைக்கு வா என்று சொன்னது. அம்மா என்னை அனுப்ப மறுக்கிறாள் என்று கரடியாரிடம் சொல்ல, கரடியாரும் நான் உன் அம்மாவிடம் பேசுகிறேன் என்றது.

அதுபோல் மறுநாள் கரடியார் அம்மா மானை சந்தித்து இந்த காலத்தில் படிப்பு என்பது எவ்வளவு அவசியம் என்று எடுத்துச் சொன்னது. அம்மா மான் ஆரம்பத்தில் ஒத்துக்கொள்ளவில்லை, காரணம் கேட்டதற்கு படித்து கொண்டிருப்பவைகள் எல்லாம் மாமிச உண்ணிகள், அப்படியிருக்க என் குழந்தையை எப்படி நம்பி அனுப்புவது என்று சொன்னது.

அதைக் கேட்ட கரடி அப்படியானால் யானை எப்படி அவர்களுக்கு பாடம் எடுக்கிறது? என்று கேட்டது. அம்மா மான் யானை மிகப்பெரிய விலங்கு, அது மட்டுமல்லாமல் மிகுந்த பலசாலி கூட, அதனால் எல்லா மிருகங்களும் அதற்கு பயப்பட்டு ஒழுங்காக இருக்கின்றன என்றது. கரடியார் அந்த யானையையே உன் மான் குட்டிக்கு பாதுகாப்பாக இருக்க சொல்லுகிறேன், என்ன சொல்லுகிறாய் என்று கேட்டது.

அம்மா மான் கடைசியாக ஒத்துக்கொண்டது. மான் குட்டி சுந்தருக்கு ஒரே மகிழ்ச்சி. நாளையில் இருந்து நானும் பாடசாலைக்கு போகிறேன் என்று போவோர் வருவோர் எல்லோரிடமும் சொல்லி மகிழ்ந்தது.

மான் குட்டி சுந்தர் பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்து நான் கைந்து மாதங்கள் ஓடி விட்டன. அங்கெல்லாம் மனிதர்களை போல் பன்னிரெண்டு வருடங்கள் அடிப்படை கல்வி கற்க வேண்டியதில்லை. காரணம், மனிதனை போல் ஐம்பது ஆறுபது ஆண்டுகளுக்கு மேல் வாழ்வது என்பது யானை மற்றும் ஒரு சில மிருகங்கள்தான்.

மற்றவைகளெல்லாம், பத்து பன்னிரெண்டு வருடங்கள் வாழ் நாளையே கொண்டிருக்கும்.

அதனால் ஒரு வருட படிப்பு முடிந்தாலே அது பன்னிரெண்டு வகுப்பு முடித்ததற்க்கு சமம். மான் குட்டி சுந்தர் ஒரு வருட படிப்பு முடிந்தவுடன், கரடியாரை சந்தித்தது.

கரடியார் மான் குட்டி சுந்தரை பாராட்டி நீ நன்றாக படித்து முடித்து விட்டாய், நல்ல அறிவாளியாகவும் ஆகி விட்டாய். நீ ஏன் மருத்துவம் படிக்கக்கூடாது என்று கேட்டது. எனக்கும் ஆசை தான், அம்மா ஒத்துக்கொள்ள வேண்டுமே என்று சொன்னது. நீ கவலைப்படாதே, நான் உன் அம்மாவிடம் பேசுகிறேன் என்று கரடியார் சொன்னது.

சொன்னது போலவே மான் குட்டி சுந்தரை தன் சொந்த பாதுகாப்பில் காட்டுக்குள் தொலை தூரத்தில் உள்ள மருத்துவர் நரியாரிடம் மருத்துவம் கற்க அனுப்பியது. மான் குட்டி சுந்தரும் அங்கு ஒரு வருடம் நல்ல முறையில் வைத்தியம் கற்று இங்கு வந்து சேர்ந்தது. கரடியார் அதைப்பாராட்டி இங்குள்ள மிருகங்களுக்கு நீதான் இனி வைத்தியர் என்று சொல்லி ஒரு வைத்தியசாலையையும் நிறுவிக் கொடுத்தது.

இப்பொழுது மான் குட்டி சுந்தர் வைத்தியர் ஆகி விட்டார். நாமும் அதனை வைத்தியர் சுந்தர் என்று அழைப்போம்.

ஒருநாள் மான் குட்டி வைத்தியர் சுந்தர் காட்டுக்குள் மூலிகைகளை பறித்துக்கொண்டிருந்த பொழுது ஒரு மிருகத்தின் கூக்குரல் கேட்டது. அந்த இடத்துக்கு விரைந்து சென்று பார்த்தது. அங்கு புலி ஒன்று வரிக்குதிரைய பிடித்து கொல்வதற்காக தயாராக இருந்தது. அருகில் வரிக்குதிரையின் குட்டி அம்மாவை காப்பாற்ற முடியாமல் கதறிக் கொண்டிருந்த்து.

இதைப் பார்த்த வைத்தியர் மான் குட்டி சுந்தர், நேராக புலியிடம் சென்று நீங்கள் செய்வது நியாயம் இல்லை, ஒரு குட்டியை வைத்திருக்கும் தாயை கொல்லலாமா? என்று கேட்டது.

நீ யாரடா என்னை கேட்பது? என்று மிரட்டியது புலி. ஐயா நான் இந்த காட்டின் வைத்தியர் என்று சொன்னது. உடனே புலி வைத்தியரா? என்று மேலும் கீழும் பார்த்தது. உங்களுக்கு சந்தேகம் என்றால் நம் கரடியாரிடம் கேளுங்கள் என்று சொன்னது மான் குட்டி சுந்தர். அதெல்லாம் வேண்டாம். நான் இந்த வரிக்குதிரையை என் குட்டிகளுக்கு கொண்டு போகலாம் என்று இருந்தேன். நீ வைத்தியர் என்றால் எனக்கு காரியம் ஒன்று ஆக வேண்டி இருக்கிறது. அங்கு என் குட்டிகளில் ஒன்று இரண்டு நாட்களாக ஒன்றும் சாப்பிடாமல் இருக்கிறான், அவனை கவனிக்க வேண்டும், வருகிறாயா? நான் வருகிறேன், ஆனால் இந்த வரிக்குதிரையை நீங்கள் விட்டு விட வேண்டும். சரி உனக்காக இல்லை, உன் வைத்தியத்துக்காக இந்த வரிக்குதிரையை, விட்டு விடுகிறேன். சொன்னதும் அதன் பிடியில் இருந்து தப்பித்த வரிக்குதிரை மான்குட்டி சுந்தருடன் வந்து மிக்க நன்றி ! ஆனால் நீ அதன் இடத்துக்கு போய் மாட்டிக்கொள்ளப் போகிறாய் என்று எனக்கு கவலையாக இருக்கிறது என்றது. என்னைப் பற்றிக்கவலை படாதே. நீ சீக்கிரம் உன் குட்டியை இங்கிருந்து கூட்டிக் கொண்டு போய் விடு என்றது.

புலியுடன் அவர் குகைக்கு சென்ற மான்குட்டி சுந்தர் அங்கு இருந்த புலிக்குட்டியில் ஒன்றுக்கு கடுமையான சுரம் வந்திருப்பதை கண்டு கொண்டது. உடனே புலியாரிடம் ஐயா, உங்கள் குட்டிகளில் ஒன்றுக்கு கடுமயான சுரம் வந்துள்ளது. இதற்கு மருந்து மூலிகையாக என்னிடம் உள்ளது. ஆனால் நீங்கள் இதன் இலைகளை சாப்பிடமாட்டீர்கள். அதனால் நான் ஒரு உபாயம் செய்கிறேன், என்று அங்கிருந்த ஒரு குட்டைக்கு சென்றது. அதில் அந்த மூலிகையை நன்கு கசக்கி அந்த தண்ணீரில் கலக்கி விட்டது. இப்பொழுது அந்த குட்டியை அந்த தண்ணீரை பருக சொன்னது.

இப்படியே இரண்டு முறை மருந்தை கலக்கி தண்ணீரை குடிக்க வைத்ததால் காய்ச்சல் கொஞ்சம் குணமாகி அந்த குட்டி எழுந்து நடமாட ஆரம்பித்த்து. புலிக்கு ஒரே சந்தோசம். மான் குட்டி சுந்தரை பார்த்து உன்னை கடைசியில் அடித்து சாப்பிட்டு விடலாம் என்று நினைத்தேன். ஆனால் நீ ஒரு திறமையான வைத்தியன் என்று நிரூபித்து விட்டாய். உன்னை நான் கொல்ல நினைப்பது பாவம், என்னை போல மற்ற விலங்குகளுக்கும் உன்னால் முடிந்த அளவு வைத்தியம் செய்து காப்பாற்று என்று கூறி அதனை மகிழ்வுடன் வழி அனுப்பி வைத்தது.

## விடுகதைகளும் விடைகளும்

- மரத்துக்கு மேலே பழம், பழத்துக்கு மேலே மரம். அது என்ன?
  **அன்னாசிப் பழம்**
- பகலிலே வெறுங்காடு, இரவெல்லாம் பூக்கள் அது என்ன?
  **வானம்**
- மேகத்தின் பிள்ளை, தாகத்தின் நண்பன். அவன் யார்?
  **மழை**
- ராத்திரி பிறந்த பையன் தலையில் குல்லாவுடன் பிறந்தான். அவன் யார்?
  **காளான்**
- குமுறி குமுறி அழுதிடும், நல்ல சோற்றை தந்திடும். அது என்ன?
  **உலைநீர்**

## பச்சைக்கிளியே வா

பச்சைக்கிளியே வா வா
பாலும் சோறும் உண்ண வா
கொச்சி மஞ்சள் பூச வா
கொஞ்சி விளையாட வா



கவலையெல்லாம் நீங்கவே
களிப்பெருந்து பொங்கவே
பவள வாய் திறந்து நீ
பாடுவாயே சத்தமா

பையப் பைய பறந்து வா
பாடிப் பாடிக் களித்து வா
கையில் வந்து இருக்க வா
கனி அருந்த ஓடி வா

உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால்
உலகம் உன்னை மதிக்கும்.
~ கவியரசு கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால்... சாள்ஸ் நிர்மலநாதனுக்கு ஒரு கடிதம்

பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் அவர்களுக்கு அன்பு வணக்கம்.

நேற்று முன்தினம் (24) பாராளுமன்றத்தில் நீங்கள் ஆற்றிய உரையை அறிய முடிந்தது. தென்கயிலை ஆதீன முதல்வர் மீது கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் வைத்து சிங்கள இனம் சார்ந்த சிலர் சுடுநீர் ஊற்றிய சம்பவத்தைக் கண்டித்து உரையாற்றியிருந்தீர்கள்.

தென்கயிலை ஆதீன சுவாமி மீது சுடுநீர் ஊற்றிய சம்பவத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் இதுவரை கண்டிக்கவோ கருத்துக் கூறவோ இல்லை.

பரவாயில்லை. இந்து சமயம் சார்ந்த விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை எப்போதும் மௌனமாகவே இருந்து வந்துள்ளது.

ஆகையால் அதுபற்றி நாம் இவ்விடத்தில் கருத்துக் கூறவேண்டிய தேவையிராது.

மாறாக, தாங்கள் ஆற்றிய உரையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால், தென்கயிலை ஆதீன குரு முதல்வர் மீது சுடுநீர் ஊற்றியிருக்க முடியுமா? என்று கேள்வி எழுப்பியிருந்தீர்கள்.

இவ்வாறு நீங்கள் பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி நிறைந்த அர்த்தமுடையது என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

அதேநேரம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இருந்திருந்தால், தென்கயிலை ஆதீன குரு முதல்வர் மீது சுடுநீர் ஊற்றுகின்ற சம்பவம் மட்டுமல்ல, மன்னார் மாவட்டத்தில் பாடல் பெற்ற திருக்கேதீச்சரத் திருத்தலத்துக்கு நுழைவாயில் வளைவு கட்டப்படுவதையும் தடுத்திருக்க முடியாது.

இதையும் நீங்கள் பாராளுமன்றத்தில் கூறியிருக்க வேண்டும். ஆனால் அதனை நீங்கள் கூறவில்லை.

இதற்குக் காரணம் மன்னார் திருக்கேதீச்சரத்துக்கென நுழைவாயில் அமைப்பதை தடுத்தவர்களில் தங்களுக்கும் பெரும் பங்குண்டு.

வன்னி மாவட்டத்திலுள்ள இந்து மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினராக வந்த தாங்கள், கத்தோலிக்கமும் இந்து மதமும் எனக்குச் சமமானவை என்று கூறியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு கருதாமல் நடுவுநிலை எனும் அறத்தை மீறி கத்தோலிக்க மதத்தின் பால் நின்று; தமிழினத்தைப் பிரிக்கின்ற முயற்சியில் ஈடுபட்ட ஒரு சில கத்தோலிக்க மதகுருமாரின் கைப்பொம்மையாக இருந்தீர்கள்.

அப்படியானால் தென் கயிலை ஆதீன குரு முதல்வர் மீது சுடுநீர் ஊற்றிய சிங்கள மத வெறியர்களுக்கும் தங்களுக்குமான வித்தியாசம் என்ன என்பது இந்து மக்களுக்குப் புரியாமலே உள்ளது.

எம்மைப் பொறுத்தவரை புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால்; கன்னியாவில் அவர்கள் செய்ததும் மன்னாரில் நீங்கள் செய்ததும் ஒரே தராசில் நிறுவை இடப்பட்டிருக்கும்.

இதற்கு மேலாக; தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால், கூட்டமைப்பின் தலைமை இப்படியெல்லாம் செய்திருக்க முடியுமா என்பதையும் ஒரு கணம் சிந்தித்து அதனையும் உள்ளடக்கி நீங்கள் பாராளுமன்றத்தில் உரையாற்றியிருந்தால், அது **தக்கார்** உரை என்று போற்றப்பட்டிருக்கும்.

# அரசாங்கத்தின் பங்காளியாக கூட்டமைப்பு செயற்படுகிறது

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிங்களவர்கள் தமிழ் மக்களின் விரோதிகள் என்ற பிரசாரத்தையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் அரசாங்கத்தின் பங்காளியாக இருந்து கொண்டு வாக்களித்த மக்களை ஏமாற்றுவதற்கே அரசாங்கத்துக்கு எதிராக செயற்பட்டு வருகின்றது என எதிர்க்கட்சி உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதிய அரசியலமைப்பு தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாக தெரிவித்த அரசாங்கம் இன்னும் எதனையும் செய்யவில்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இங்கு தெரிவிக்கின்றது.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் பங்காளியாகவே இருந்து வருகின்றது. இதனை வாக்களித்த மக்களுக்கு மறைக்கவே அரசாங்கத்துக்கு எதிராக சபையில் கதைக்கின்றனர் என அவர் சபையில் தெரிவித்தார். (ம-3)

## ரஞ்சனின் கருத்தை விசாரிக்க குழு

(கொழும்பு)

மகா சங்கத்தினரை அவமதிக்கும் விதமாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க முன்வைத்த கருத்து தொடர்பாக ஆராய்வதற்கு திலக் மாரப்பன தலைமையில் மூவர் அடங்கிய குழுவினை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார். (ம-3)

## ஹேமசிறி, பூஜிதவுக்கு எதிரான மனு நேற்று முதல் விசாரணைக்கு

(கொழும்பு)

தாக்குதலை தடுக்கத் தவறியது தொடர்பாக இரண்டு உயர்மட்ட அதிகாரிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 12 அடிப்படை உரிமைகள் மீறல் மனு மீதான விசாரணை ஆரம்பமாகியுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களில் தனது இரண்டு குழந்தைகளை இழந்த தந்தையால் தாக்கல் செய்யப்பட்ட மனு, நேற்று வியாழக்கிழமை காலை முதலில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இநத மனுக்கள் தலைமை நீதிபதி ஜெயந்த ஜெயசூர்ய தலைமையிலான ஏழு பேர் கொண்ட நீதிபதி அமர்வின் முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குற்றம் சாட்டப்பட்டவர்களான கட்டாய விடுப்பு வழங்கப்பட்ட பூஜித் ஜயசுந்தர, ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோர் ஏப்ரல் 9ஆம் திகதியே தாக்குதல்கள் குறித்து முன் எச்சரிக்கைகளைப் பெற்றதாக வழக்கறிஞர் காமினி பெரேரா நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

உளவுத்துறை தகவல்கள் கிடைக்கப் பெற்றும் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.(ம-3)

# உள்ளூர் உணவு உற்பத்திகளுக்கான பகுப்பாய்வுக் கருத்தரங்கு

உள்ளூர் உணவு உற்பத்திகளுக்கான தரத்தை உறுதிப்படுத்துவதற்கும் தர நிர்ணயத்தை மேற்கொள்வதன் மூலம் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை வாய்ப்புக்களை இலகுவாக மேற்கொள்வதற்குமான வசதிகள் பனை ஆராய்ச்சி நிறுவனத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

சர்வதேச அங்கீகாரமும் நவீன தொழில்நுட்ப வசதிகளும் கொண்ட நிறுவனமாக பனை ஆராய்ச்சி நிறுவனம் திகழ்கின்றது. தரநிர்ணயத்தை அளவிடும் இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் பரிசோதனைகளை மேற்கொண்டு உணவு உற்பத்திகளின் தரத்தை அறிந்து கொள்ளலாம். வடமாகாணத்தில் ISO தரச் சான்றிதழை இந்நிறுவனம் பெற்றிருப்பதனால் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தரப்பரிசோதனை அறிக்கையை உணவு உற்பத்திகளுக்குப் பெற்றுக்கொள்ள முடியும். உள்ளூர் உற்பத்திகளின் தரத்தை அதிகரித்தல் மற்றும் செயன் முறைகளை மேம்படுத்துவதற்கான ஆய்வுகளுடன் கூடிய ஆலோசனைகளை வழங்குகின்றது.

இங்கு பனைசார் உணவு உற்பத்திகள், வெதுப்பக உணவுகள், மா வகைகள், பப்படம், கள், கறித்தூள், பதப்படுத்தப்பட்ட மீன், கருவாடு, நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், ஐஸ்கிறீம், யோகட், பழப்பானங்கள் மற்றும் இதர உணவுப் பொருட்களுக்கான தரப்பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தர நிர்ணய அறிக்கைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிறுவன பகுப்பாய்வுச் செயன்முறைகள் தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு பனை ஆராய்ச்சி நிறுவன கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆய்வாளர்கள், வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள், எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் தொழில் முயற்சியாளர்கள், உணவு உற்பத்தியாளர்கள் பங்கு பற்றி பயனடையுமாறு பனை ஆராய்ச்சி நிறுவன முகாமையாளர் சி.சிறீ விஜேந்திரன் அறிவித்துள்ளார். (9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### அமைப்பு

இந்தப் படைப்பு முழுவதும் ஒரு மாபெரும் (பிரமாணடமான) அமைபபு. எலலாம அணுககளால ஆககபபட்டவை. அணுக்கள் ஒரு குறிப்பிட்ட விதத்தில் (Pattern) ஒரு விசேடமான பொருளாகத் தங்களை அமைத்துக் கொள்ள முடிவு செய்து அமைந்த ஒரு அமைப்புத்தான் இந்த முழு உலகமே தவிர வேறெதுமில்லை. அந்த விசேடமான விதங்கள் அவற்றுக்குக் குறிப்பிட்ட குணாங்களைத் தருகின்றன.

அணுககளுககு அவறறின வதஙகளில சலிபபு ஏறபடும போது, தஙகளை மாறறியமைததுககொளள முடிவு செய்வதனால் நிகழ்பவை மரணம். அழிவு, நிலை மாற்றம் (Transformation) ஆகும். உதாரணம் ஒரு அப்பிள் பழத்தின அணுககள "அபபிளாக இருநதது போதும" எனும போது அது அழுகத் தொடங்குகிறது. ஒருபோதும் இருக்கும் விதத்தில் (Pattern) சலிப்பு இல்லை என்றால் அங்கு அழிவு நிகழ முடியாது.

ஒரு அமைப்பு நிலையிலிருந்து மற்றொரு அமைப்பு நிலைககு மாறுவதுமகூட நிகழகிறது. இநதக குறுகிய காலத்திய - நிலையற்ற- மாறும் அமைப்பைத்தான் பெரும் குழப்பம் (Chaos) என்கிறோம். இந்த நிலையற்ற மாறும அமைபபிறகுத தன நிலையிலிருநது தான மாறாமல் மற்றவை மாறுவதற்கு உதவும் பொருள் (ஊக்கி-catalyst) தேவைப்படலாம். அத்தகையது ஞானம். அதனால் உனக்கு இந்த அமைப்பிலிருந்து தப்பிக்க வழியேயில்லை.

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

திருமணம் ஆகாதவன் பிதுர் கர்மாவைச் செய்யலாம். வருஷாப்திகத்துக்குள் தல யாத்திரை செய்யலாம், பிழையில்லை. இறந்தவர்க்குச் செய்யும் கிரியைகளைப் பற்றி சிவ தர்மோத்திரம், கருட புராணம் முதலிய நூல்கள் கூறுகின்றன.

வீட்டில் நாள்தோறும் சிலை வைத்து வழிபடவேண்டிய தில்லை. படம் வைத்து வழிபட்டால் போதும். பாவமும் புண்ணியமும் செய்கின்றவர்களுக்கு உடனே பயன்தரமாட்டா. விதையிட்டுப் பயிர் செய்தாலும் அவை காலததில் தானே பயன்தரும். அதுபோல் இப்போது பாவம புரிபவர் மகிழ்ச்சியாக இருப்பது, அவர்கள் முன்பு செய்த நல் வினை காரணமாகும். ஆதலால் செய்கின்ற அன்றே சுக துக்கங்களை எதிர்பார்ப்பது சரியன்று. (தொடரும்)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## ஆடி மாதம் ஏன் சிறந்தது?

தமிழ மாதஙகளில ஆடி மாதம மடடும சிறபபான மாதமாக கருதப்படுகின்றது. ஏனெனில் இம் மாதம் அம்மனுக்குரிய மாதமாகப் போற்றப்படுகிறது.

அதுமட்டுமின்றி ஆடி மாதத்தில் அம்மனுக்கு ஆடிக்கூழ் செய்வது வழக்கமாகும்.

தட்சிணாயன புண்ணிய காலம் ஆடி மாதத்தில் தான் தொடங்குகிறது.

இபபுணணிய காலததின போது சூடசும சகதிகள வானத்திலிருந்து வெளிப்படும். அந்த சமயத்தில் பூஜைகள் வேத பாராயணங்கள், ஜபங்கள், நீத்தார் வழிபாடுகள் செய்தால் பலன் அதிகமாக கிடைக்கும்.

சூரியன கடக ராசியில சஞசரிககும கால அளவான 31 நாட்கள், 28 நாழிகை, 12 விநாடி கால அளவை கொண்டது ஆடி மாதம். எனவே இதை கற்கடக மாதம் என்றும் சொல்வதுண்டு.

ஒரு கல்ப காலத்தில் ஆடி மாதம் ஒன்றில் தான் பார்வதி தேவி. மலையரசன் மகளாக பிறந்தாள் என்கிறது தேவி பாகவதம் கூறுகின்றது. (தொடரும்)

# முல்லைத்தீவில் உதைபந்தாட்டம் ஆடிய அமைச்சர் சஜித் பிரேமதாஸ



முல்லைத்தீவு கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இளைஞர்களுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத்தலைவரும் வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ உதைபந்தாட்டம் விளையாடி மகிழ்ந்தார்.

முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியில் வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் உதயம் நகர் மாதிரி கிராமத்திற்குள் 25 வீடுகளும் ஆதவன் நகர் மாதிரி கிராமத்தில் 25 வீடுகளுமாக ஐம்பது வீடுகள் அமைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த 24 ஆம் திகதி அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் பங்களிப்புடன் இடம்பெற்றது .

இந்த நிகழ்வுக்கு வருகை தந்த அமைச்சர் கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக்கழக வீரர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களுடன் இணைந்து உதைபந்தாட்ட விளையாட்டில் ஈடுபட்டு மகிழ்வடைந்தார்.

இறுதியாக உதயம் விளையாட்டுக்கழக இளைஞர்களின் குறை நிறைகளையும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார். (க)

## இளையோருக்கான சதுரங்கப்போட்டிகள்

இலங்கை சதுரங்க சம்மேளனத்தால் நடத்தப்படும் தேசிய இளைஞர்களுக்கான சதுரங்கப் போட்டிக்கான தெரிவுப் போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி சனி, ஞாயிறு ஆகிய தினங்களும் தொடர்ந்து நடைபெறும்.

ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக நடத்தப்படும் இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு சமுகமளிக்க வேண்டும்.

பிற்பகல் 3 மணிக்கு பின்பு வருவோர் எக்காரணம் கொண்டும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். அனைவரும் தமக்குரிய சதுரங்க விளையாட்டு உபகரணங்கள் கொண்டு வருவது கட்டாயமான தாகும் என இலங்கை சதுரங்க சம்மேளன பிரதிநிதி த.அருணகிரிநாதன் தெரிவித்துள்ளார். (க)

## சர்ச்சையில் சிக்கிய பாகிஸ்தான் வீரர்

பாகிஸ்தான் அணியின் தொடக்க ஆட்டக்காரர் இமாம் உல் ஹக் பல பெண்களுடன் வட்ஸ் அப்பில் சட் செய்திருக்கும் புகைப்படங்கள் டுவிட்டரில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. கடந்த ஆண்டு இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி, பல பெண்களுடன் தொடர்பில் இருப்பதாக அவருடைய மனைவி ஹாசிம் ஜகான் பொலிஸாரிடம் புகார் கொடுத்திருந்தார்.


ஆனால் அதற்கு ஷமி தொடர்ந்து மறுப்பு தெரிவித்து வந்த நிலையில், இளம்பெண் ஒருவர் தனக்கு ஷமி மெசேஜ் செய்திருக்கும் புகைப்படத்தை தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார்.


இந்த வரிசையில் தற்போது பாகிஸ்தான் அணியின் தொடக்க ஆட்டக்காரரும் இளம்வீரருமான இமாம் உல் ஹக், சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

அவர் பல பெண்களை ஏமாற்றி வட்ஸ் அப்பில் பேசியிருக்கும் படங்களை, பெண் ஒருவர் தனனுடைய டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இவை அனைத்தும் தற் போது வைரலாக பரவி வருகின்றன.

இதனை பார்த்த இணையத் தளவாசிகள்இமாமை கேலி செய்து வருகின்றனர். (க)

# உலகச்சம்பியன் இங்கிலாந்திற்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்த அயர்லாந்து






லண்டனில்தொடங்கிய டெஸ்ட் போட்டியில்இங்கிலாந்து அணியை 85 ஓட்டங்களுக்குள் சுருட்டி அயர்லாந்து அதிர்ச்சி கொடுத்துள்ளது.

உலகக்கோப்பையை வென்ற இங்கிலாந்து அணி அடுத்த மாதம் ஆஷஸ் தொடரில் விளையாட உள்ளது. இந்த தொடருக்கு தயாராகும் வகையில் அயர்லாந்து அணியுடன் ஒரே ஒரு டெஸ்டில் இங்கிலாந்து ஆடுகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான இந்த டெஸ்ட் போட்டி லண்டனில் நேற்று முன்தினம் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. தொடக்க வீரர் ஜேசன் ராய்(5) அயர்லாந்தின் முர்தாக் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த டென்லி சிறிது நேரம் தாக்குப் பிடித்தார்.

ஆனால், மறுபுறம் வந்த வீரர்கள் அடுத்தடுத்து முர்தாக்கின் தாக்குதலுக்கு இரையாகினர். பேர்ஸ்டோ, மொயீன் அலி, வோக்ஸ் ஆகியோர் ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தனர். டென்லி 23 ஓட்டங்கள் எடுத்தார்.

கடைசி கட்டத்தில் சாம் குர்ரன்(18), ஸ்டோன்(19) ஆகியோர் மட்டுமே இரட்டை இலக்க ஓட்டங்களை எடுத்தனர். அயர்லாந்தின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் இங்கிலாந்து அணி 23.4 ஓவரில் 85 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அயர்லாந்து தரப்பில் டிம் முர்தாக் 5 விக்கெட்டுகளும், மார்க் அடைர் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

பின்னர் களமிறங்கிய அயர்லாந்து அணி 58.2 ஓவரில் 207 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அதிகபட்சமாக ஆண்ட்ரூ பால்பிரினி 55 ஓட்டங்களும் பவுல் ஸ்டெர்லிங் 36 ஓட்டங்களும் எடுத்தனர். இங்கிலாந்து தரப்பில் ஸ்டூவர்ட் பிராட், ஸ்டோன், சாம் குர்ரன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து, இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி தொடர்ந்து ஆடிவருகிறது. (க)

# முரளிதரனின் வாழ்க்கை வரலாறு படமாகிறது நடிகர் விஜய் சேதுபதி நாயகனாக நடிக்கிறார்






எனது கதாபாத்திரத்தில் நடிப்பது பெருமையாக உள்ளதாக, இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார் இலங்கை கிரிக்கெட்டின் ஜாம்பவான் வீரர் முத்தையா முரளிதரன்.

சர்வதேச அளவில் அதிக டெஸ்ட் விக்கெட்டுகள் எடுத்த வீரர் என்ற சாதனையை படைத்திருக்கிறார்.

அதேபோல் ஒரு நாள் போட்டிகளிலும் 534 விக்கெட்டுக்களை வீழ்த்தி முதலிடத்தில் உள்ளார்.

இந்நிலையில், முரளிதரனின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக உருவாக உள்ளதாகவும், நடிகர் விஜய் சேதுபதி அவரது கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளதாகவும் செய்தி வெளியாகியது.

இந்த படத்தினை ஶ்ரீபதி ரங்கசாமி என்பவர் இயக்குவதாக தற்போது கூறப்படுகிறது.

இதற்கிடையில், நடிகர் விஜய் சேதுபதி எனது கதாபாத்திரத்தில் நடிப்பது எனக்கு பெருமையாக இருக்கிறது என்று முத்தையா முரளிதரன் கூறியதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், அவர் 800 விக்கெட்டுகள் வீழ்த்தி சாதனை படைத்துள்ளதால், இந்த படத்திற்கு '800' என பெயரிடப்பட உள்ளதாகவும் கூறப்படுகிறது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## பயங்கரவாத தாக்குதல்...

காக அவரை தொடர்ச்சியாக தொடர்பு கொண்டார் எனவும் உள்துறை அமைச்சக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை மே 2015 முதல் 2016 ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் 36 வயதுடைய ஹாஜா நஜ்முதீன் என்பவர் மூன்று தடவைகள் இலங்கை சென்றார் எனவும் சிங்கப்பூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு குறித்த நபரே சஹ ரானின் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பிற்கு நிதியுதவி செய்தார் எனவும் அவர் 2013 இல் ஐ.எஸ். அமைப்பினால் ஈர்க்கப்பட்டு அந்த அமைப்பின் கொள்கைகளில் தன்னை ஈடுபடுத்தினார் எனவும் சிங்கப்பூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் அவர் தீவிரவாத மயப் படுத்தப்பட்டிருந்தார். சிரியாவிற்கு சென்று ஐ.எஸ். அமைப்புடன் இணையும் நோக்கத்திலிருந்தார் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கைது செய்யப்பட்டவர்களில் மற்றுமொருவர் சிங்கப்பூரை சேர்ந்த சுடர்மன் சமைக்கின் (வயது 47) எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-3)

## தகவல் சரியாக...

பிலான கடிதம் கிடைக்கப்பட்ட பின்னர் இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலய அதிகாரி ஒருவருடன் கலந்துரையாடிய தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் பாதுகாப்பிற்கு பொறுப்பாக விசேட அதிரடிப்படையினர் இருந்த காரணத்தினாலேயே இந்த நடவடிக்கையை எடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் உதவியை நாடாத காரணத்தினால் தான் கொழும்பு பிரதான பள்ளிவாசல் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் உதவி வேண்டுமாயின் பொலிஸ் மா அதிபர் அல்லது பிரதி பொலிஸ்மா அதிபர் வேண்டுகோள் விடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

தாக்குதல்களை தடுக்கக்கூடியளவு தகவல்கள் கிடைத்திருந்தும் ஒருங்கிணைப்புக் குறைபாடு காரணமாக, தாக்குதலை தடுக்க முடியவில்லையென்றும் தெரிவித்தார். (ம-3)

## பழமையான...

நள்ளிரவு இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் ஆலய நிர்வாகத்தினரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மூளாய் வீதி ஸ்ரீஞான வைரவர் ஆலயம் மிக நீண்டகாலமாக அப்பகுதி மக்களால் வழிபடப்பட்டு வரும் கோயிலாகும்.

பெருமளவு மக்களால் வழிபடப்பட்டு வரும் கோயிலில் இவ்வாறான துரதிர்ஷ்டவசமான சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் கோயிலின் தற்போதைய நிலைமைகளை பார்வையிட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ம-3)

## இஸ்லாமிய...

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்கான பாராளுமன்ற தெரிவுக் குழு முன்னிலையில் நேற்று சாட்சி வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டில் அரையாண்டில் ஐ.எஸ் ஐ.எஸ் தீவிரவாதிகளுடன் இணைந்து கொள்ள 5 குடும்பங்களை சேர்ந்த 34 பேர் சிரியா சென்றதாக தகவல்கள் கிடைத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தகவல்கள் தொடர்பில் அடிக்கடி பாதுகாப்பு சபை கூட்டத்தின் போது கலந்துரையாடியதாகவும் அதன்போது எடுக்கப்பட வேண்டிய சில நடவடிக்கைகளை முன்னெடுத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் அரசாங்க புலனாய்வு பிரிவு தனது கட்டுப்பாட்டில் இல்லாமல் இருந்தாலும் அதன் பணிப்பாளருக்கு இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பில் தான் ஆலோசனை வழங்கியதாகவும் அது தேசிய தேவை என தான் கருத்தில் கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## ஈஸ்டர் தாக்குதல் குறித்து
# என்னிடம் தனியாக விசாரிக்க வேண்டாம் – இலங்ககோன்



(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதல் குறித்து ஆராய ஜனாதிபதி நியமித்த ஆணைக் குழு காரணிகளை விசாரிக்க வேண்டும் என்றால் ஆணைக் குழு வின் ஏனைய இருவரையும் வரவழைத்து ஒன்றாகவே விசாரணை நடத்துங்கள். என்னிடம் தனியாக விசாரணை நடத்த வேண்டாம்என முன்னாள்பொலிஸ்மா அதிபரும் ஈஸ்டர் தாக்குதல் குறித்து ஆராய ஜனாதிபதி நியமித்த ஆணைக்குழுவின் தலைவருமான என்.கே.இலங்ககோன் பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு முன்னிலையில் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் குறித்து விசாரணைகளை நடத்தி பாராளுமன்றத்திற்கு அறிக்கை வழங்க நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளிக்க வரவழைக்கப்பட்ட போதே முன்னாள் பொலிஸ்மா அதிபரும் ஈஸ்டர் தாக்குதல் குறித்து ஆராய ஜனாதிபதி நியமித்த ஆணைக் குழுவின் தலைவருமான என்.கே. இலங்ககோன் இதனை குறிப்பிட்டார்.

இவ்வாறான தாக்குதல் நடத்தப்போவதாக புலனாய்வு தகவல் கிடைத்த முதல் தடவை இதுவாகே இருந்திருக்கும். எனக்கு தெரிய வேறு ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறான புலனாய்வு தகவல் வந்ததில்லை. எனவே இத்னை அதிகாரிகள் கருத்தில் கொண்டிருக்க வேண்டும்.

அத்துடன் இது உடனடி தாக்குதல் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகவே அதற்கான கவனத்தை செலுத்தியிருக்க வேண்டும். இவ்வாறான காரணிகளை பார்க்கையில் இந்த தகவல் குறித்து அதிக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

அதே போல் எங்கு தாக்குதல் நடத்தப்படும் என உறுதியாக கூறப்படாத நிலையில் சகல அதிகாரிகளும் க்வனமாக செயற்பட்டிருக்க வேண்டும் என்றார். (ம-3)

## இலங்கை அரசுக்கு சர்வதேசம்...

அவர் மேலும் தெரிவிக்கையில். யுத்தம் முடிந்து தற்போது 10 வருடங்கள் கடந்தபோதும் தமிழருக்கு ஒரு அரசியல் தீர்வு கிடைக்கவில்லை. தற்போது தமிழர்கள் இரண்டாந்தர பிரஜைகளாக நடத்தப்படுகின்றனர்.

சர்வதேச சமூகம் ஒரு பார்வையாளராக மட்டும் இருந்துவிட முடியாது. சர்வதேச சமூகம் அரசியல், இராஜதந்திர பொருளாதார ரீதியாக இலங்கை அரசுக்கு அழுத்தத்தை வழங்க வேண்டும். யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர சர்வதேச சமூகம் உதவியது. இதனால் தமிழ் மக்களே அதிகம் பாதிக்கப்பட்டனர்.

தமிழருக்கு பாரதூரமான அநீதி இழைக்கப்பட்டுள்ளது. சுதந்திரத்திற்கு முன்னர் தமிழர்கள் பிரிவினையை விரும்பியிருக்கவில்லை. நாட்டை பல வழிகளில் பிரிப்பது நாட்டுக்கோ தமிழருக்கோ நன்மையில்லை. அதுதான் சமஷ்டிக் கட்சியின் கொள்கை. ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரப்பகிர்வே தமிழர்களின் விருப்பமாகும்.

நாடு சக்திமிக்க ஒன்றாக மாற வேண்டுமானால் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். சமூக, கலாசார உரிமைகளை கொண்டுள்ள தமிழ் மக்களுக்கு உள்ள சுயநிர்ணய உரிமையை உங்களால் மறுக்க முடியுமா? 1956 ஆம் ஆண்டில் இருந்து வடகிழக்கு மக்கள் மாற்றத்திற்கு வாக்களித்தனர். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.

இந்த அரசு பொறுப்புடன்செயற்பட வேண்டும். சிங்கள பௌத்த மயமாக்கல் வடக்கு கிழக்கில் தீவிரமாக முன்னெடுக்கப்படுவதால் தான் தமிழர் பிரச்சினை தீர்வு தாமதமாகிறதா என்று தமிழ் மக்களும் நாங்களும் அச்சம் கொண்டுள்ளோம். இது சூட்சுமமாக முன்னெடுக்கப்படுகிறது.

எல்.எல்.ஆர்.சி அறிக்கையின் சிபாரிசுகளை நிறைவேற்றுங்கள். சர்வதேச சமூகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் விட்டு மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல மைப்பை வைத்துக் கொண்டு நீங்கள் ஆட்சி செய்தால் அது தவறு.

அப்படிச் செய்தால் நீங்கள் தோல்வியடைந்த அரசாக, செல்லுபடியற்ற அரசாக ஆகிவிடுவீர்கள். எனவே உச்சபட்ச அதிகாரப்பகிர்வு தமிழர்களுக்கு வழங்கப்படவேண்டும். எமது மக்களை நீங்கள் தொடர்ந்து ஏமாற்ற முடியாது.

தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையை கோருவதற்கான அனைத்து தகுதியுடையவர்களாக இருக்கின்றனர். இருந்தாலும் நாம் அவ்வாறான தீர்மானத்திற்கு செல்லவில்லை என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கின்றேன். எனவே அனைத்து மக்களுடைய அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் செயற்படுவீர்கள் என எண்ணுகின்றேன் என கூறியுள்ளார். (ம-3)

### தேசிய பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் வகையில்
# அதிகாரப்பகிர்வுக்கான சந்தர்ப்பத்தை கூட்டமைப்பே இல்லாமலாக்கினர்
### பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா

(கொழும்பு)

தேசிய பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் வகையில் அரசியலமைப்பில் அதிகாரப்பகிர்வை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் சம்மதித்துக்கொள்ள இருந்த சந்தர்ப்பத்தை சுமந்திரனே இல்லாமலாக்கினார் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா அதற்கான பொறுப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதிய அரசியலமைப்பு தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு கொண்டு வந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிடார்.

புதிய அரசியலமைப்பு தயாரிப்பு நடவடிக்கையில் அதிகார பகிர்வு, தேர்தல் முறை திருத்தம் போன்றவற்றுக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அங்கீகரித்துக்கொள்ள முற்பட்டபோது, நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாமலாக்கி மக்கள் கருத்துக்கணிப்புடன் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்என ஐக்கிய தேசிய கட்சியின் அபிலாஷையை சுமந்திரன் நிறைவேற்ற மேற்கொண்ட முயற்சியால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இல்லாமல் போனது.

அதனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சம்மதித்துக் கொள்ள இருந்த சந்தர்ப்பத்தை இல்லாமலாக்கிக்கொண்ட பொறுப்பை தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறான தொரு சந்தர்ப்பம் இனி கிடைப்பது சந்தேகம். ஏனெனில் இந்த இரண்டு கட்சிகளும் இனி ஒருபோதும் இணைந்து செயற்படப்போவதில்லை என்றும் இதன்போது கூறினார். (ம-3)

# முச்சக்கரவண்டி விபத்து மூன்று பேர் படுகாயம்
### தாளையடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கர வண்டி வீதியோரமாக நின்ற பனை மரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்து வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று வியாழக் கிழமைதாளையடிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இயக்கச்சியில் இருந்து பருத்தித் துறை நோக்கி சென்று கொண்டிருந்த முச்சக்கரவண்டிவேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக நின்ற பனைமரத்துடன் மோதுண்டதில் பருத்தித்துறையைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-3,10)

## கொவிசெத

திகதி 2019.07.25
சீட்டிழுப்பு இலக்கம் 2189
ஆங்கில எழுத்து D
வெல்லப்பட்ட இலக்கங்கள் 34 35 54 61
தேசிய லொத்தர் சபை

## மஹஜன சம்பத

திகதி 2019/07/25
சீட்டிழுப்பு இலக்கம் 3967
ஆங்கில எழுத்து X
வெல்லப்பட்ட இலக்கங்கள் 1 9 4 9 8 9
தேசிய லொத்தர் சபை

## வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1553
திகதி 2019/07/25
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 13 30 44 59
தேசிய லொத்தர் சபை

## நீரோகா

திகதி 2019/07/25
சீட்டிழுப்பு இலக்கம் 576
லக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 09 30 66 70
தேசிய லொத்தர் சபை

## ஆனால் அடுத்த தேர்தலில் சுமந்...

உறுப்பினர் டிலான் பெரேரா.

நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற, ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள தமிழ் அரசு கட்சி, புளொட், ரெலோ என்பன கொள்கைரீதியாக செயற்படுபவர்கள்.

மாவை சேனாதிராசா, சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் எல்லோரும் அதன்படிதான் செயற்படுபவர்கள்.

ஆனால், அடுத்த தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பை எப்படியும் ஐக்கிய தேசியக்கட்சியுடன் சுமந்திரன் இணைத்து விடுவார் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட இரா.சம்பந்தன், டிலான் பெரேரா இப்படி பேசக்கூடாது என்றார். இனப்பிரச்சினை தீர்வு விவகாரத்தில் முற்போக்காக சிந்திக்கும் ஒருவரான டிலான் இப்படி பேசக்கூடாதென சம்பந்தன் கூறினார்.

எனினும், தான் கூறிய கருத்து சரிதான் என டிலான் குறிப்பிட்டார். (ம-3)

## தெரிவுக்குழு...

சர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் அழைக்கப்படவுள்ளனர்.

அடுத்த மாதம் இறுதியில் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், இதற்கான இறுதிக்கட்ட சாட்சியங்கள் பதிவு செய்யும் நடவடிக்கை துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஷாபி அகமட்....

நீதிபதி உத்தரவு வழங்குவது நீண்ட தாமதமானது. மாலை 5.45 மணிக்கு நீதிபதி தீர்ப்பளிப்பதாக குறிப்பிட்டிருந்தாலும், நீண்ட தாமதத்தின் பின்னர் பிணை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது.

ஷாபி சட்டவிரோத கருத்தடை சிகிச்சை மேற்கொண்டார் என்பதற்கு எந்த ஆதாரமுமில்லையென சட்டமா அதிபர் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தார்.

இரண்டரை இலட்சம் ரூபாய் பிணை, 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான நான்கு சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டார். ஓகஸ்ட் 9ம் திகதி வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-3)

## தகவல் சரியாக பரிமாற்ற...

எம்.ஆர்.லத்தீப் தெரிவித்துள்ளார். தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்திற்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரே தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சி வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர் சில முக்கியமான புலனாய்வு தகவல்கள் தொடர்பில் தனக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். புலனாய்வு தகவல் தொடர் 23

## அரசியல் தீர்வு விடயத்தில் தமிழினம்...

கூட்டமைப்பினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை தொடர்பான ஒத்திவைப்பு வேளை விவாதம் நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றில் இடம்பெற்றது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு பொறிக்கப்பட்டது. அதற்கமைய அதற்கான நகர்வுகளையும் கூட்டமைப்பு முன்னெடுத்திருந்தது. எனினும் அந்த நகர்வில் தொய்வுகள் ஏற்படுத்தப்பட்டன.

இரண்டு கட்சிகள் ஒன்றாக இணைந்து ஆட்சியமைத்தபோது, அரசியல் தீர்வு குறித்த பேச்சுவார்த்தைக்கான செயற்பாடுகள் தொடச்சியாக முன்னெடுக்கப்பட்டன. ஆனால், ஜனாதிபதியின் செயற்பாடு காரணமாக அரசாங்கம் மாற்றியமைக்கப்பட்டு, புதிய அரசு உருவாக்கப்பட்டது.

இதனையடுத்து தற்போது அரசியல் தீர்வு விடயத்தில் ஜனாதிபதி ஒருபக்கம், பிரதமர் ஒரு பக்கம், எதிர்க்கட்சித் தலைவர் ஒரு பக்கமென மூன்று பிரிவுகளாக எமது இனத்தை பந்தாடும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இதன் காரணமாக தொடர்ந்தும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (ம-3)

## குளவி கொட்டியதில் முதியவர்...

ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றது. இதில் ஊரெழுவைச் சேர்ந்த ஐயாத்துரை அருந்தவராஜா (வயது-63) என்ற முதியவரே உயிரிழந்தார்.

சம்பவத்தையடுத்து ஆலயத்திலிருந்த பக்தர்களிடையே குழப்ப நிலை காணப்பட்டது.

ஊரெழு பர்வதவர்த்தனி அம்மன் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவில் நேற்று மூன்றாம் திருவிழா நடைபெற்றது. குளவிக்கூடு கலைந்ததால் அங்கு கூடியிருந்த பக்தர்கள் நாலா திசையும் ஓடினர். குளவி மூன்று பேருக்கு மேற்பட்டோருக்கு கொட்டியது.

உடனடியாக அவசர அம்புலன்ஸ் சேவைக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த அம்புலன்ஸ் வண்டிச் சாரதியையும் முதலுதவி உதவியாளரையும் குளவி துரத்தியது. மேலும் ஒரு இளைஞனை மோட்டார் சைக்கிளில் சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றருக்கு குளவி துரத்திச்சென்றது.

சம்பவ இடத்துக்கு வந்த கோப்பாய் பொலிஸார் உடனடியாகவே அங்கிருந்து வெளியேறினர். அதன் பின்னர் யாழ்ப்பாணம் மாநகர சபை தீயணைப்பு பிரிவுக்கு அறிவிக்கப்பட்டு குளவிக்கூடு கலைக்கப்பட்டது. (ம-10,60,78,101)

## பிரித்தானியா...

வித்துள்ளார்.

பொரிஸ் ஜோன்சனின் தலைமையின் கீழ் இரு நாட்டின் உறவுகளை வலுப்படுத்த இலங்கை ஆர்வமாக இருக்கின்றது என பிரதமர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக புதிய பிரதமருக்கு எழுதிய கடிதத்தில், பிரித்தானியாவும் இலங்கையும் வரலாற்று சிறப்பு மிக்க உறவுகளை கொண்டுள்ளது.

இதேவேளை பிரித்தானியா இலங்கைக்கு பல துறைகளில் ஒத்துழைப்பு வழங்குவதுடன் ஒரு வலுவான பொருளாதார பங்காளியாக இருந்து வருகிறது என அதில் தெரிவித்துள்ளார். (ம-3)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623

**Advance in Auto CAD**

Personal–Group–Visiting Classes

CAD Designers 2D&3D

Exceeding Expectations

Lecturer By:K.N.Mugunthan(D/A)

Cert.in Auto CAD (Software 2D-3D) University of Peradeniya

Cert.in Auto CAD (Advance 3D-Modelling) University of Moratuwa

Jaffna-Kilinochchi Vavniya-Clombo

Link: 071-8617972 077-5116320

**A/L - வரலாறு - 2019**

மாபெரும் கருத்தரங்கு

இடம் :- D.M.I கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம்.

காலம் :- 27.07.2019 (சனிக்கிழமை) 28.07.2019 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் :- 7.30 am - 2.30 pm

வளவாளர்கள்

M.பத்மன் M.A (History)

S.சுஜிகரன் B.A (History)

(C-7102)

100% எதிர்பார்க்கை வினாக்கள், விடைகளுடன்.

**SLAS**

Open / Limited

போட்டிப் பரீட்சைகளுக்கான தொடர் வகுப்புக்கள் உங்கள் வசதிக்கேற்ப மூன்று பிரிவுகளாக இவ்வாரம் ஆரம்பம்

பிரிவு - I

பிரதி சனி 9.00 – 3.30

பிரிவு - II

பிரதி ஞாயிறு 9.00 – 3.30

பிரிவு - III

திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி – பி.ப. 5.00 – 7.00

தொடர்புகளுக்கு : 0766883394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

**வளவாளர் தேவை**

கிளிநொச்சியில் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ள ஸ்மாட் கைத்தொலைபேசி திருத்தும் பயிற்சி நெறிக்கு வளவாளர்தேவை. Software, Hardware தொடர்பான பூரண அறிவு உள்ளவர் தேவை. கவர்ச்சிகரமான நாளாந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 071 858 4886

**துரித தபால்கள் பொதிகள் சேவை**

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு UK - 600/= Germaney - 700/= France - 700/=

திருமுருகன் கொம்நெற்

321, K.K.S.Road, Jaffna.

கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.

0777 554 528

(C-7067)

**கடை வாடகைக்கு விடப்படும்**

மந்திகை வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான மேல்மாடிக் கட்டடம் வாடகைக்கு உள்ளது. விண்ணப்பிக்க விரும்புவர்கள் 05.08.2019ஆம் திகதிக்கு முன்னர் கீழ்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

- விண்ணப்பங்களை அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

தலைவர் : புலோலி ப.நோ.கூ.சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

**திருமணம் முடித்து லண்டன் செல்பவர்களுக்கான LIFESKILLS A1 ஆங்கில வகுப்புக்கள்.**

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 27/07/2019 சனிக்கிழமை 10AM



WEC கல்லூரி 377,சங்கத்தானை, சாவகச்சேரி. (C-7100)

WEC கல்லூரி புதிய உயர்கல்வி வளாகம் ஆரியகுளம், யாழ்ப்பாணம்

MD: 0779265447 TP:0217200989

**விற்பனைக்கு**

தரமான செங்கல் விற்பனைக்கு

077 025 6640

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg

கனடா - 950 /=Kg

ஜேர்மனி - 650 /=Kg

நெதர்லாந்து- 700 /=Kg

இத்தாலி- 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

**உடனடி வேலைவாய்ப்பு**

இலங்கையின் முன்னணி நிறுவனத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் உள்ள கிளைகளுக்கான நிரந்தர வேலைவாய்ப்பு.

ஆகக் குறைந்த தகைமை O/L

- கவர்ச்சிகரமான சம்பளம்
- வயது எல்லை 18 - 30
- தங்குமிட வசதியுண்டு

தொடர்புகளுக்கு : 076 678 1042 / 076 902 5770

**FLC FRENCH LANGUAGE CENTRE**

பிரெஞ்ச்

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.

V. ஜெகன் (Trained in France- 2007)

(C-7055)

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 27.07.2019 சனி காலை 10 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 29.07.19 3.30 pm

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1

IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

**பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு**



விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

விசா சேவைகள் V2 TRAVELS

சம்பளம் -15'000/- (C-7017)

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0768226243 v2vacancies@gmail.com


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.